# யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி




# தமிழ் ஆரம்

ஆரம் - 05

தமிழ் மன்றம் - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J/JAFFNA HINDU LADIES COLLEGE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஆரம்

## இதழ்–05

**யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

**2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!"



**மனோன்மணீயம்**
**பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!



மகாகவி சுப்ரமணிய பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக்கீதம்

**இராகம்:– மோகனம்**
**தாளம்:– ஆதி**

திரு மிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி எங்கள்
பெருவருமிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடும் கல்லூரி உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி– உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடும் கல்லூரி – உயர்
சிந்தை வளம் பெற மெய்ப்பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி – வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவை
சுரந்திடுங் கல்லூரி – உனை
வந்தனை செய்து பைந்தமிழ்மாலை
வாழ்த்தொடு சூடோமோ – உனை
வந்தேமாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி – ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி – இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

கலைமகள் உலகக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி – என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி – நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென்றேத்த
நிலைத்திடுங் கல்லூரி – உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங்குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


» ஆசியுரை ix
» அதிபரின் வாழ்த்துச்செய்தி x
» வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி xi
» கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி xii
» உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி xiii
» மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச்செய்தி xiv
» மன்றத் தலைவரின் மனப் பதிவுகள் xv
» இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து xvi
» செயலாளரின் நன்னயம் xvii
» யாழ் இந்து மகளிர் கல்லூரி தமிழ் மன்றம் - 2018 xviii
» தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் - 2018 xix

✍ ஆக்கங்கள்

01. கல்லூரித்தாய் 01
02. ஈழம் எங்கள் தாயகம் 02
03. தமிழ் ஆரமே வாழி 03
04. அம்மா 03
05. உழவன் வாழ்க 04
06. கவிந்தமிழ் 04
07. ஒலிக்கட்டும் முரசு 05
08. இப்படிக்கு நான் பிச்சைக்காரன் 06
09. விழித்திடு தவிர்த்திடு 06
10. இலக்கியம் தேடு 07
11. எங்கள் பாடசாலை 08
12. புத்தகம் பேசுகிறது 09
13. மௌனம் தேடிய வார்த்தைகள் 11
14. குரு பக்தி 12
15. இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள் 14
16. ஆவுரோஞ்சிக்கல் 15
17. ஏ.பி.ஜே அப்துல்கலாம் 16
18. வாழ்க்கைத் தத்துவம் 17
19. சிந்தனைச் சிதறல்கள் 17




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ஆர்தர்.சி.கிளார்க் 18
21. உன்னை உணர்வாயா பெண்ணே 20
22. சிலப்பதிகாரம் ஒரு குடிமக்கள் காப்பியம் 22
23. பெண்களைப் பாதுகாப்பதில் குடும்பத்தினதும் சமூகத்தினதும் பங்கு 26
24. வியத்தகு விஞ்ஞானம் 29
25. இலங்கையில் இசைக்கலையின் வளர்ச்சி 32
26. சமய நலம் பேணுவோம் 35
27. சங்க காலம் தந்த கடையெழு வள்ளல்கள் 37
28. செய்யுளை மனனம் செய்வது எப்படி 40
29. அன்பினால் அகிலத்தை வெல்வோம் 42
30. தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள் 43
31. கூட்டுறவு மூலம் இயற்கைச் சூழலைப் பாதுகாப்போம் 46
32. நான் நயந்த சில்லையூர் செல்வராஜன் கவிதை 48
33. தா-வரம் 51
34. கல்வியின் சிறப்பு 53
35. பேச்சுக்கலையை வளர்ப்போம் 54
36. செந்தமிழும் பழகுதமிழும் 56
37. வெற்றிப்படிகட்டு 59
38. அற்றைத்திங்கள் 62
39. திருவாதவூரடிகள் புராணத்தில் திணைமயக்கம் 67
40. திரைப்படப் பாடல்களில் அணிச்சிறப்புகள் 71
41. விடியலைத்தேடி 78
42. சிறகிழந்த பறவை 81
43. உயிர்ப்பின் கணங்கள் 85
44. அன்பான ஆசிரியரே ! 89
45. எமது இதயம் நிறைந்த நன்றி உரித்தாகட்டும் 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி



யாழ் இந்து மகளிர் கல்லூரி 75 வருடங்கள் நீண்ட தொரு கல்விப் பாரம்பரியத்தையும், சைவசமயப் பாரம்பரியத்தையும் கொண்டு யாழ் மாவட்டத்திலேயே ஒரு தனித்துவமான பெண்கள் கல்லூரியாகச் சிறப்புற்று விளங்குகிறது. எமது கல்லூரியின் தமிழ் மன்றத்தினால் வருடாந்தம் வெளிவரும் "தமிழ் ஆரம்" சஞ்சிகைக்கு ஆசி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மாணவர்களின் மொழித்திறன் ஆற்றல், ஆக்கத்திறன் வெளிப்பாடுகள், எழுத்தாற்றல் திறன் வெளிப்பாடு போன்ற திறன்களை வெளிப்படுத்தும் ஊடகம் சஞ்சிகை தான்.

படைப்பாற்றல் மிகச்சிறந்த ஆளுமை ஆகும். அந்த வகையில் சிறந்த ஆற்றல் வெளிப்பாட்டினை எமது "தமிழ் ஆரம்" சஞ்சிகை கொண்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும். இன்றுள்ள நெருக்கடியான வேளையில் மாணவர்களது ஆக்கங்களைத் தாங்கி இம்மலர் வெளிவருவது போற்றுதற்குரியது. இதுபோல வருடாவருடம் இம்மலர் வெளிவந்து நல்ல பல எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும். அதற்கு பாடசாலையில் குடி கொண்டிருக்கும் நடுத்தோட்ட இராஜ வரோதயப் பிள்ளையார் ஆசி புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**திரு.பா.நகுலேஸ்வரக்குருக்கள்,**
ஆலயப் பிரதம குரு,
இராஜ வரோதய நடுத்தோட்டப்
பிள்ளையார் ஆலயம்,
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத் தோங்கும் எமது கல்லூரியின் தமிழ் மன்றத்தினரால் வெளியீடு செய்யப்படுகின்ற "தமிழ் ஆரம்" ஐந்தாவது இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்லூரியின் பண்புசார் விருத்தி என்பது கல்விப் பெறுபேறுகள், மாணவர்களின் ஒழுக்கம் என்பவற்றுடன் மாணவர்களின் ஆற்றல்கள், ஆளுமைப் பண்புகள் என்பவற்றை வெளிக்கொணர்தலால் ஏற்படுகிறது. அந்தவகையில் எமது கல்லூரியில் பல்வேறு மன்றங்கள், கழகங்கள் என்பன செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ் மன்றத்தினர் களம்பல அமைத்து நாடகம், விவாதம், பேச்சு, கவிதை என பலதுறைகளிலும் மாணவர்கள் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது. இப்பணியின் ஒரு பகுதியாக "தமிழ் ஆரம்" சஞ்சிகையை இன்று வெளியிடுகின்றனர்.

சஞ்சிகை வெளியீட்டில் முன்னின்றுழைத்த மாணவர்களுக்கும், மன்றப் பொறுப்பாசிரியருக்கும், துறைசார்ந்த ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களிலும் "தமிழ் ஆரம்" மலர்ந்து மணம்வீச எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி மி.விமலநாதன்,
அதிபர்,
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தால் வருடா வருடம் வெளியிடப்படும் "தமிழ்ஆரம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ் நகரில் நிமிர்ந்து நிற்கும் பாடசாலைகளின் வரிசையில் இந்து மகளிர் கல்லூரிக்குத் தனியிடமுண்டு. கல்வி, கலை, சமய பண்பாடு முதலானவற்றில் சிறந்து விளங்கி, மாணவர்களின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றி வருகின்றமை மிகவும் பெருமைக்குரியதே.

பாடசாலைகள் கல்விக்கூடாக மாணவர்களின் சிந்தனைகளுக்கு வடிவம் கொடுக்கின்றன. அந்த வகையில் நாளைய தலைமுறையினருக்கு எமது மொழிப் பாரம்பரியத்தை கொண்டு செல்வதில் "தமிழ் ஆரம்" சஞ்சிகையும் சிறந்த பணியைச் செய்து வருகின்றது.

பரந்த சிந்தனையும், தேடல் நிறைந்த படைப்பிலக்கியங்களும் மனித சமூகத்தை மேம்படுத்தி, சமூக ஒழுங்கை பேணுவதில் பெரிதும் துணை நிற்பவையாகும். இதன் அடிப்படையில் எமது மொழிப்பாரம்பரியங்களூடாக தமிழ் மொழியின் ஆளுமைகளை மாணவர்கள் பெற்று, அதன்வழி பாடசாலையில் கல்வி இலக்குகளை அடைவதற்கு, தமிழ் ஆரம் அவர்களுக்கு சிறந்த ஊக்கத்தை வழங்கி வருகின்றமையை பாராட்டுவதோடு, தமிழ் மன்றத்தின் செயற்பாடுகள் மேலும் சிறப்புற்றிருக்கவும், செயலூக்கம் பெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சு. சுந்தரசிவம்,**
**வலயக்கல்விப்பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



யாழ் இந்துமகளிர் கல்லூரியின் தமிழ்மன்ற வெளியீடாகிய "தமிழ் ஆரம்" சஞ்சிகையை வரவேற்பதில் உவகையுறு கின்றேன். இம்மலர் ஆண்டு தோறும் மலர்ந்து மாணவிகளின் திறன்களை வெளிக்கொணர்வது பாராட்டுக்குரியது.

யாழ். இந்துமகளிர் கல்லூரி வடபுலத்து பெண்கள் கல்விப்பாரம்பரியத்தின் தனித்துவ அடையாளமாகும். கல்வியுடன் பண்பாட்டையும், பெண்ணியல் சிந்தனைகளையும் மாணவிகள் உள்ளத்தில் விதைத்து ஆரோக்கியமான தமிழ் பெண்ணியத்தைப் பேணுவதில் கல்லூரியின் பங்களிப்புக் காத்திரமானது.

இந்து மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறை, கல்லூரியின் சாதனைகள் பலவற்றின் விளைநிலமாக விளங்குகின்றது. தமிழ்த்திறன், கலைத்திறன் போட்டிகளில் கல்லூரி பெற்ற வெற்றிகள் தமிழ்த்துறையின் முயற்சிக்கான சமர்ப்பணமே. அந்தவகையில் தமிழ் ஆரமும் மாணவிகளின் ஆளுமை,ஆற்றல் ஆகியவற்றை மேம்படுத்த உதவிட வாழ்த்துகின்றேன்.

"தமிழ் ஆரம்" புலர உறுதுணையாகிய அதிபர், ஆசிரியர்கள், மாணவிகளுக்கு என் பாராட்டுக்கள். இம்மலரில் ஆக்கம் புனைந்தோர் இலக்கியத்தடாகத்தில் மேலும் உயர்வு பெற இறையாசி நாடி வாழ்த்துகின்றேன்.

எப்.எக்ஸ்.அன்ரன்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தினரால் வெளியிடப்படும் "தமிழ் ஆரம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஈழத் திருநாட்டின் தமிழ்மரபிற்கு அமையவும் சைவ பாரம்பரிய பண்பாடுகளோடும் மாணவர்களின் பன்முக ஆளுமைகளை வெளிக் கொண்டுவருவதில் யாழ் இந்து மகளிர் கல்லூரிக்குத் தனிச்சிறப்புண்டு. எதிர்காலத்தில் நம் இனத்தின் நிலைபேறான வாழ்வுக்கு அடிப்படையாக அமைகின்ற மொழிப்பண்பாட்டினை வளப்படுத்துவதில் இக்கல்லூரி தொடர்ந்து முதன்மை பெற்றிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

"மொழி" சிந்தனைப் பரிமாற்றத்தின் அடையாளம். மொழியில் ஆளுமை பெற்றிருப்பது தமது சிந்தனைகளில் தெளிவும் வலுவும் பெற்றிருப்பதனை உறுதிப்படுத்துகின்றன. இதன் வழியில் " தமிழ் மன்றம்" மிகச்சிறப்பான செயற்பாடுகளை ஒழுங்கமைத்து மாணவர்களின் படைப்பாற்றலையும் ஆசிரியர்களின் ஆளுமைகளையும் செழுமைப்படுத்துகின்றது. இதனைப் பாராட்டுகிறேன்.

பயன்தரும் வகையிலான கருத்துப்பரிமாற்றத்திற்கு மொழித்தேர்ச்சி மிகவும் அடிப்படையானது. தமிழ் மொழியினை வாழ்விற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்குரிய திறன்களை பாடசாலை மட்டத்தில் மேம்படுத்த எடுத்த முயற்சிகளுக்கு "தமிழ் ஆரம்" சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்நல்முயற்சிக்கு என்றும் ஆக்கமும் ஊக்கமும் வழங்குகின்ற தமிழ்மன்றத்தினருக்கும், பாடசாலை சமூகத்திற்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, மென்மேலும் "தமிழ்ஆரம்" பொலிவுபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. பூபாலசிங்கம்,
உதவிக்கல்விப்பணிப்பாளர் (தமிழ்),
யாழ்ப்பாணக் கல்விவலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியர் உள்ளத்திலிருந்து...



"கல்வியானது உடலிலும் ஆன்மாவிலும் எல்லா நன்மைகளையும் விருத்தியாக்குவதுடன், மனிதனது ஆற்றல் முழுவதையும் விருத்தியாக்க வேண்டும்." என்பது பிளோட்டோவின் கல்விச் சிந்தனை யாகும். மனிதனிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக் கொணர்வதற்கு அத்திபாரமாக அமையுமிடம் பாட சாலை ஆகும். மாணவர்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல் களினுள் படைப்பாற்றற்றிறன் முதனிலை வகிக்கின்றது. உள்ளக்கிடக்கையில் இருக்கும் எண்ணங்களைக் கொட்டிக் கொள்வதற்கு ஏற்ற களமாகப் படைப்பாற்றற் களம் அமைகின்றது. ஆயுதம் ஏந்தி சாதிக்க முடியாத பல சாதனைகளை "பேனாமை" சாதித்துள்ளது என்பதனை எவரும் மறுக்க முடியாது. "தாய் நாட்டின் விடுதலை தொடங்கி தாவி விழும் நதியருகே எழுந்த காதல் வரை" எழுத்தாற்றல் ஊடுருவி, சிகரம் தொட்டுள்ளது என்பது கண்கூடு.

எம் கல்லூரி அன்னை, நிறைந்த மொட்டுக்களைத் தன்னுள்ளே தாங்கி யுள்ளாள். அவை ஒவ்வொன்றும் விரிந்து, மணம் பரப்ப வேண்டும் என்பது கல் லூரித் தாயின் அவா. அதை நிறைவு செய்யும் வகையில் ஒரு புள்ளியாக மன்றங் களினால் வெளியிடப்படும் சஞ்சிகைகள் அமைந்து கொள்கின்றன. அவற்றுள் எமது கல்லூரித் தமிழ் மன்றம் வெளியிடும் "தமிழ் ஆரம்" சஞ்சிகையும் ஒன்றாகும்.இறைவன் ஆசியினால் தமிழ் ஆரம் சஞ்சிகையின் ஐந்தாவது வருடாந்த இதழ் உங்கள் கையில் தவிழ்கிறது. இந்த ஆரத்தின் பூக்களாக மாணவர்களினது உள்ளங்களில் இருந்து மிதந்து வந்த கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், துணுக்குகள் முதலான பல்துறை அம்சங்களும், ஆசிரியர்களினதும், கல்வியிய லாளர்களினதும் பன்முகப் பரிமாணமுடைய ஆக்கங்களும் விளங்குகின்றன.

இவை தவிர கல்லூரியின் மரபுவழிப்பட்ட அம்சங்களும் இணைந்து, தமிழ் ஆரம் சஞ்சிகையைப் புதுப்பொலிவு பெறச் செய்கின்றன. மாணவர்களது இடை விடாத கற்றலுக்கு மத்தியிலும், குறுகிய காலத்தினுள் இம் மலரை இயன்றளவு சிறப்பான முறையில் ஊக்கத்துடன் வெளியிடுவதனையிட்டு மகிழ்வடைகின்றேன். தமிழ் ஆரம் ஒளி வீசுவதற்கு அதிபர், பிரதி அதிபர், உப அதிபர்கள், ஆசிரிய குழாத் தினர், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஆகிய அனைத்துத் தரப்பினரும் நல்கிய ஒத்துழைப்பும் இம் மலரின் கனதிக்கு பேருதவி புரிந்துள்ளது. எதிர் காலத்திலும் ஆரம் சஞ்சிகையானது பல மாற்றங்களை உள்வாங்கிப் பிரகாசிக்க எல்லாம் வல்ல இறையருளை வேண்டி அமைகின்றேன்.

**திருமதி குணேஸ்வரி ரகுநாதன்,**
**பொறுப்பாசிரியர்,**
**தமிழ் மன்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின்

# உள்ளத்திலிருந்து



யாழ் மண்ணிலே சைவத்தையும் தமிழை யும் பண்பாட்டையும் ஒருங்கிணைத்து அறிவை வழங்குகின்ற யாழ் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத் தலைவர் என்னும் தகைமையுடன் சில மனப் பதிவுகளை முன்வைக்கின்றேன்.

இம்முறை தமிழ் மன்றமானது வெற்றிகரமாகத் தனது ஐந்தாவது ஆரத்தினை வெளியிடுகின்றமை மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது. எமது சகோதரிகள், ஆசிரியர்கள் மற்றும் சான்றோர்களின் திறமைகளும் ஆளுமை களும் ஆக்கங்களாகத் தொகுத்து இன்று எல்லோர் கைகளிலும் ஆரமாகத் தவழ் கின்றது. மாணவிகள் தமது திறமைகளை வெளிப்படுத்த, சிறந்த களமாக தமிழ் ஆரம் விளங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தமிழ் ஆரம் தொடர்ந்தும் அறிவு நிறைந்த சுவடிச்சாலையாக மிளிர்வதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். எம் ஆரம் சிறப்பதற்கு ஆசிச் செய்தியையும் வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய பெருந்தகைகளுக்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். மேலும் ஆரம் மிளிர உதவிய ஆசிரியர் களுக்கும் நன்றியை கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் எந்நேரமும் மன்றம் சிறக்க உதவிய மன்ற உறுப்பினர் களுக்கும் இங்ஙனம் நன்றியைக் கூறி இறுதியாக ஆரம் சிறக்க விளம்பரங்களை தந்து தவிய நிறுவனங்களிற்கும் நன்றி கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

**லக்ஷிகா ஜெயமோகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து...





வடமாகாணத்தில் சிறப்புடன் இயங்கும் பெண்கள் கல்லூரிகளில் முதனிலை வகிக்கும் எம் கல்லூரி வெளியிடும் தமிழ் ஆரத்தின் ஐந்தாவது இதழ் வெளிவருதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

தொழில்நுட்ப வளர்ச்சிக் காலத்திற்குப் பின்னர், மாணவர்கள் மத்தியில் வாசிப்புத்திறன் அருகிவிட்டது. ஒவ்வொரு மாணவர்களுக்கும் கிரகித்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய திறன்கள் அடிப்படையாகும். நூல்கள் பலவற்றை வாசிக்கும் போது உண்மைத்தன்மை ஒன்று எமக்குள்ளேயே பிறக்கும். இதனை விட வாசிப்புத்திறன் அதிகமாக இருக்கும் ஒருவரிடம் படைப்பாற்றற்றிறன் அதிகமாகக் காணப்படும்.

ஆகவே எம் கல்லூரிச் சிறுவர்களிடம் நிறைந்திருக்கும் படைப்பாற்றல் திறன்களை வெளிக்கொணரும் விதத்தில் தமிழ் ஆரம் அமைவதனையிட்டுப் புளகாங்கிதம் அடைகின்றோம்.

எமது சஞ்சிகை உங்கள் கையில் தவழ ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூற விரும்புகின்றோம்.

எமது சகோதரிகள் காட்டிய படைப்பாற்றற் பாதையில் இன்று நாம் பயணித்துள்ளோம். அதே போல் எம் இளைய சகோதரிகளும் பயணிக்க இறைவனிடம் ஆசி வேண்டி விடைபெறுகின்றோம்.

ஜீவிதா கணேசன் — தக்ஷா சத்தியதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் நன்னயம்



யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றச் செயலாளராகச் செயற்படுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ் ஆரம் ஐந்தின் வெளியீட்டிற்கு ஆதாரமாக இருந்த அன்புள்ளங்க ளுக்கு நன்றி கூறும் வரம் பெற்றுள்ளேன். தமிழ் ஆரத்திற்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்திகள், வழங்கிய பெருந்தகைகளுக்கும், ஆக்கங்கள் வழங்கி எம் இதழைக் கௌரவித்த உள்ளங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ் மன்றத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் சிறப்பாகத் திகழ்வதற்கு வழிகாட்டுகின்ற அதிபர் ,பிரதி அதிபர், உப அதிபர்கள், துறை சார்ந்த ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியப் பெருந்தகைகள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகட்டும். இதழின் மலர்விற்கு விளம்பரங்கள் வழங்கிய வர்த்தகப் பெருமக்களுக்கு என்றென்றும் எனது நன்றி.

தமிழ் மன்றம் முழுநிறைவோடு செயற்படுவதற்கு முழுமையான பங்களிப்பை உற்சாகத்தோடு வழங்கிய மன்றச் செயலணியினர், கல்லூரித் தோழிகள் அனைவருக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கனிமொழி அமிர்தராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# தமிழ் மன்றம் -2018

| | | |
|---|---|---|
| காப்பாளர் | :- | திருமதி மிமலாதேவி விமலநாதன் |
| பொறுப்பாசிரியர் | :- | திருமதி குணேஸ்வரி ரகுநாதன் |
| தலைவர் | :- | செல்வி ஜெயமோகன் லக்ஷிகா |
| உபதலைவர் | :- | செல்வி மடோனா அன்ரன் சில்வெஸ்டர் |
| செயலாளர் | :- | செல்வி கனிமொழி அமிர்தராசா |
| உபசெயலாளர் | :- | செல்வி சுகந்தினி சண்முகநாதன் |
| இதழாசிரியர்கள் | :- | செல்வி தக்ஷா சத்தியநாதன் |
| | :- | செல்வி ஜீவிதா கணேசன் |
| ஆசிரிய ஆலோசகர்கள் | :- | திருமதி சத்தியபவானி செபமாலைதாசன் |
| | :- | திருமதி கணேஸ்வரி தனமூர்த்தி |
| | :- | திருமதி செம்மனச்செல்வி உமாகரன் |
| | :- | திருமதி பத்மாவதி தாமோதரகுமார் |
| | :- | திருமதி கேதீஸ்வரி ஆனந்தரட்ணம் |
| | :- | திரு. அரியபுத்திரன் லிங்கராஜ் |
| மலர்க்குழு | :- | செல்வி செந்தூரன் தேனுஷா |
| | :- | செல்வி ரவிச்சந்திரன் சிறோமியா |
| | :- | செல்வி ஜெயானந்தன் தரணிகா |
| | :- | செல்வி தங்கராசா டிலக்சனா |
| | :- | செல்வி அன்ரன் வின்சிலின் லூமினா |
| | :- | செல்வி நாகராசா சங்கவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் -2018

| இல. | நிகழ்ச்சி | பிரிவு | மாணவர் பெயர் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | கட்டுரை வரைதல் | 4 | கு.சங்கவி | 3 | - | - |
| 02 | கட்டுரை வரைதல் | 5 | வி.கோபிகா | 1 | 1 | - |
| 03 | இலக்கணப்போட்டி | 5 | கி.கௌதமி | 3 | - | - |
| 04 | திறனாய்வுப்போட்டி | 5 | ஜெ.லக்ஷிகா | 1 | 1 | - |
| 05 | கவிதை ஆக்கம் | 5 | இ.சுமித்தா | 2 | - | - |
| 06 | சிறுகதை ஆக்கம் | 4 | ஜெ.லக்ஷாயினி | 1 | 3 | - |
| 07 | சிறுகதை ஆக்கம் | 5 | சி.நிருபா | 2 | - | - |
| 08 | பேச்சு | 5 | செ.செல்வராஜினி | 3 | - | - |
| 09 | பாவோதல் | 2 | செ.செவ்வபினி | 1 | 1 | 2 |
| 10 | பாவோதல் | 3 | ட.லக்ஷிகா | 1 | 1 | - |
| 11 | பாவோதல் | 4 | சி.சிவரஞ்சினி | 1 | 2 | - |
| 12 | இலக்கிய விமர்சனம் | 5 | ச.தக்ஷா | 1 | 2 | - |
| 13 | இசை தனி | 2 | ஜெ.சுருதி | 1 | 2 | - |
| 14 | இசை தனி | 4 | சி.இராகப்பிரியா | 3 | - | - |
| 15 | நடனம் தனி | 2 | த.லாவண்யா | 1 | 1 | 1 |
| 16 | நடனம் தனி | 4 | பி.நிவேதனா | 1 | 2 | - |
| 17 | நடனம் தனி | 5 | மோ.யுவலக்ஷி | 1 | 1 | 1 |
| 18 | நடனம் குழு | தி.போ | | 1 | 1 | 2 |
| 19 | நாட்டிய நாடகம் | தி.போ | | - | 1 | 1 |
| 20 | மேடை நாடகம் | தி.போ | | 1 | 1 | 3 |
| 21 | விவாதம் | தி.போ | | 2 | - | - |
| 22 | தமிழறிவு வினாவிடை | தி.போ | | 1 | 1 | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரி முதல்வர்



திருமதி மிமலாதேவி விமலநாதன் (SLPS -I, B.A (Hons.), PGDE, MED)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் குழுமம் - 2018




இ. இ. வ: திருமதி செ. உமாகரன், திருமதி கு. ரகுநாதன், திருமதி ப. பாஸ்கரகுருக்கள் (உப அதிபர்), திரு. ஜெ. றஜீபன் (உப அதிபர்),
திரு. சி. பரணீதரன் (பிரதி அதிபர்), திருமதி மி. விமலநாதன் (கல்லூரி முதல்வர்), திருமதி. ச. செபமாலைதாசன்,
திருமதி கீ. துரைசிங்கம் (உப அதிபர்), திருமதி கெள. கோடீஸ்வரன் (உப அதிபர்), திரு. அ. லிங்கராஜ்

நி. இ. வ : திருமதி. க. ஜெயதாஸ், திருமதி ப. சுதர்சன், திருமதி அ. குகாகநந்தம், திருமதி த. விமல்ராஜ், திருமதி ய. விக்கினேஸ்வரமூர்த்தி,
திருமதி ம. ஜெபராஜா, திருமதி ப. வாகீசன், திருமதி ச. கேதீஸ்வரன், திருமதி. சா. மதிரூபன், திருமதி கு. உருத்திரகுமாரன்,
திருமதி க. சிவனேஸ்வரநாதன்,திருமதி த. கணேசநாதன், செல்வி. வி. வெங்கடேஸ்வரன், திருமதி க. தனமூர்த்தி,
திருமதி கே. ஆனந்தரட்ணம், திருமதி ப. தாமோதரகுமார்,திருமதி ய. சாந்தகுமார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்றம் - 2018




இ. இ. வ: திருமதி கு. ரகுநாதன் (மன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி ப. பாஸ்கரகுருக்கள் (உப அதிபர்), திரு. ஜெ. றஜீபன் (உப அதிபர்), திரு. சி. பரணீதரன் (பிரதி அதிபர்), செல்வி. அ. கனிமொழி (ம. செயலாளர்), திருமதி மி. விமலநாதன் (கல்லூரி முதல்வர்), செல்வி. ஜெ. லக்ஷிகா (ம.தலைவர்), திருமதி. ச. செபமாலைதாசன், திருமதி கௌ. கோடீஸ்வரன் (உப அதிபர்), திருமதி கீ. துரைசிங்கம் (உப அதிபர்), திரு. அ. லிங்கராஜ் (ஆசிரியர்)

நி. இ. வ -1 : ச. தக்ஷா, ப. திவ்யா, செ. தேனுஷா, இ. பிரவீனா, அ. லூமினா, அ. அதுர்ஜனா, ச. சுகந்தினி, ர. சிறோமியா, த. சங்கீதா, நா. சங்கவி, அ. மெடோனா, சு. நீரஜா, த. பிரிகஷ்வினி, வி. கிருஷிகா, ஜெ. சங்கீதா, கொ. மேரிமெற்றில்டா,

நி. இ. வ -2 : தெ. அபர்ணா, அ. லேனுகா, வி. வினோபா, த. திபிஷா, ஸ்ரீ. நிஷானி, த. விதுரகா, கி. சஜிதா, ஜெ. தரணிகா, பா. மயூராதா, ஜெ. டிஷாலினி, அ. டிலோஜினி, பு. பௌஷாயினி, பே. யுவிதா, ஸ்ரீ. திவ்யா, த. டிலக்ஷனா, ச. லக்ஷாஜினி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு - 2018



இ. இ. வ: திருமதி கு. ரகுநாதன் , திரு. சி. பரணீதரன் (பிரதி அதிபர்), திருமதி மி. விமலநாதன் (கல்லூரி முதல்வர்), திருமதி ச. செபமாலைதாசன்

நி. இ. வ: ச. தக்ஷா, த. டிலக்சனா, அ. லுமினா, ர. சிறோமியா, நா. சங்கவி, ஜெ. தரணிகா, செ. தேனுசா, ச. ஜீவிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பாட ஆசிரியர் குழுமம் - 2018



இ. இ. வ: திருமதி. க. ஜெயராஜ், திருமதி கு. ரகுநாதன், திருமதி மி. விமலநாதன் (கல்லூரி முதல்வர்), திருமதி. ச. செபமாலைதாசன், திருமதி க. தனமூர்த்தி, திரு. அ. லிங்கராஜ்.
நி. இ. வ: திருமதி செ. உமாகரன், திருமதி ப. சுதர்சன், திருமதி ய. விக்னேஸ்வரமூர்த்தி, திருமதி கே. ஆனந்தரட்ணம், திருமதி ப. தாமோதரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தினப் போட்டியின் சாதனை நிகழ்வுகள் - 2018



நடனம் தனி பிரிவு - 2



நடனம் தனி பிரிவு - 5



நடனம் குழு - 1



நாட்டிய நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரித்தாய்

இராகம்:-ஹம்சத்வனி
தாளம்:- ஆதி

கடலலைகள் தாலாட்ட நீந்துகின்ற தீவினிலே
பொற்குடத்துத் திலகமாய் யாழ்பதியில் வாழ்பவளே
பாராளும் திறன் கொண்ட விழுதுகளை சுமந்து நீ
பேராலும் புகழாலும் ஓங்கி நிற்கும் எம் தாயே
கடலலைகள் தாலாட்ட...

அன்னை மடி தவழ வந்த பிஞ்சுகள் ஒவ்வொன்றையும்
விஞ்சு புகழ் ஓங்கி நெஞ்சமதில் சுமந்தாயே!
உன் உயர்வு கண்டு தினம் வியக்கின்றோம் இன்று நாம்
வாழிய பொற்கொடியே வாயார வாழ்த்துகின்றோம்
கடலலைகள் தாலாட்ட...

அகத்தின் ஒளி முகத்தில் பரவ கருணை வழி வார்த்தை தவழ
தூர சிந்தனை எண்ணம் கொண்டு மிடுக்குடன் நடக்கும் அதிபர்
புரியாத பாடத்தினை அன்போடு எமக்களித்து
நல்வழி காட்டி நிற்கும் ஆசான்களைப் பெற்றவளே!
கடலலைகள் தாலாட்ட...

அனைத்து வளமும் பெற்றதாயே மிடுக்குடனே நிற்கிறாய்
சரித்திரம் படைத்து நீ திருநாட்டில் மிளிர்கிறாய்
வஞ்சிமகள் தஞ்சமென்று கெஞ்சி வந்த அனைவரையும்
விஞ்சுபுகழ் ஆக்கி நீ சரித்திரம் படைக்கிறாய்.
கடலலைகள் தாலாட்ட....

தேனுஷா செந்தூரன்
தரம் 13A கலைப்பிரிவு [2019]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் எங்கள் தாயகம்

இராகம்:- குந்தவராளி தாளம்:- ஆதி

லால லால லால லா
லால லால லால லா
லால லால லால லா
லால லால லால லா

ஈழம் எங்கள் தாயகம்
எழில் மலர்ந்த பூவனம்
நாளும் கல்வி கேள்வி மிக்க
நல்லறிஞர் தாயகம் (லால லால........)

நால் இனத்து மக்களும்
நடைபயிலும் நல்லினம்
சாதி பேதம் எதுவுமற்ற
மார்க்கம் கொண்ட தாயகம் (லால லால........)

இந்து முத்தின் ஒளிவளம்
இயற்கை கொஞ்சும் கலைவளம்
அள்ள அள்ளப் புவிவளம்
சுற்றுலாக்குத் தாயகம் (லால லால........)

ஆசியாவின் அருங்கலம்
அள்ளித் தரும் மலைவளம்
கைநிறையப் பொருள் வளம்
வாழ்ந்திடுவோம் களிப்புடன் (லால லால........)

வன்னி எங்கள் மண்ணிலே
வகைவகையாய் மரவளம்
பெருமைமிக்க மண்ணிலே
பெருகிப் பரந்த பெருநிலம் (லால லால........)

வாழ்ந்திடுவோம் அனைவரும்
மகிழ்வுடனே ஒற்றுமையாய்
போற்றிடுவோம் எம் தாயை
நாவினம் மகிழ்ந்திடவே (லால லால........)

ஹம்சனா ரவிராஜ்
தரம் 7F



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஆரமே வாழி

தமிழுக்கே என்றொரு நாள்
பூத்தது அதுவே நம் தமிழ்த்தினம்
இவ் இன்பங்களை பல இதயங்களில்
பெருக்கவே பற்பல ஆக்கங்களை
சுமந்து வரும் தமிழ் ஆரமே!
நல் வணக்கமம்மா

மலைச்சாரலிலிருந்து வீழ்கின்ற
அருவிகள் போல மனதினில்
விழுந்தே தமிழ்ச்சிந்தையுருக்குது
வண்ண வானவில்லை பிழிந்து
எடுத்த சாற்றினை ஊற்றி
எழுதி வடித்த ஆரமம்மா!

மாணவியர் பலர் தம் கைப்பட
எழுதி புதிதாய்ப் படைத்த ஆரமே!
மழைத்துளி போல்
பலர் மனதை நனைக்கிறாய்
பாரம்மா!

பவள விழா ஆண்டிலே கையில்
தவழ வந்த ஐந்தாவது ஆரமே!
உன்னைத் தழுவியே
முத்தமிட வந்தோம் நாமே!

அருகிவரும் தமிழ் மொழியை
பலர் மனதினில் பதியவைத்து
வளர்க்க வந்த தாயே!
உன் இனிய முத்துக்களை
நாம் கண்குளிரக் காணவந்தோமே.

ஆண்டுகள் பல கடந்தாலும்
உன்னுடைய சுவை மாறாமல்
ஆனி மாதத்தின் முத்தாய்
வெளிவருவாயே

பலர் முகம் மாறினாலும்
நீ மட்டும் ஒளிர்ந்தாயே
உன்பணி தொடர்ந்திட
நாம் போற்றுகிறோமம்மா!
வாழி நீ பல்லாண்டு காலம்

நிலுக்ஷனா சந்திரகுமார்
13A கலைப்பிரிவு

# அம்மா

பத்து மாதம் சுமந்து பெற்று
பகலிரவு விழித்திருந்து
கண்ணுக்குள் மணி போல
கருதி வளர்த்தவர் என் அம்மா !

பசித்து அழுகையில் தன்
உதிரத்தை உணவாக்கி
துயிலெழுகையில் தன்
மடியைத் தூளியாக்கி
தூசி, துரும்பு அண்டாமல்
முந்தானைக்குள் மூடிக் காத்தவர்
என் அம்மா !

பாராட்டி சீராட்டி
நிலாக்காட்டி சோறூட்டி
தாலாட்டுப் பாடியென்னை
தூங்க வைத்தவர் என் அம்மா !

கட்டியணைத்து
கதைகள் சொல்லி
கல்வியெனும் பெரும்
பயிரிற்கு வித்திட்டவர் என் அம்மா!

பள்ளிச் சிறாராய் நான்
துள்ளித் திரிந்த வேளையில்
அள்ளியணைத்துத் தன்
தோள் மேலேந்தி நடந்தவர் என் அம்மா !

என் உடலில் நோய் கண்டால்
தன்னுடலை வருத்தி
என் நலம் பேணி
காத்தவர் என் அம்மா !

எனக்கு உடல் தந்து
உயிர் தந்து, உணர்வு தந்து
இந்த உலகிற்கு ஈய்ந்த
முதற் கடவுள் என் அம்மா !

மானசி பிரசாத்குமார்
தரம்:- 6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவன் வாழ்க !



பயிரை உயிராய் மதிக்கும்
பண்புடைய உழவனே வாழி- உன்
பாதம் சேற்றில் புதைந்தால்
நம் கரம் சோற்றில் புதையும் வாழி !

நீயின்றி நாம் இல்லை
உனக்கு நிகர் யாருமில்லை
இன்பதுன்பம் தாண்டி வந்து
தரணியை வாழ வைப்பவனே வாழி !

விதைபோட்டு முளைக்க வைத்து
வியப்போடு வளர்த்து விட்டு
அறுவடை நெருங்க இயற்கை அழித்தாலும்
நிமிர்ந்திடுவாய் வாழி !

தலை நிமிர்ந்த உன் அழகும்
தளராத உன் நடையும்
தரணியையே குளிர வைக்கும்
தலைவனே நீ வாழி !

வாழ்த்திடுவோம் உழவனை
போற்றிடுவோம் சேவைதனை
மாற்றிடுவோம் மனங்களை
உழவனே எம் தெய்வமென்று

சாரங்கா கணநாதன்
தரம்:– 10F

## கவிந்தமிழ்

நாவினிக்கும் நவின்றிடுங்கால்
நாற்றமிழின் நலமுரைப்பின்
கேட்பதற்கும் ஓசைமிகும்
செவியினிக்க உளம் குளிரும்
யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல் இனிதில்லை

எங்கு நீ சென்ற போதும்
தமிழை இழந்திடத் துணியாதே
தமிழரெனச் சொல்வதற்கு அஞ்சாதே
தமிழுக்கு நிகர வேற்று மொழி உண்டோ
தமிழை எம் மூச்சென்போம்
உயிரே எம் தமிழ் என்போம்

தேமதுரத் தமிழெங்கள்
தாய் மொழியை வாழ வைப்போம்
சந்ததிதழைப்பதற்கு வழி அமைப்போம்
சாகாவரம் பெற்ற இன்பத் தமிழ்
தரணியிலே உயர்ந்திட கரம் சேர்ப்போம்

தமிழ் மொழியில் இலக்கியங்கள்
பற்பலவும் படைத்தே
நற்றமிழின் எதிர்காலம்
சிறக்க வேண்டின் நாமுமைத்
தொடர்ந்திடுதல் வேண்டுமென்றோ

தமிழொன்றே இந் நாட்டுத் தமிழருக்குத்
தக்க நன்மை பயக்குமெனத்
தெளிதல் வேண்டும்
தமிழே எம் மூச்சென்போம்
உயிரே என்போம்
தரணியில் எங்குமே பரவச் செய்வோம்.

சங்கவி நாகராசா
13C கலைப்பிரிவு
(2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிக்கட்டும் முரசு



அவைக்கும் சபைக்கும்
என் வணக்கம்-என்
அன்னைத் தமிழுக்கே
முதல் வணக்கம்

கனக்கும் என் கவிதையில்
பொருளிருக்கும்
எனக்கும் அன்னையின்
அருளிருக்கும்

பெண்ணடிமை ஒழிப்போம்
பெருமைதனை சமைப்போம்
மண்ணுலகின் கண்கள்
பெண்கள் என்றே ஒலிப்போம்

மென்மையிலும் பெண்மை
உண்மையிலும் பெண்மை
நன்மையிலும் பெண்மை-இதுவே
நாம் காணும் உண்மை

தாரமாகும் உறவு- இங்கு
தாயாகும் பொழுது
ஈரமாகும் மனது-வேறு
என்ன வேணும் உனக்கு

மார்ச் எட்டில் கொண்டாடும்
விழா அல்ல-உன்
மனச்சாட்சி சுடுமன்றோ
உனை மெல்ல

மூச்சுக்கும் பேச்சுக்கும்
துணைஆவாள் பெண்
மூடாமல் விழி திறந்து
உனைக் காப்பாள்

கண்ணகி வரலாற்று
நாயகி-என்
கண் முன்னே தெரிகின்ற
பெண்ணெல்லாம் யாரடி?

வெண்ணிலா வானத்தில்
தானடி-என்றும்
விடியலைத் தருபவள்
பெண்ணென்றே கூறடி
தேசத்தின் கண்ணாடி
ஆவாள்-எங்கள்
தேவைகள் தீர்த்திட
அன்றாடம் சாவாள்

பாசத்தில் முதலிடம்
ஆவாள்- கருணையின்
இருப்பிடம் ஆவள்

அழகான உலகின்
ஆதாரம்-பெண்
அழியாமல் காப்பாள்
தன் மானம்

**ஸாருணிக்கா டினேஸ்**
**தரம்:– 9A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படிக்கு நான் பிச்சைக்காரன்

நடைபாதையில் தான் தினமும் வேலை
உடை பாதிதான் அணிய வேண்டும்
பலநூறு சனங்கள் கடந்து போகும்-தினம்
அவர்கள் பார்வையில் நான் "வேறு மனிதன்"

"உருவம் மட்டும் ஒருவனை மனிதனாக்காது"
புரிந்து கொண்டதும் இங்கு தான்...
திரவ நீர் போல் உருவம் மட்டும் மாறத்தெரியின்
மனம் போல் உருவையும் மாற்றியிருப்பர்.
நான்கு கால் நாய்களிற்குள்ள சட்டம்-மனம்
கொண்ட எமக்கில்லாமல் போனதேனோ?

தாய் கொடுத்த உடலை தாய் மண்ணிற்கு
அர்ப்பணிக்கச் சென்றோம்..
கொண்டு சென்ற உடைமையும்
துண்டு போன உடலையும் விட்டு
மிச்ச மீதி உயிர் வாழ மீண்டுவந்தால்
நன்றி கெட்ட கூட்டத்தில் நாய்
பிழைப்பு வாழச் சபிக்கப்பட்டோம்..

இறப்பதற்காய் பிறந்தவர் நாம்-வெறும்
இரந்துண்டா வாழ்வது?
கல் நெஞ்சக்காரரே காரோடு வருகிறீர்- நீர்
உயிரோடு திரியத்தான்-நாம்
போராடச்சென்றோமே!
மார்போடு அணைக்கவேண்டாம்-ஏன்
மரத்தோடு சாய்க்கின்றீர்?
பகுத்தறிவு என்ற பேரில் உணர்ச்சிகளை மறந்தீரோ?

பணம் கொடுத்து மனம் வாங்கும்காலம்
மரம் போகத் தெரியுமையோ....
கண்ணீர் வழிந்தால் நடிப்பென்பீர்
ஆடை கழன்றால் "ச்சீ" என்பீர்
தண்ணீர் கொடுக்கவும் தயங்குகிறீர்
பெயரைக்கேட்டால் "கனவான்" என்பீர்

இப்படியான தமிழனுக்கும்
இப்படிப்போன தமிழ்மொழிக்கும்
இப்படிக்கு நன்றி... "நான் பிச்சைக்காரன்"

அஜித்தா சுரேஸ்
தரம்:-13C கலைப்பிரிவு (2019)

## விழித்திடு! தவிர்த்திடு

விழித்திடு தமிழா! இங்கே உன் கனவுகள்
யாவும் தட்டிப் பறிக்கப்படுகின்றன.
மதி மயங்கி நீ போகும் பாதை- போதையாகி
நிற்பதை கண்திறந்து பார்!

வாழ்வதற்கே வாழ்க்கை- உன் வாழ்வை
முடித்துக் கொள்ள நீயே போராடுகிறாயா?
உயர்வினை மறந்து உண்மை நிலை மறந்து
கனவுக்குள் காலம் கற்பனையாகிறது....!

உழைக்கும் பருவத்தில் ஊதாரியாய் சுற்றுகிறாய்
சிரித்து மகிழ வேண்டிய நேரத்தில்- மூலையில்
முடங்கி கிடக்கிறாய்- உன் இளமை
தள்ளாடி நிற்பதைப்பார்...!

விதி செய்யும் கோலமல்ல- நம்மை
மாற்றப் போராடும் சகுனிகளின் -சதி
வேலைகளில் இதுவுமொன்றடா!

சாதனைகள் உனக்காய் காத்திருக்க
சரித்திரங்கள் உன் பெயரை எழுதவர
கனவுகளுக்கெல்லாம் கதவடைத்து விட்டு
அடிமையாய் மண்டியிட்டு நிற்கிறாயடா...!

உன்னை மாற்றும் போதைப் பொருட்களுக்கு
உள்ளம் உணர்ந்து ஒதுக்கிச்செல் - இனி
வரும் காலமாவது உன் இனம்- நல்ல
நிலை பெறட்டும் - உலகும் உனக்காய்
விடியட்டும்....!!!

தரணியா சாந்தலிங்கம்
கலைப்பிரிவு $13^A$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் தேடு!

மானிடனே கேள்!

முடிவின்றிச் செல்லும் வீதி - அதில்
பூரணமின்றிப் பயணிக்கும் மனிதன்
இலக்கியங்களைக் கற்றுப்பார் - நீ
பயணிக்கும் இடமெல்லாம் இலக்கியம் காண்பாய்.

நெற்றியில் வைக்கும் திலகத்திற்கும் - ஓர்
இலக்கியம் உண்டு.
காலில் அணியும் சிலம்பிற்கும் - ஓர்
இலக்கியம் உண்டு.

அன்று உணவென்று கேட்டவர்க்கு - தன்
கரங்களால் அன்னமிட்டான்-சீதக்காதி
இன்று உணவு கேட்கும் ஏழைக்கு - உன்
கைகளால் உணவு கொடுக்கின்றாய்

இலக்கியம் பெற்றுள்ள பிரபல்யத்தால் - நீ
ஏழைக்குக் கடவுளாய் நின்றாய்
அங்கே இலக்கியங்கள் - உன்னை
ஒரு கடவுளாய் மாற்றியது.

கலைகளின் மத்தியில் வாழும் - மனிதன்
தலை சிறந்தவன் ஆகின்றான்.
வெறுமையாக வாழ்பவன் - இறுதிவரை
வெறுமையானவனாகவே வாழ்கின்றான்.

அன்று கோவலனை மயக்கியது
மாதவியின் கலையாற்றல்
கண்ணகியை அவனிடமிருந்து பிரித்ததும்
மாதவியின் கலையாற்றல்

இலக்கியத்தின் மத்தியில் - கலைஞன்
கலைகளைக் காண்கின்றான்.
கலைகளின் மத்தியில் - அறிஞன்
இலக்கியங்களைக் காண்கின்றான்.

கலைகளும் இலக்கியங்களும்
மகிழ்ச்சியைத் தரவல்லன.
அவை மனிதனுடைய வாழ்வை
அமைதியாக்க வல்லன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களை அறிந்து வாழ்
கலைகளை உணர்ந்து வாழ்
மனிதனாகி உனது வாழ்க்கை
பூரணம் உடையதாய் மாறும்.

வாசிப்பதால் மனிதன்
பூரணமாகின்றான் என்பதைவிட
இலக்கியங்களைக் கற்பதால்
மனிதன் பூரணமாகின்றான் என்பது மெய்.

கபினயா நடேசன்
தரம் 11E

# எங்கள் பாடசாலை

எங்கள் பாடசாலை
பெண்கள் பாடசாலை
இன்பம் தரும் பாடசாலை
தமிழ் மொழியும் பண்பாடும்
காப்பதனை இலட்சியமாய்
கொண்டதெங்கள் பாடசாலை

அழகு மிக்க பாடசாலை
ஒழுங்குடனே ஒழுக்கமும் பேணி
நல்ல கல்வி தினம் வழங்கும்
எங்கள் பாடசாலை பெரிய பாடசாலை

கலைவளர்க்கும் பாடசாலை
மரங்கள் சூழ்ந்த குளிர்மையுடன்
ஒளி பொருந்திய வகுப்பறைகள்
ஓடி விளையாடிடவும் உடல் உறுதி
பெற்றிடவும் பெரியதொரு மைதானம்
மனம் நிறைவாய் கொண்டிருக்கும்

எங்கள் பாடசாலை உயர்ந்த பாடசாலை
தாயென நாம் போற்றிடுவோம்
கற்றவராய் நாம் நிமிர்ந்து
நானிலம் போற்றுகின்ற
நங்கையாய் உயர்ந்திடவே
அறிவு வளர்க்கும் பாடசாலை
எங்கள் பாடசாலை

நேத்திரா சத்தியேந்திரகுமார்
தரம் 06D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம் பேசுகிறது

ஓ..... மாணவர்களே நில்லுங்கள்
நான் சொல்வதை ஒருகணம் கேளுங்கள் !
புத்தகம் என்பது எத்தனை பொக்கிஷம்
தொட்டு அணைக்க எத்தனை அர்த்தங்கள்
வாழ்வின் சிகரம் தொட
எழுத்தில் வந்த அமுத சுரபி

புத்தகம் என்பது எத்தனை அற்புதம் !
கண்டு கொண்டால் தொடச்சொல்லும்
தொட்டுக் கொண்டால் பார்க்கச் சொல்லும்
பார்த்துவிட்டால் இரசிக்கச் சொல்லும்
இரசித்து விட்டால் தேடச் சொல்லும்
தேடிக் கொண்டால் எம்மை மயக்கும்
ஓ..... எத்தனை அற்புதம்

புத்தகம் என்பது எத்தனை சௌபாக்கியம்
சில நூல்களை மலைகள் என்பர்
பார்க்கலாம் பெயர்க்க முடியாது
சில நூல்களை வீதிப்பெண்கள் என்பர்
இரசிக்கலாம் பின்பற்றக் கூடாது
சில நூல்களை கண்ணாடி என்பார்
நித்தம் ஒருமுறை பார்த்தாக வேண்டும்
சில நூல்களை பணம் என்பர்
நித்தம் எம் பையில் இருக்க வேண்டும்
ஓ..... புத்தகம் என்பது எத்தனை பொக்கிசம்?

மாணவர்களே!
எனக்கும் ஆயுள் உண்டு
என் மூச்சு உங்களுக்காகவே!
உங்கள் வாழ்வின் உயர்விற்காகத்
தோழோடு தோள்நிற்க வந்த தோழன் நான்
என்னை வீசாதீர்கள்! எனக்கு நோகிறது!
என்னை கிழிக்காதீர்கள்! எனக்கு வலிக்கிறது!
என்னை மடிக்காதீர்கள்! தழும்பு என் அழகைக்கெடுக்கிறது !
என்னை திட்டாதீர்கள்! நெஞ்சு வலிக்கிறது!
என்னை கசக்காதீர்கள்! ஆயுள் குறைகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனே!
ஒன்று சொல்கிறேன் - உன்
வசந்தத்தை வாழ்வில் தேட
வந்தவன் நான்
உன் கண்போல் என்னைக் காப்பாற்று
நித்தம் ஒருமுறை என்னை தடவிச்செல்
எனக்கு குளிர்கிறது ஆடை ஒன்று போட்டுக் கொள்
தனிமை எனக்கு வெறுக்கிறது உன்னோடு அணைத்துக் கொள்
என்னை அநாதையாய் விட்டுச் செல்லாதே
பக்குவமாய் சகோதரரிடம் ஒப்படைத்துப் போ!

மாணவா!
உன்னைக் கெஞ்சுகிறேன்
காலத்தின் மாற்றத்தால் என் கோலம் மாறினாலும்
என் இலட்சியம் ஒன்றுதான் - என் இறுதி மூச்சுவரை
உனக்காகவே நான் வாழ்வேன்.
எனக்காக ஒன்று கேட்கிறேன் - உன்
வாழ்வின் பொக்கிஷமாய் என்னை
உன்னோடு வைத்துக்கொள்.

அஸ்வினி ஸ்ரீகாந்தசர்மா
தரம் 9E

பூனைகளுக்கு இரவில் நன்கு கண்கள் தெரியுமா? உண்மையில் அவைகளும் மனிதர்கள் போன்றவை தான். இருளில் பார்க்கும் போது விசேட சக்தி எதுவும் அவற்றிற்கு கிடையாது. ஆயினும் வீட்டிற்கு வெளியே உள்ள நிலா வெளிச்சம், மின்கம்ப விளக்கு ஆகியவற்றை அவை சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன.

வெளியிலிருந்து வரும் வெளிச்சத்தை பெருக்கிக் கொள்ளும் அமைப்பு பூனையின் கண்களிற்கு இருக்கிறது. விழித்திரையின் பின்புறம் உள்ள பச்சை நிற பகுதி தான் இந்த பணியை செய்கிறது. பச்சை நிறப்பகுதி இரவில் ஒளி பட்டதும் நன்கு துலக்கமாக மின்னும். பூனைகளின் கண்களில் உள்ள பச்சை நிறப்பகுதி வாகனங்களின் வெளிச்சத்தில் இரவில் ஒளியுடன் மின்னுவதை காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பக்தி

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் "

என்பது திருவள்ளுவரது வேதவாக்கு. வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டுமாயின் வழி காட்டல் இன்றியமையாதது. அவ்வழிகாட்டலூடாக அமைபவரே குரு ஆவார். அஞ்ஞானத்தை நீக்கி அறிவொளி கொடுப்பவர் கலங்கரை விளக்காய் அமைபவர். ஏணியாய் நின்று ஏற்றி வைப்பவர் குரு ஆவார். இதனாற்றான் ஆன்றோர் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நாற் குரவர்கள் வரிசையிலும் குருவை தெய்வத்திற்கு முதற்படியாய் வைத்துப் போற்றுகின்றனர்.

குரு சீடனின் அறியாமையை நீக்க வந்தவர்கள் அவருக்கு நாம் மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் அடக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். பக்தி என்பது மனம், வாக்கு, காயங்களின் ஒடுக்கமாகும். ஐம்புலன்களையும் ஒடுக்கி குருவின் சிந்தையோடு வாழ்ந்து ஈடேற்றம் பெற்றவர்கள் பலர். மணிவாசகர், அப்பூதியடிகள், மங்கையற்கரசி, நமிநந்தி அடிகள் என்று பலருக்கு குரு தரிசனம் கிடைத்தே வாழ்வு மலர்ந்துள்ளது.

எம் வெற்றிக்கு வழிகாட்டும் குருவிற்கு எம் அன்பைக் காட்ட வேண்டுமாயின் பக்தியின் வடிவமாய் தட்சணை அல்லது கையுறை கொடுப்பது வழமை. பாரதத்தில் துரோணாச் சாரியாருக்கு ஏகலைவன் வலது கைப்பெருவிரலை தட்சணையாக வழங்கினான் என்பதை யாவரும் அறிந்துள்ளோம்.

குரு இல்லா வித்தை பாழ். எனவே எம் அறியாமையை நீக்கவந்த தெய்வ தூதர்களாகிய குருவை பக்தியுணர்வுடன் பூஜிப்போம்! வழிபடுவோம்! வளமான வாழ்வு வாழ்வோம்.

செவ்வபினி செந்தில்வேல்
தரம் 6D

முன்னேற வேண்டும் என்று விரும்பினால் யாருடனும் சண்டை போடாதீர்கள். அதில் நேரம் வீணாகிறது. நாயிடம் கடிபடுவதைக் காட்டிலும் நாய்க்கு வழி விடுவதே மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் தேடிய வார்த்தைகள்



கண் இமைக்கும் நொடிப்பொழுதில்– பெண்களை
காவு கொள்ளும் பாதகனே!
இப்போது மௌனமாக இருக்கின்றேன்
என்று எண்ணுகிறாயா?
இந்த மௌனத்தின் விம்பம்
என்னவென்று உனக்குத் தெரியாதா?

செ.தேனுஷா
தரம் 12A கலைப்பிரிவு

கண்களில் காமவெறியுடன்
கயவர்கள் ஆடும் கண்ணாம் பூச்சியில்
கனவுகளுடன் சிறகடிக்கும்
பல பட்டாம் பூச்சிகள் பாழாகின்றன.
கண்மூடும் சொற்ப வேளைகளில்
கனவாகி போகின்றது பெண்ணின் வாழ்க்கை

த.தரணிகா
தரம் 11D

முரட்டுக் கைகளின் நடுவே
மலர் போன்ற ஒரு முகம்
பாலியலால் அவஸ்தை கொள்ளும்
பெண்களின் அவல நிலை
பெண் அடிமைகளை துரத்துவோம்
பெண்ணியத்தைக் காப்போம்!

ந.கம்சனா
தரம் 11A

பட்டுக் கால்களால் பட்டாம் பூச்சியாய் பறக்க முடியவில்லை– ஏனெனில்
பாலியல் வன்முறை என்னை சிறையில் வைக்கிறது. இது ஏனோ?
பாரதி கண்ட புதுமைப் பெண்களில் நானும் ஒருத்தி
அழிப்பேன் வன்முறையை.

விஜயகுமார் பஷ்னா
தரம் 12A (உயிரியல் பிரிவு)

பாவை அவள் கண்களில்
பாவிகளின் கொடுமைகள்
பெண்ணவளின் உரிமைகள்
மண்ணினுள் புதைக்கப்பட்டு
கண்ணருகே கலைகிறதே.

ம.சிந்துஜா
தரம் 12C கணித பிரிவு

வளரும் தளிர்களை
முடமாக்கும் வஞ்சகர்களே!
வளமிக்க இந்நாட்டினை
வழிப்படுத்த வேண்டியநீர்
வன்முறை செய்வது ஏன்?

பு.சிவதர்ஷினி
தரம் 12C உயிரியல் பிரிவு

போதையிலே முடங்கி
குருடர்களாய் திகைத்து
பெண்களை நசுக்கும்
ராட்சகர்களே!
பெண் அடக்கம் இழந்து
சீறினால் அழியும் வையகமே!

யோ.டிலக்ஷனா

மௌனத்தின் ஓரத்தில்
பாதகனின் கைப்பிடியில்
சிக்குண்டு சிதையும்
சிறகிழந்த பெண்ணே!
மொட்டு விரியும் நேரத்தில்
கசக்கிப் போட்டார்களா?

ஸ்ரீ.திவ்ஜா
தரம் 12 கலைப்பிரிவு

கொடூரமான காமவலைக்குள்
அகப்பட்ட இச்சிறியபெண்பறவை
பறக்க வழிகள் இன்றி தன்னை
யாரும் காப்பாற்ற வரமாட்டார்களா?
என ஏக்கத்துடன் காத்திருக்கிறது.

கி.சயிதா
தரம் 12A கலைப்பிரிவு

காமக் கொடூரர்களின் கையில்
மாட்டிய என்னை காப்பாற்ற
இவ்வுலகில் யாருமில்லையா?
இப்போதே எழுகிறேன்
வன்முறையை ஒழிக்க!

ஜெ.ரிஷானா
தரம் 13A கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை போன்ற சிரிப்பை
முடக்கி வைக்கும் மூடனே!
இருட்டறையில் என்னை
முடிக்கவா பார்க்கிறாய்
சூரியக்கதிர்போல் வெளிவருவேன்

ச.நிலுக்ஷனா
தரம் 12A கலைப்பிரிவு

இலட்சியம் கொண்ட உன் பாதையில்
கொடுங்காரன் கண் பட்டதுவோ!
அவன் இரசிய ஆசைக்கு- உன்
ஆசைகள் நிராசைகள் ஆனதுவோ பெண்ணே!
உன் கோபம் விழியோரம் பாய்கிறதோ!

பி.தர்மிகா
தரம் 12C கலைப்பிரிவு

இனம் அறியா உறவுகள்
பலர் அறியாச் சூழல்கள்
கொலை என்னும் கொள்கையில்
பெண்ணைத் துன்புறுத்தும் கரங்கள்
பெண் சுதந்திரம் தேடுகின்றோம்
துன்புறுத்தும் இவ் உலகத்திலே.

ஜி.ஜிலோனா
தரம் 12B (கணித பிரிவு)

மானிட வேடமணிந்த அரக்கனின் கொடுமை
அவனின் செயலின் பெண்ணவள் அடிமை
கயவனின் செயலுக்கு குழந்தை விருந்து
கடைசியில் வாழ்க்கை மரணப்படுக்கை
பெண்ணிற்கு கிடைத்தது கண்ணீர் பரிசு
துடித்திடும் பெண்ணின் குரலது கேளீர்

கௌதமி சிவநேசன்
தரம் 12A (உயிரியல் பிரிவு)

சிறகடித்து திரியும் பெண்ணே
உன்னை சிறகிழக்கச்
செய்தவன் யாரோ?
மௌனம் காக்கின்றாயா?
வீறு நடை போட்டு எழுந்திரு

அ.லேனுகா
தரம் 13C (கலைப்பிரிவு)

எமனை கண்ட பார்வை
ஏக்கமான கண்கள்
மிருகத்தின் கைகள்
அவளின் வாழ்வை மூடுகிறதே!

பி.நிவேதனா
தரம் 11 C

கண்கள் தேடும் கள்வர்
யாரோ கூறாய் விழியே
சுவாசம் வெளிவிட முடியாமல்
கைகள் சூழும் வலையினில்
மௌனம் தேடும் விபரம்
யாதெனக் கூறு விழியே !

ஜெ.ஜெயதர்சி

பத்து விரல்களினால் சிறைப்பட்டு
தன் உரிமையை இழந்து
சுதந்திரத்தை இழந்து
இன்பத்தை இழந்து
தவிப்பது ஏனோ?

பு.தமிழினி
தரம் 12C (கணித பிரிவு)

தாயவளாம் பெண்ணவளை கலங்கத்தான் வைப்பதேனோ!
உன்னவளை பூப்போல் பார்ப்பாயாம்
மற்றவளை கசக்கிப்பிழிவாயாம்!
இத்தனைக்கும் என்னதான் காரணமோ?

யோ.சைந்தவி
தரம் 12C

சிட்டுக் குருவியாகத் திரியும் அவளின்
சிறகுகளை பிடுங்கி எறியும் மனித மிருகம் அவன்
இந்த மனித மிருகத்தின் கொலைப்பசிக்கு
இரையாகியது அவளின் வாழ்வு

ஜீ.சஸ்மிதா
தரம் 10F

வன்முறையின் கொடூரம்
உனது கண்களில் தலை விரித்தாடுவது
தெளிவாகத் தெரியுதடி
காத்திருப்போம் ஒரு தலைவனுக்காக
நமது தலையெழுத்தை
மாற்ற வருவான் என்ற நம்பிக்கையுடன்

த.ஷாருகா
தரம் 12A (உயிரியல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே...." என்கிறது ஒரு திரைப்படப்பாடல். பரந்த இந்நிலவுலகில் இறப்பும் பிறப்பும் சகசம். வாழ்க்கையென்பது சுழல்சக்கரம் போன்று உருண்டோடிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஒரு குழந்தை பிறக்கிறது. அவன் பிறக்கும் போது நல்லவனாக மாசு அற்றவனாக பிறக்கிறான். அவன் வளரும் போது பலவித வடிவங்களிலே வளர்ச்சி பெற்று நல்லவனாகின்றான், அறிஞனாகின்றான், உத்தமனாகின்றான், தலைவனாகின்றான். ஒருவன் குழந்தைப்பருவத்தில் இருந்து வளர்கின்ற முறையே அவனது உயர்ச்சிக்கு அடித்தளமாகின்றது. அங்ஙனம் வளர்ச்சி பெறும் ஒருவன் சிறுவனாகி, இளைஞனாகி, தலைவனாக மலர்கிறான். இக் கருத்தினடிப்படையில் நோக்கும் போது இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்ற கூற்று ஏற்கக் கூடியதே.

ஆனால் இளைஞர்கள் அனைவரும் நாளைய தலைவர்கள் என்று கூறிவிட முடியாது. வளரும் பயிர் அதன் வளர்ச்சிப் பருவத்தில் பூச்சி, புழுக்கள் போன்றவற்றால் தாக்கமுற்றுக் கருகிப்போவதும் உன்டு. அதே போன்று வளரும் பருவத்தில் இளைஞர்கள் அத்தகைய தாக்கத்தினை அடையாது நல்லவர்களாக, ஒழுக்கமுள்ளவராக வளர்க்கப்பட வேண்டும். கல்வியும் ஒழுக்கமுமே இதற்கு அடிப்படையாக அமைவனவாகும். நல்ல கல்வி அறிவினைப் பெறும் இளைஞன் நல்லொழுக்கம் உள்ளவனாகத் திகழ்வான். கல்வியும், ஒழுக்கமும் அமையப் பெறும் இளைஞர்கள் நாளைய தலைவர்களாகத் தலைநிமிர்ந்து வாழ முடியும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய சூழ்நிலையில் இளைஞர்கள் பலர் பல்வேறு தாக்கங்களுக்குள்ளாகின்றனர். படித்து வேலைவாய்ப்பின்மை, தகுந்த தலைமைத்துவமின்மை, அரசியல் குழறுபடிகள் போன்றவற்றால் அவர்கள் விரக்தியின் விளிம்பு நிலைக்குத்தள்ளப்படுவதை நாம் நிதர்சனமாகக் காண்கிறோம். அதேவேளை வேதனைகளைச் சாதனைகளாக மாற்றிச் சரித்திரம் படைத்த இளைஞர்களையும் நாம் காண்கின்றோம்.

இளைமையிலே இலட்சிய நோக்குடன், குறிக்கோளுடன் இளைஞர்கள் வளர்வார்களேயானால் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக உருவாக முடியும். நல்ல இலட்சியங்கள் நல்ல வழியைக்காட்டும் அவர்களது இலட்சிய வேட்கையும் விடாமுயற்சியும் அவர்களது குறிக்கோளை எய்துவதற்கு துணை செய்யும். இளைஞர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கல்லூரிகளில் கற்கும் காலத்திலேயே தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக் கொள்கிறார்கள். மாணவர்மன்றக் கூட்டங்களுக்கு தலைமை தாங்கும் போதும், விளையாட்டு மைதானங்களில் விளையட்டு அணிகளுக்கு தலைமை தாங்கும் போதும், மாணவத் தலைவராக செயற்படும் போதும் தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக் கொள்கிறார்கள். சாரணிய இயக்கம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், செஞ்சிலுவைச்சங்கம் போன்ற சமூக இயக்கங்களில் பங்குகொள்வதன் மூலம் இளைஞர்கள் நல்ல பண்புகளைப் பெற்றுக் கொள்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வரலாற்றிலே ஒளிபடைத்த தலைவர்களாக மின்னிக் கொண்டிருக்கும் தலைவர்கள் பலரை நாமறிவோம். அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பின் அவர்கள் இளமை முதல் தாம் கொண்ட குறிக்கோளை எய்துவதற்காக அல்லும் பகலும் அயராது முயன்றுள்ளமையைக் காணலாம்.

எனவே இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்களாக மிளிர வேண்டுமாயின் அவர்கள் நல்ல கல்வியறிவும், நல்லொழுக்கமும், பிறர் நலம் பேணும் பண்பும் உள்ளவர்களாக நல்ல குறிக்கோள் படைத்தவர்களாகத் திகழ வேண்டியது மிகமிக அவசியமாகிறது. நாளைய தலைவர்களாகும் தகுதி அவர்களின் வாழ்க்கை நெறியிலே பெரிதும் தங்கியுள்ளது என்பதை மறக்கக்கூடாது.

சி.தர்ஷனா
தரம் $10^B$

## ஆவுரோஞ்சிக்கல் (ஆ+ உரோஞ்சும்+ கல்)

தமிழரின் பண்பாட்டுக் கருவூலங்களாக விளங்கும் பொருள்கள் நம்மிடையே பலவுண்டு. ஆனால் கால மாற்றத்தினாலும் நவீன வசதிகள் காரணமாகவும் இவற்றில் பல மறைந்து ஒளிந்துவிட்டன. இவற்றுள் பலவற்றை இன்றைய தலைமுறையினர் பார்காதது மட்டுமில்லை கேட்டும் அறிந்தில்லை. இத்தகைய பொருட்களில் குறிப்பிடத்தக்கவை ஆவுரோஞ்சிக்கல் சுமைதாங்கி, நீர்த்தொட்டி என்பனவாகும். போக்குவரத்துச் சாதனங்கள் பல இல்லாத காலத்தில் மக்கள் கால்நடையாகவும், மாடுகள் பூட்டிய வண்டிகளிலுமே பயணம் செய்யவேண்டியிருந்தது. செல்லும் வழியில் களைப்புறும் மாடுகளை மர நிழலில் களைப்பாற வைத்து, தாகசாந்தி செய்யும் முகமாக வழிகள் தோறும் மரநிழல்களில் செல்வந்தர்கள் நீர் தொட்டிகளைக் கட்டி வைத்தனர். இந்தத் தொட்டிகள் சில வேளைகளில் பாரிய கற்களை குடைந்தெடுத்தவையாகவும் இருக்கும். நீர்நிரம்பிய இந்தத் தொட்டிகளில் மாடுகள் தாகத்தைத் தீர்த்துச் சென்றன. அதே போன்று மேய்ச்சல் மாடுகளும் வண்டில் மாடுகளும் தமது மசவெடுத்த உடல்களைத் தேய்த்து ஆறுதலடைய வள்ளல்கள் சொரசொரப்பான கற்கள் கொண்டு சிறுதூண்களைக் கட்டிவைத்தனர். இவை மாடுகளின் சராசரி உயரம் வரைகட்டப்பட்டிருக்கும். இவற்றில் மாடுகள் தமது உடலைத் தேய்த்து உடலின் மசமசப்பை போக்கிக் கொண்டன. இந்தத் தூண்களே ஆ(மாடுகள்) உரோஞ்சும் தூண்கள் எனப் பெயர் பெற்றன. இன்னும் தலையில் பாரம் சுமந்து செல்வோர் தம் தலையில் பாரத்தை இறக்கி வைத்து களைப்பாறுவதற்கு மக்களின் உயரத்தில் சுமை தாங்கிகளும் அமைக்கப்பட்டிருக்கும் இவற்றுக்குப் பக்கத்தே கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கும். வழிப்போக்கர்கள் இங்கே சுமைகளை இறக்கி வைத்து தாகசாந்தி செய்து களைப்பு நீக்கிச் செல்வர். பண்டைத் தமிழர்களது மனிதநேய மனப்பாங்கைக் கண்டு வியப்படையாது இருக்கமுடியாது.

சுகந்தினி சண்முகநாதன்.
தரம் $13^B$ - கலைப்பிரிவு (2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.பி.ஜே அப்துல்கலாம்

1931ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் நாள் ஜைனுலாப்தீனுக்கும் ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ் நாடுமாநிலத்தில் பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் அப்துல்கலாம் பிறந்தார். இவர் ஒரு இஸ்லாமிய குடும்பத்தை சேர்ந்தவர்.

அப்துல்கலாம் இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப்பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை தொடங்கினார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால், இளம் வயதிலே இவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார். பள்ளி நேரம் போக மற்றநேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விநியோகம் செய்தார்.இவருடைய பள்ளிப்பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார்.

தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்த பிறகு திருச்சிராப்பள்ளியில் உள்ள “செனு ஜோசப் கல்லூரியில்” இயற்பியல்பயின்றார். 1954 ஆம் ஆண்டு, இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர், 1955ஆம் ஆண்டு தன்னுடைய “விண்வெளி பொறியியல் படிப்பை” சென்னையிலுள்ள எம்.ஐ.டி-யில் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

1960ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DR00) விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய அப்துல்கலாம், ஒரு சிறிய ஹெலிகாப்டரை இந்தியராணுவத்திற்காக வடிவமைத்து கொடுத்தார். பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில்(ISRO) தனது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்த அவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் CSLV - III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி - 1 என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச் செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கத்தக்க செயலைப் பாராட்டி மத்திய அரசு இவருக்கு 1981 ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப்பெரிய விருதான “பத்மபூஷன் விருது வழங்கி கௌரவித்தது. 1963 ஆம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளை சிறப்பாகச் செய்த இவர்,1999 ஆம் ஆண்டு “பொக்ரான் அணு ஆயுத சோதனையில்” முக்கிய பங்காற்றியுள்ளார். இந்தியாவை அணு ஆயுத வல்லரசாக மாற்றிய ஏ.பி.ஜே அப்துல்கலாம், இதுவரை ஐந்து ஏவுகணை திட்டங்களில் பணிபுரிந்துள்ளார். அவர்அனைவராலும் இந்திய ராணுவ ராக்கெட் படைப்பின் பிதாவாகப் போற்றப்படுகிறார்.

2002 ஆம் ஆண்டு நடந்த குடியரசுத்தலைவர் தேர்தலில் வெற்றிபெற்று, இந்தியாவின் 11 வது குடியரசு தலைவராக ஜூலை 25 ஆம் நாள் 2002ல் பதவியேற்றார். குடியரசு தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப்பெரிய விருதான “பாரதரத்னாவிருது” மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்து மேலும்“பாரதரத்னா” விருது பெற்ற மூன்றாவது குடியரசு தலைவர் என்ற பெருமையைப் பெற்றார். 2007ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர்“மக்களின் ஜனாதிபதி” என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார். 2007ஆம் ஆண்டு குடியரசுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட நினைத்த கலாம்,பிறகு பல காரணங்களால் அந்த தேர்தலில் போட்டியிட போவதில்லை என முடிவு செய்து விலகினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல்கலாம் அவர்கள் ஜீலை 27,2015 ஷில்லாங்கில் உள்ள இன்புயன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ் மென்ட்டில் மேடையில் பேசிக் கொண்டிருந்த போதே மயங்கி விழுந்து இறைவன் அடிசேர்ந்தார். இறுதி மரியாதை இராமேஸ்வரத்தில் முழு இராணுவ மரியாதையுடன் 2015 ஜீலை மாதம் 30ஆம் திகதி இடம்பெற்றது. நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு சிறப்பு பெற்ற அப்துல்கலாம் அவர்களை என்றும் நினைவிற் கொள்வோம். ஒரு தமிழர் இவ்வாறு விஞ்ஞானியாகச் சேவையாற்றி சாதனை படைத்தது எமக்கெல்லாம் பெருமையாகும்.

அபிநயா தனபாலன்
தரம் 7D

## வாழ்க்கைத் தத்துவங்கள்

| | | |
|---|---|---|
| அழிவைத் தருவது | - | ஆணவம் |
| ஆபத்தைத் தருவது | - | கோபம் |
| இருக்க வேண்டியது | - | பணிவு |
| இருக்கக் கூடாதது | - | பொறாமை |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| கண் கண்ட தெய்வம் | - | பெற்றோர் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| செய்யக் கூடாதது | - | துரோகம் |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |
| நழுவ விடக் கூடாதது | - | வாய்ப்பு |
| நம்முடன் வருவது | - | புண்ணியம் |
| பிரியக்கூடாதது | - | நட்பு |
| மறக்கக்கூடாதது | - | நன்றி |
| மிக மிக நல்ல நாள் , | - | இன்று |
| மிகப் பெரிய தேவை | - | அன்பு |
| மிகக் கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| விலக்க வேண்டியது | - | விவாதம் |
| வந்தால் போகாதது | - | பழி |
| போனால் வராதது | - | மானம் |

அபிநயா நித்தியானந்தன்
தரம்:-10B

## சிந்தனைச்சிதறல்கள்

1. கரம் உள்ளநாடு :- இலங்கை
2. அம்மா உள்ளநாடு :- தாய்லாந்து
3. பல் உள்ளநாடு :- பல்கேரியா
4. பாய் உள்ளநாடு :- துபாய்
5. மாளிகை உள்ள நாடு :- பங்களாதேஷ்
6. தூரிகை உள்ளநாடு :- சைபிரஸ்
7. சக்கரம் உள்ள :- பிரேசில்
8. உடல் உள்ள நாடு :- ருடமேனியா
9. குளிர் உள்ள நாடு :- ஐஸ்லாந்து
10. கல் உள்ள நாடு :- போர்த்துக்கல்

சங்கவி விஜயகுமார்
தரம் 08E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்தர் .சி. கிளார்க்

ஆர்தர் .சி. கிளார்க் இங்கிலாந்தில் சொமட்செட் என்ற இடத்தில் டிசம்பர் 16, 1997 இல் பிறந்தார். அவரது தந்தை ஒரு உழவர். தாய் அஞ்சல் நிலையத்தில் தந்தி அனுப்புனராகப் பணியாற்றினார் நான்கு குழந்தைகளில் மூத்தவரான கிளார்க் அருகில் உள்ள டாண்டன் (Taunton) நகர உயர் நிலைப்பள்ளியில் "புலமைப்பரிசில்" (கல்வித்திறமையில் பரிசில்) பெற்ற மாணவனாகக் கல்வி பயின்றார். பிள்ளைப் பருவத்தில் சோமர் செட் கடற்கரையோரம் நடக்கையில் தனது அறிவியல் கற்பனைகளை விழித்தெழச் செய்த பல நிகழ்ச்சிகளை நினைவு கூர்வார். அவற்றில் ஒரு சில, தன் தந்தை ஒருமுறை ஒரு டைனோசர் படமுள்ள ஒரு சீட்டுக்கட்டு கொடுத்தது; கட்டுமானம் செய்யும் விளையாட்டுப் பொருட்களை அன்பளிப்பாகப் பெற்றது போன்றன. முதல் உலகப்போரில் படுகாயமடைந்திருந்த தன் தந்தையை தன் 13 ஆவது வயதில் கிளார்க் இழந்தார். இதன் பின் டான்டுன்ஸ் உள்ள ஷாய்ஷ் இலக்கணப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்றனர். ஆரம்பக் கல்வியை இனிதே முடித்துக் கொண்டார். தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் படிக்க அவரது குடும்ப வருவாய் போதாமையினால், தனது 19 ஆவது வயதிலேயே லண்டன் அரசப் பணியில் ( கல்வித்திணக்களத்தில்) சேர்ந்து பணியாற்றினார்.

இவர் தனது 17 ஆம் அகவையிலேயே பிரித்தானியாவில் கோள்களியல் கழகத்தில் சேர்ந்தார். பின்னாளில் இதன் பொருளாளராகவும், தலைவராகவும் பொறுப்பு வகித்தார். அரச பணியில் இவரது கணிதக் கூர்மை கணக்கு வழக்குகளைச் சரிபார்க்கும் பணிக்கு உயர்த்தியது. ஆனால் 1941 இல் இரண்டாம் உலகப் போரின் போது அப்பணியிலிருந்து விலகி ராயல் வான்படையில் இணைந்தார். அங்கு இலத்திரனியலில் பயிற்சி பெற்று வானொலிப் பள்ளியில் செய்முறைப் பயிற்சியாளரானார். இறுதியில் தென்மேற்கு இங்கிலாந்தில் வட காரன் வாலில் உள்ள டேவிட்ஸ்டோமூர் என்ற இடத்தில் அமெரிக்காவின் தரைக்கட்டுபாட்டு ராடார். அமைப்புக் குழுவில் பணியாற்றினார். இவர் பணியாற்றிய இந்த அமெரிக்கக் குழுவின் தலைவர், இயற்பியலில் நோபல் பரிசு பெற்ற லூயிஸ் டபிள்யூ ஆல்வாரெஸ் ஆவார். இந்தக் காலகட்டமே கிளார்க்கைச் சாதாரண புதினங்கள் எழுதுவதிலிருந்து அறிவியல் பக்கம் திருப்பியதாக 1963 இல் எழுதிய "பிறந்த வழி" (Glide path) என்ற தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் உலகப் போர் முடிவின் பின்னர் ராயல் வான்படையிலிருந்து விலகி லண்டன் கிங்ஸ் கல்லூரியில் இயற்பியல் மற்றும் கணிதவியலில் சேர்ந்தார். இப்படிப்பு அவருக்கு சோர்வைத் தந்ததால் அதை விடுத்து "சயின்ஸ் அப்ஸ்ட்ராக்ட்" (Science Abstracts) (1949-50) என்ற இதழில், உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். இப்பணி அவருக்கு சிந்திக்கவும் எழுதவும் நேரத்தை கொடுத்தது. 1951 இல் இருந்து கிளார்க் முழுநேர எழுத்தாளரானார்.

1945 இல் உலகாய மற்றும் கோள்களுக்கிடையேயான தகவல் தொடர்பிற்கு புவி நிலை செயற்கைக் கோள் பாதைகள் (Geostationary Satelite Orbit) குறித்தான தொழில் நுட்பக் குறிப்புக்கள் கொண்ட தனது முதல் ஆய்வு கட்டுரையை வெளியிட்டார்.

1937 தொடக்கம் 1945 வரையான காலப்பகுதியில் சில புதினங்களைக் கிளார்க் எழுதியிருந் தாலும் 1946 ஆம் ஆண்டில் அவர் எழுதிய Astounding Seience Fiction என்ற நூல் தான் முதன் முதலில் விற்பனைக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1949 இல் அவர் எழுதி வெளியிட்ட "கோள்களுக்கிடையே பறத்தல்" (Inter Planetary Flight) என்ற நூல் பாமர மக்களும் படித்தறியும் விதமாக இருந்தது. இதில் புவியீர்ப்புப் புல அளவு, உந்தத் தேவையான கணக்கீடு, கோள்களைச் சென்றடைய தேவையான பாதை (Trajectory) போன்ற தொழில் நுட்பக் கூறுகளை தனியே இணைப்பாக அளித்திருந்தார். இவரது கற்பனை வளம் விண்வெளியில் புதிய தேடலுக்கு வித்திட்டது எனலாம்.

1952 இல் இவர் எழுதிய "விண்வெளியைக் கண்டறிதல்" (Exploration of Space) என்ற நூல்மூலம் இவரது புகழ் உலகெங்கும் பரவியது.

"புவியிலிருந்து பார்க்கும் பொழுது வானில் ஒரே இடத்தில் இருக்குமாறு செய்மதி எனப்படும் செயற்கைக்கோள்களை அமைத்து , உலகளாவிய பரப்பில் தொலைத்தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்தலாம்" என்ற புகழ் பெற்ற அறிவியல் கருத்தை இவர் 1945 இல் முன்வைத்தார்.

ஆர்தர் சி.கிளார்க் தான் எழுதிய பல புத்தகங்கள், கட்டுரைகள் ஆகியவற்றுடன் அவருடைய மூன்று விதிகளையும் (Three Laws) நமக்கு விட்டுச் சென்றுள்ளார்.

1. ஒரு சிறந்த அறிவியலாளர், ஏதாவது ஒன்று செயல்படுத்தக் கூடிய அல்லது முடியக்கூடிய ஒன்று எனக்கூறினால் அவர் சரியானவர், அப்படி இல்லாமல் எதுவும் செயல்படுத்த முடியாது என்றால் அவர் கூற்று சரியில்லை
2. முடியக்கூடிய ஒன்றின் எல்லையைக் கண்டறிய வேண்டுமென்றால் முடியாதது என்ற நோக்கினுள் ஓரளவாவது கடந்து பார்க்க வேண்டும்.
3. எந்த அறிவியல் தொழில் நுட்ப முன்னேற்றமும் மாயத்திலிருந்து (imagine) வேறுபடுத்த முடியாது.

1998 இல் இங்கிலாந்தில் இரண்டாம் எலிசபெத் அரசியாரால் "நைட்" பட்டம் பெற்றார். 2000 ஆம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் இலங்கைக்கு வருகை தந்த போது இப்பெருந்தகைக்கு "சேர்" பட்டம் அளித்துச் சிறப்பித்தார். இலங்கை அரசின் மிக உயரிய விருதான "ஸ்ரீ லங்காபிமான்ய" என்ற விருது 2005 ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டது.

2007 டிசெம்பர் 16 ஆம் நாள் தனது மூன்று விருப்பங்களை வெளியிட்டார். அதில் ஒன்றாக "இலங்கையில் நீடித்து நிலைக்கும் அமைதி திரும்ப வேண்டும்" என்பதே தனது விருப்பம் என்றும் தெரிவித்திருந்தார். தனது 90ஆவது வயதில் மார்ச் 19 ஆம் தேதி 2008 புதன்கிழமை அவர் கொழும்பில் இறையடி சேர்ந்தார்.

சாமினி அருந்தவராசா
தரம் 9C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை உணர்வாயா பெண்ணே!

ஆறாம் அறிவினைச் சிறப்பாக் பெற்றுக் கொண்ட மனிதன் அடிப்படை மனித உரிமைகளைப் புறந்தள்ளிவிட்டு பெண்களுக்கெதிரான வன்முறைகளை நடைமுறைப்படுத்தி பகுத்தறிவுடன் கூடிய மானிடத்தன்மைக்கு அப்பாற்பட்டு விலங்குணர்வோடு வாழ்ந்து வருகிறான். பெண்ணினத்தின் வாழ்வியல் முறமையானது பெரும் சவாலாகவேயுள்ளது. பாலியல் வன்புணர்வு, வன்கொடுமை, இல்லத்து வன்முறைகள் அறிவியல் வன்முறைகள் என வன்முறைக் கட்டங்களின் கதவுகள் திறக்கப்பட்டு பலவந்தமாகப் பெண்கள் அவற்றினுள் அடைக்கப்படுகின்றனர்.

"மங்கையராகப் பிறப்பதற்கு நல்ல
மாதவம் செய்திடவேண்டுமம்மா"

எனப் பெண்ணின் பிறப்பையே பெரும்பேறாகக் கருதிப் பாடினார். கவிமணி தேசிக விநாயம்பிள்ளை. சமுதாயம் முன்னேற ஆடவரைக் காட்டிலும் பெண்களின் பங்கு மகத்தானது. சமுதாயத்தில் பெண்களுக்கு என்று சிறப்பிடம் உண்டு. முற்கால தமிழ் மக்கள் தம் வாழ்வில் மகளிருக்கு தனியிடம் அளித்துள்ளனர் என்பதை சங்க நூல்கள் பறைசாற்றுகின்றன.

இறைவனது படைப்பில் ஆண், பெண் இருபாலாருமே சமம். ஆண்கள் உயர்ந்தவர்கள் என்றும் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் பேசுதல் பேதைமையாகும். பெண்கள் அன்பிலும் பண்பிலும் உயர்ந்தவர்கள். அன்பின் பண்பே பெண்மை அறத்தின் வடிவே பெண்மை கற்பின் உயர்வே பெண்மை, உயிரின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும், வாழ்விற்கும் பெண்ணே! இதனால் தான் பெண்ணை தியாக சின்னமாகவும், கடமையின் காப்பாகவும், பொறுமையின் இருப்பிடமாகவும், சக்தியின் வடிவமாகவும் வாழவைக்கும் தாயாகவும் போற்றினர்.

இத்தகைய சிறப்புமிகு பெண்களை இழிவுபடுத்தும் கொடுமைகள் இடைக்காலத்தே புகுந்தன. இவற்றில் தற்போது தலைவிரித்தாடும் பிரச்சினையாக சீதனப் பிரச்சினை காணப்படுகிறது. சீதனம் எமனுருவம் கொண்டுள்ளது. சீதனம் இன்மையால் ஆங்காங்கே இலைமறைகாயாக முதிர்கன்னிகள் ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம் என வாழ்கின்றனர். திருமண பந்தத்தில் இணையும் பெண்களுக்கு பெற்றோர்களால் கொடுக்கப்படும் தன அடுக்குகளே சம காலத்தில் " சீதனம்" எனப்படுகிறது. சீர்தனம் இன்று மருவி பேச்சுவழக்கில் சீதனம் என்று அருவருக்கத்தக்க ஒன்றாக ஆண்களால் நெறியாள்கை செய்யப்படுகிறது. காலப்போக்கில் பரிமாற்றக் கலாசாரமாக மாறிவிட்டது.

இச் சீதனம் மூலம் ஆணைப் பேரம் பேசி விற்பதும் வாங்குவதுமாக ஆகிவிட்டது. எதற்காக ஆணுக்கு சீதனம் பல லடசங்களில் கேட்கிறார்கள். அழகுக்காகவா?, தொழிலுக்காகவா?, கல்விக்காகவா?, இல்லை ஆண் என்பதற்காகவா? இன்று பெண்கள் ஆண்களை விடவும் முன்னேறி சாதனையில் சிகரம் அமைத்து விட்டனர். ஆண்களின் கோட்டைகள் என வரையறை செய்யப்பட்ட அனைத்திலும் பிரவேசித்து அரசாட்சி செய்கின்றனர். கல்வியில் இதமாய் குளிர்காய்கின்றனர். இயற்கையாகவே கிடைக்கப்பெற்ற பொறுமை, தியாகம், அன்பு, விட்டுக்கொடுப்பு, அரவணைப்பு போன்றவற்றால் அகிலத்தையே ஆளுகின்றனர். ஆண்களை மனிதனாக வாழ வைக்கின்றனர் பெண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி இருக்க எதற்காக ஆண்களுக்கு சீதனம் கொடுக்க வேண்டும். தமது இயலாமை, இல்லாமையை சரி செய்யவும் வீட்டின் ஏழ்மையைப் போக்கவும், சகோதரிகளுக்கு சீர் செய்யவுமே சீதனத்தை அடுக்குகளாக வரையறை செய்கின்ற ஆண் சமுதாயம் மனச் சாட்சியைத் தொட்டு செய்கிறதா? பெண் வீட்டாரும் இச் சீதனப் பிரச்சினைக்கு முக்கிய காரணம். வெளிநாட்டு வரன்களைத் திருமணம் செய்தால் வசதி வாய்ப்புக்களோடு வாழலாம். ஒரு பெண் பிள்ளை வெளிநாட்டில் திருமணம் செய்தால் இருக்கின்ற ஏனைய சகோதரிகளையும் மிக இலகுவாக வசதியோடு திருமணம் செய்து வைக்கலாம் என்கிற நப்பாசையோடு படிக்கின்ற பிள்ளையைக் கூட கல்விக்கு முழுக்குப் போட்டு விட்டு, இருக்கின்ற நில புலங்களை விற்று, அதிகூடிய வட்டிக்கு பணத்தைப் பெற்று இலட்சக்கணக்கில் மனமுவந்து சீதனம் கொடுக்கின்றனர். இது சில வேளைகளில் சாத்தியப்படுகிறது. பலவேளைகளில் பெண்கள் வாழ்வில் சேதாரத்தையே ஏற்படுத்தி விடுகின்றது.

ஆண்களின் அராஜகம் சீதனத்தில் பெண்களை அரசாட்சி செய்வதைத் தவிர்க்கவும் பெண்களின் கண்ணீர் ஓயவும் பெண்களே விழிப்புணர்வு அடையவேண்டும். “தொட்டிலை ஆட்டும் கையே உலகை ஆளும் கை” என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். உயர்நீதிமன்றம் முதல் ஜனாதிபதி வரை, பாடசாலைகள் தொட்டு பல்கலைக்கழகங்கள் வரை, உள்ளூராட்சி சபைகள் தொட்டு பாராளுமன்றம் வரை என நமது நாட்டை பொறுத்த வரையில் கூட பெண்களே இன்று முன்னணியில் திகழ்கிறார்கள். இத்தகைய சிறப்புக்களைப் பெற்றிருந்த போதிலும் அவர்களது உரிமைகளைப் பறிக்கும் பல நிகழ்வுகள் இன்னும் காணப்படுகின்றன. இவ்வாறே பெண்ணின் வாழ்வியலில் பெரும் திருப்புமுனையாக சீதனம் இருப்பது சமூகக் கொடுமை என்பதனையும் அது பெண்களைக் கட்டம் கட்டமாகக் கொடுமை செய்கிறது என்கிற உண்மையையும் இருபாலினத்தவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆண்களின் கொடுமைகளால் பெண்கள் தற்கொலை செய்தால் ஆண்களே கொலைகாரர் ஆகின்றனர். அன்பினால் அகிலத்தையே அரசாளுகின்ற பெண்கள் ஆணாதிக்கத்தின் தோலினை உரிக்க வேண்டிய முக்கிய தருணம் இது. சமுதாயத்தில் புரையோடி இருக்கின்ற சீதனக் கொடுமைக்கு பெண்களே முற்றுப்புள்ளியிட வேண்டும். ஆண்களிடமிருந்து பெண்களை மீட்க அனைத்துப் பெண்களும் ஒன்றிணைந்து போராட வேண்டும். தற்கொலை எதற்கும் தீர்வல்ல உணர்வாயா? பெண்ணே.....!

**லாஞ்சனா பரமேஸ்வரன்**
$13^{B}$ COM (2019)

வெற்றிபெறவேண்டும் என்று நினைத்துப் போராடாதே, தோல்வி அடையக்கூடாது என்று போராடு, உலகம் உன்கையில்.
-அலெக்ஸாண்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரம் ஒரு குடிமக்கள் காப்பியமாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி 3 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 6 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியை சங்கமருவியகாலமென்பர். இது ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளைக் கொண்டது.

காதல், வீரம், கொடை முதலிய சிறந்த உணர்ச்சிகளிலும் இயற்கை இன்பத்திலும் ஈடுபட்டிருந்த புலவர்களின் உள்ளம், அடுத்த சில தலைமுறைகளில் நீதிகளைப்பாடும் நிலைக்கு மாறியது. அந்தக் காலத்தை நீதிநெறிக் காலமென்பர்.

அப்போது நாட்டில் சேர, சோழ, பாண்டியரின் அமைதியான ஆட்சியில் ஓர் களங்கம் நேர்ந்தது என்றும், களப்பிரர்கள் புகுந்து நாட்டு மக்களின் அமைதியைக் கெடுத்தார்கள் என்றும் கூறுவார்கள். ஆகவே வாழ்க்கை தரும் இன்பங்களை பாடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போனமையால் சங்ககாலப் பிற்பகுதியில் ஏற்பட்ட சமூக சீர்கேடுகள் காரணமாகவும், பரத்தமை ஒழுக்கம், போரின் மீது கொண்ட வெறுப்பு, சமுதாயத்தில் காணப்பட்ட பஞ்சம் போன்றன சங்கமருவிய காலத்தில் அற நூல்கள் தோன்றக் காரணமாயின. அக்காலத்தில் தோன்றிய நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகின்றன. இக்காலத்திலேயே சிலப்பதிகாரம் என்னும் காப்பிய நூல் தோற்றம் பெற்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே காணப்படுகின்ற ஐப்பெருங் காப்பியங்களில் முதன்மையான இலக்கியமாக விளங்குவது சிலப்பதிகாரமாகும். இளங்கோவடிகளால் எழுதப்பட்ட இவ் இலக்கியம் மூன்று காண்டங்களிலும் முப்பது காதைகளிலும் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் உள்ளடக்கியுள்ளது. இளங்கோவடிகள் தமிழ் நாட்டில் முன்னரே காணப்பட்ட பல செவிவழிக் கதைகளை ஒன்றிணைத்து தமிழ் நாட்டு முன்னரே காணப்பட்ட பல செவிவழிக் கதைகளை ஒன்றிணைத்து தமிழ் நாட்டு மக்களின் வாழ்வினைப் பிரதிபலிக்கும் வகையில் இக்காப்பியத்தை எழுதியுள்ளார். காப்பியத் தலைவி கண்ணகியின் பிறப்பிடம் சோழ நாடு. அவள் வாழ்ந்து துன்புற்ற நாடு பாண்டிய நாடு. அவள் முடிவில் சேர்ந்ததும் அவள் புகழ் பரவக் காரணமாக இருந்ததும் சேர நாடு. ஆகவே காப்பிய புலவர் மூன்று நாடுகளையும் பாராட்டவும் மூன்று அரசர்களையும் புகழவும் இடந்தந்தது இக் காப்பியம்

இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் எனும் நூலை எழுதியதன் நோக்கமானது அக்கால மக்களின் வாழ்க்கையை மையப்படுத்திக் காட்டுவதாகும். அதாவது சங்கமருவிய காலத்தில் மக்களது அன்றாட வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. மற்றும் பரத்தமை ஒழுக்கத்தினை இல்லாமற் செய்தல். அதாவது இக் காப்பியத்தில் கோவலன் மாதவியை விட்டு தன் முதல் மனைவியாகிய கண்ணகியிடம் செல்கின்றான். அதன் பின்னர் மாதவி அறத்தினைக் கடைப்பிடிப்பதோடு தனது மகளான மணிமேகலையையும் பௌத்த பிக்குனி ஆக்கி அறத்தின் வழிவளர்க்கின்றாள். இதன்ஊடாக பரத்தமை ஒழுக்கம் இல்லாமற் போவதை காணக்கூடியதாகவுள்ளது. இந்நூலின் இன்னொரு நோக்கம், கண்ணகியை தெய்வமாக்கியமையாகும். கண்ணகி தனது கணவனான கோவலன் மாதவியிடம் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றின்பத்தினை அனுபவித்துவிட்டு வருவது தெரிந்தும் அவன் மீது கோபப்படாமல் அவனை மறுபடியும் தனது கணவனாக ஏற்றுக் கொள்கின்றாள்.

அது மட்டுமல்லாது கணவன் செல்வங்கள் அனைத்தையும் இழந்து விட்டு வந்தாலும் ஒற்றைக்கால் சிலம்பினைக் கொடுத்து பணம் தேடுவதற்கு(உழைப்பதற்கு) தானும் சேர்ந்து செல்வதாகவும் கூறப்படுகின்றது. தனது கணவன் கள்வன் இல்லை என்பதை நிரூபித்தாள். இதனால் செங்கோல் ஆட்சி தவறிய பாண்டியன் மட்டுமல்ல பாண்டிய நாடே அழிந்தது. இவ்வாறாக கண்ணகியை உயர்த்திக் காட்டுகிறார் இளங்கோ. கண்ணகி கற்புக்கரசியாக இருந்ததனால் அவளைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் இருந்து வருகிறது. அவ்வாறு கண்ணகியை தெய்வநிலைப்படுத்திய பெருமையும் இளங்கோவடிகளின் நூலின் நோக்கமாகும்.

மாதவியின் மகளான மணிமேகலை தனது தாயின் தொழிலினை பழகாமல் அறப்போதனைகளை கற்று மக்களுக்கு உபதேசம் செய்வதோடு சிறந்த பெண்மணியாக விளங்குகின்றாள். இவற்றினை பிரதான நோக்கங்களாகக் கொண்ட இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தினைப் படைத்துள்ளார். சிலப்பதிகாரத்தின் ஊடாக மூன்று விடையங்கள் கூறப்பட்டுள்ளன.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றலும்
ஊழ் வினை உறுத்து வந்து ஊட்டும்"

"சூழ் வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்"

இவ்வாறு சிறப்பு மிகு இலக்கியத்திலே கோவலன், கண்ணகி, மாதவி ஆகிய மூன்று பாத்திரங்களையும் முதன்மைப்படுத்தி கதையோட்டத்திற்கு உயிரளித்து உள்ளார் இளங்கோவடிகள். மாசாத்துவனின் மகனான கோவலனும், மாநாயக்கன் மகளான கண்ணகிக்கும் திருமணம் செய்து கொள்ளும் வேளையில் பலரும் வாழ்த்துரைக்கும் காட்சியுடன் கதை ஆரம்பமாகி விண்ணிலிருந்து கண்ணகி தெய்வமாக வரமளிப்பது வரையான பகுதி வரை கதையானது செல்கிறது. அது மட்டுமன்றி கோவலன் கண்ணகி ஆகிய இருவரின் சிறப்புக்களையும் கூறுவதற்கு இளங்கோவடிகள் மறக்கவில்லை. எனினும் இவ்விடத்தில் கண்ணகியின் சிறப்பினையே முதலில் கூறுகின்றார். அதன்படி குலத்தின் கொம்பாக திகழ்பவள், திருமகள் போன்ற அழகுடையவள், அருந்ததி போன்று கற்பிலே சிறந்தவள், பெண்கள் போற்றும் பண்புடையவள் என்று கண்ணகியைக் காட்டி நிற்கின்றார். அதேபோல் கோவலனை செல்வச் சிறப்பு பெற்றவன், மிகுந்த புகழ் பெற்றவன், பெண்களால் போற்றப்படுபவன் என அவனது சிறப்பு கூறப்படுகின்றது. இவ்வாறு இவர்கள் இருவரையும் அறிமுகம் செய்து அவர்கள் மூலம் கதையினை நகர்த்திச் சென்று இடையில் மாதவி என்னும் பாத்திரத்தையும் பயன்படுத்தி தனது கவிப்புலத்தை வெளிப்படுத்தியுள்ளார் இளங்கோவடிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகியின் வாழ்க்கை தமிழ்ப் பெண்களின் வாழ்விலும் அம்மன் கோவில்களிலும் பல மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. மதுரையில் கண்ணகி கொதித்து எழுந்து பாண்டியனிடம் தன் கணவன் கள்வன் அல்ல என்பதை நிறுவி ஊரை தீக்கு இரையாக்கிய நாள் வெள்ளிக்கிழமையாகும்.

இன்று வரை தமிழ் நாட்டு பெண்களுக்கு வெள்ளிக்கிழமை மிகப் புனிதமான நாளாக இருந்து வருகின்றது. கண்ணகி தன் காலில் பொன்னாலான சிலம்பு அணிந்திருந்தாள். கண்ணகி பொன் சிலம்பின் தெய்வமாக போற்றப்பட்டபின், தமிழ்ப் பெண்கள் காலில் பொன்னாலாகிய எந்த நகையும் அணிவதை விட்டுவிட்டார்கள். வெள்ளி நகையை மட்டுமே காலில் அணிவது வழக்கமாயிற்று. கண்ணகியின் வாழ்வில் பெரிய மாறுதல் நேர்ந்தது ஆடி மாதத்து வெள்ளிக்கிழமையில் ஆகும்.

இன்று தமிழ்நாட்டு மாரியம்மன் கோயில்களில் ஆடிமாதத்து வெள்ளிக்கிழமையும் மிகச்சிறப்பாகப் போற்றப்படுகின்றது. மாரியம்மனுக்கு நடைபெறும் ஆடல் பாடல்களில் சிலம்பு முக்கிய இடம் பெறுகின்றது. காளியே கண்ணகியாகப் பிறந்ததாகப் பிற்காலத்தில் கூறப்பட்டது. திரௌபதி கோயில்களில் திருவிழா நடக்கும் போது தீ மிதித்தல் ஒரு சடங்காகி விட்டது. கண்ணகி மதுரையை நெருப்புக்கு இரையாக்கிய போது அந்தணர் அறவோர் முதலியவர்கள் தப்பித்துச் சென்றதாக உள்ள கதையை அது அடிப்படையாகக் கொண்டது எனலாம். ஆடிமாதத்து வெள்ளிக்கிழமையும் மிகச்சிறப்பாகப் போற்றப்படுகின்றது. மாரியம்மனுக்கு நடைபெறும் ஆடல் பாடல்களில் சிலம்பு முக்கிய இடம் பெறுகின்றது. காளியே கண்ணகியாகப் பிறந்ததாகப் பிற்காலத்தில் கூறப்பட்டது. திரௌபதி கோயில்களில் திருவிழா நடக்கும் போது தீ மிதித்தல் ஒரு சடங்காகி விட்டது. கண்ணகி மதுரையை நெருப்புக்கு இரையாக்கிய போது அந்தணர் அறவோர் முதலியவர்கள் தப்பித்துச் சென்றதாக உள்ள கதையை அது அடிப்படையாகக் கொண்டது எனலாம்.

இளங்கோவடிகள், பத்தினியைத் தெய்வமாக்கி வழிபடும் உணர்ச்சிக்குத் தம் நூலில் வித்திட்டார். இரண்டாம் காண்டத்திலேயே கண்ணகியின் வாழ்வு முடிகிறது. அவ்வாறு அவளுடைய வாழ்வு முடிந்த பிறகும், கோயில் எழுப்பிப் பத்தினி வழிபாடு நடைபெறுவதை அவருடைய காப்பியத்தில் மூன்றாம் பகுதியில் விரிவாகக் கூறியுள்ளார். சிலப்பதிகாரம் என்று அவர் தம் காப்பியத்திற்குப் பெயர் அமைத்தார். கண்ணகியின் காற்சிலம்பே நூலுக்கு பெயர் தந்தது. அந்தச் சிலம்பை இளங்கோவடிகள் தம் நூலில் காட்டும் இடங்கள் சிலவே. முதற் காண்டத்தில் முதற்காதையில் கண்ணகியின் திருமணத்தின் போது அவளுடைய காலில் சிலம்பை காண்கின்றோம். பிறந்த ஊரைவிட்டு மதுரைக்குச் செல்ல வேண்டும் என்று கோவலன் கூறும் போது "சிலம்புகள் உள்ளன" என்று கண்ணகி குறிப்பிடுவதைக் கேட்கின்றோம். இரண்டாம் காண்டத்தில் மதுரையில் கோவலனுடைய வாழ்வின் கடைசிநாளில் அவன் இந்த சிலம்பில் ஒன்றை எடுத்துச் செல்வதையும் பொற்கொல்லன் அதைப் பார்ப்பதையும் காண்கின்றோம். கோவலன் கொல்லப்பட்ட செய்தி அறிந்த பின் கண்ணகி மற்றொரு சிலம்பை கையில் ஏந்திப் பாண்டியனிடம் செல்வதையும் முறையிடுவதையும் காண்கின்றோம். இறுதியில் மூன்றாம் காண்டத்தில் கண்ணகி தெய்வமான பின் சேர அரசனுடைய கண்ணுக்கு தோன்றும் காட்சியில் அந்தப் பொற்சிலம்பைக் காண்கின்றோம். இந்த அளவில் கதை ஆசிரியர் சிலம்பைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி காப்பியத்தை அழகுபடுத்திப் பெயர் சூட்டியுள்ளார். ஆசிரியர் அவர்கள் அரண்மனை முதலான இடங்களில் விளங்கும் நுண்கலைகள் மட்டும் அல்லாமல், காட்டிலும் மேட்டிலும் உள்ள மக்களின் கலைகளையும் போற்றினார். சிலப்பதிகாரம் தமிழ் நாட்டு மாந்தர்களை கவர்ந் துள்ளதாகவும், தமிழ் மக்களின் வாழ்க்கையை செப்பனிடுவதற்காகவும் தமிழ் மக்களின் மத்தியில் இருந்த கலை வடிவங்களை எடுத்துக்காட்டியும் அனைத்து மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் எளிய உரைநடையிலும் செய்யுள் அமைப்பிலும் காவியத்தினை படைத் துள்ளார் இளங்கோவடிகள். இது ஒரு புரட்சிக் காப்பியம் ஆகும். சிலப்பதிகாரம் குடிமக்களது வாழ்க்கையை மையப்படுத்தி எழுந்தமையால் குடிமக்கள் காப்பியம் என்று அழைக்கப்ப டுகின்றது. சிலப்பதிகாரம் தமிழில் எழுந்தமையால் தமிழ் மொழியே பெருமை அடைகின்றது.

உசாத்துணை நூல்கள்:- தமிழ் இலக்கிய வரலாறு-வி.செல்வநாயகம்
இளங்கோவடிகள் சிலப்பதிகாரம்-இராமசுப்பிரமணியம்
சிலப்பதிகாரம்

அபர்ணா தெய்வநாதன்
கலைப்பிரிவு (2019) 13C

உயர்ந்த லட்சியமுடையவன் பிறர் உயர்வடைய உதவுகிறான்.

உயர்ந்த லட்சியம் தான் மனிதரின் செயல்களுக்குச் சிறப்பைத் தருகிறது. ஆனால் ஊக்கமின்மை அவ்வுயர் லட்சியத்திற்கு உ லை வைக்கிறது.

எப்படி வாழ வேண்டும் என்று உனக்குத் தெரிந்தால் நீ பலகாலம் வாழலாம்.

வாழ்க்கை என்பது என்ன? அது ஆழ்கடல், அதிலே ஆன்மா, பாய் இழந்த மரக்கலம் போல வாழ்வின் இன்பம், துன்பம் எனும் அலைகளால் அலைகழிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களைப் பாதுகாப்பதில் குடும்பத்தினதும் சமூகத்தினதும் பங்கு

"பொய்யான உணர்ச்சியில் விளைந்த ஜனனம்
பொய்யான ஆசைகளால் உந்தப்பட்ட வாழ்க்கை
முடிவில் சாக விரும்பாமலே சாகும் அவலம்
இதுதான் மானிட ஜென்மம்"

என்பது சுவாமி விவேகானந்தர் பொன்மொழி ஆகும். இப்பொன்மொழியை உணர்ந்தால் வாழ்வில் பல துன்பங்கள் எழமாட்டாது. மானிடப்பிறப்பு என்பது மகத்தான ஓர் தூய பிறப்பு. இவையாவற்றுக்கும் காரணம் மனிதன் பகுத்தறிவு கொண்டமையே ஆகும். பகுத்து ஆராயும் திறமை கொண்ட மானிடன், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பெயரும் புகழும் படைக்கின்றான். பகுத்தறிவை மறந்தவனோ சீ! இவன் மிருகமா? என்று தூற்றப்படுகிறான் அந்த வகையில் மனிதப் பிறவியைப் பெற்றநாம் எம் வாழ்வில் மனிதத்தை நிலை நாட்டப் பழக வேண்டும். மனிதன் மனிதனாக இருப்பதற்கு சமயங்கள் பல விதிமுறைகளைக் கூறி எம்மை நல்வழிப்படுத்துகின்றது. அந்த வகையில் எல்லாச் சமயங்களும் பெண்ணை முதன்மைப்படுத்தியுள்ளமையை எம்மால் காணமுடிகிறது. உதாரணமாக "அம்மையே அப்பா அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்..." போன்ற வரிகள் பெண்ணை முதன்மைப் படுத்தியுள்ளமைக்கு ஆதாரமாகும்.

பெண் என்பவள் வாழ்வில் ஆதாரம். இவ் உலகத்தையே உருவாக்கி ஆளும் சக்தி அவளுக்கே உரியது.அன்பு, அறிவு, அழகு, கருணை இவற்றின் தொகுப்பாய் உள்ளவளே பெண்ணாவாள். பெண்ணின் பெருமையைக் கூறவந்த எழுத்தாளர்கள் இறுதியில் தோல்வியைத் தழுவிக் கொண்டனர். அன்றுமுதல் இன்றுவரை பெண்ணின் பெருமைக்கும் உயர்விற்கும் முற்றுப்புள்ளியே இல்லை, பெண் கால்தடம் பதிக்காத இடங்களே இல்லை. எங்கு பார்க்கிலும் எதனை நோக்கிலும் அது சக்தியின் உருவமடா.

சங்கம் கண்ட பெண்முதல் பாரதி கண்ட பெண்வரை நோக்கின், பெண்ணானவள் அடக்கமும் அமைதியும் நிறைந்து வீட்டின் மங்களப் பொருளாய் அமர்ந்திருந்து தன் குடும்பத்தை பேணிப் பாதுகாத்துப் பணிவிடை செய்பவளாகத் திகழ்ந்துள்ளாள். கற்பு அவளது வாழ்வின் இலட்சியக் குறியாய் உள்ளது. கம்பன் கண்ட சீதையின் கற்பு. சிலம்பு சொன்ன கண்ணகியின் கற்பு, திரௌபதியின் கற்பு என நாம் கூறிக்கொண்டே போகலாம். அன்றைய பெண்கள் கற்பால் உலகையே ஆண்டனர். உலகமும் பெண்ணைப் போற்றி வாழ்த்தியது.

" பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண்டாகப் பெறின்".

" தெய்வந் தொழா அள் கொழுநன் தொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது வள்ளுவர் தந்த குறள். அன்று கற்பால் பெண் உயர்ந்து உலகையே ஆண்ட குலத்தில், வந்த மானிடம் இன்று கற்புக்கு பாதுகாப்புப் போட வேண்டிய ஓர் அபாயமான சூழலில் சிக்கித் திணறித் தவிக்கின்றது.

20ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த கவிஞனாய் எழுந்த பாரதி பெண்ணடிமையைத் தகர்த்தார். வீட்டிற்குள் அடக்கப்பட்ட பெண்களை வெளிக் கொணர அயராது உழைத்தார். ஆண் பெண் இருவரும் சரிசமம் இவ்வுலகில் என்று அறை கூறினார். பெண் ஏட்டைத் தொடுவது பாவம் என இருந்த காலத்தை உடைத்து பெண்கல்வியை முதன்மைப் படுத்தினார். பாரதி பெண்ணின் திறமையை தீர்க்க தரிசனத்தோடு சொன்னார். "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்...." இது உண்மை. இன்று பெண்கள் சாதிக்காத சாதனைகள் எதுவுமே இல்லை எனலாம். விண்ணில் வண்ண நிலா தொடக்கம் மண்ணில் மங்கையின் ஆட்சியும், பதிவுகளும் ஆழப்பதிந்து, ஊடுருவி எல்லா பக்கமும் செழிப்புடன் வளர்வதனை அவதானிக்க முடிகின்றது.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணிய காலம் கெட்டொழிந்து விண்வரை போயிருக்கும் இவ்வேளையில் பெண்ணின் பாதுகாப்பு கேள்விக்குறியாய் வளைந்து விட்டது.பெண் பலதுறைகளிலும் ஊடுருவும் போது ஆணையும் சந்திக்க நேர்கிறது. போட்டியிட வேண்டிய தேவை உருவாகிறது. போட்டியின் இறுதியில் ஏற்படும் தோல்விகள் வன்முறையாக வெடிப்பதற்குச் சந்தர்ப்பம் உருவாகின்றது.

குடும்பத்திலும், சமூகத்திலும் பெண்ஓர் விளக்கு ஆகும். சமூகம் என்பது தனித்துவமான பண்பாடு, நிறுவனம் சார்ந்த தனிப்பட்டவர்களிடையே உள்ள தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டமைந்த ஒரு மனிதர் கூட்டம் சமூகம் ஆகும். இச்சமூகத்தில் பெண்ஓர் அங்கம்.

பெண்ணை தாய்க்குலமாக போற்றும் சமூகமும் எம் மத்தியிலும் உண்டு. அவ்விடத்தில் குடும்பம், சமூகம் தம்மாலான அர்ப்பணிப்புக்களை வழங்க வேண்டும். இல்லறத்துக்குரிய ஒவ்வொரு ஆணும் தன் மனைவி தன் தாய்க்கு ஒப்பானவள் என நினைத்து கணந்தோறும் வாழ்வானாயின் குடும்பம் மிளிரும். அதே போல் அவளைச் சூழவுள்ள சமூகம் பெண்ணிற்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கவல்லதாக அமையுமாயின் பெண்ணின் வாழ்க்கை மிளிரச்சந்தர்ப்பம் உண்டு.

சமூகம் இங்கு பங்களிப்புச் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு என்னவெனில் வன்முறை ஏற்படும்சந்தர்ப்பங்களை சூழ்நிலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். உதாரணமாக உடல், உள வன்முறை, பாலியல் வன்முறை, பொருளாதார வன்முறை இடம் பெறுவதனைத் தடுக்க வேண்டும். இடப்பெயர்வின் போது, அநாதைகள் மீது, கணவனை இழந்த பெண்கள் மீது, தொழிலாளிகள் மீது எனப் பல சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்றது. அந்தவேளை குடும்பம், சமூகம் விழிப்பாக இருந்து வன்முறைகளைத் தடுக்க வேண்டும். தவறுகள் சரியாக இனங்காணும் பட்சத்தில் தண்டனைகள் வழங்கப்பட்டு பெண்களைப் பாதுகாக்க வேண்டும். இதனைச் சமூகப் பெரியவர்கள், கட்சித்தலைவர்கள், மகளிர் அமைப்புக்கள் முன்னின்று செயற்படுத்த வேண்டும். பெண் அடிமைநிலையைத் தீர்க்க வேண்டும்.

பெண்ணை தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்த போதிய சிக்கன கடன் வசதிகளை சமூகம் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருக்கும் உயிர் கொடுத்த பெருமை தாய்மை எனும் வடிவிலேயே இருக்கிறது. அதனை ஆடவர்களுக்கு உணர்த்த வேண்டும் பெண்களுக்கான பாதுகாப்பை குடும்பத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் பெற்றுக் கொடுக்கிறார்களா? எனச் சிந்திக்க வேண்டும். அவர்களது உரிமைகள் சரியான வழியில் பாதுகாக்கப்படுகிறதா என ஒரு கணம் நினைக்க வேண்டும். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை கொண்டு பெண்ணை வதைக்கும் சூழலை ஆண் மாற்ற வேண்டும்.

தவறுகள் புரியும் ஆண்வர்க்கத்திற்கு எதிராகக் கண்டன அறிக்கைகள் வெளியிடுவதுடன் ஊடகங்கள், நிறுவனங்கள் விழிப்போடு பிரச்சாரங்கள் செய்ய வேண்டும்.

மென்மையெனும் உளம் படைத்து
உண்மையெனும் உறவு பூண்டு
தன்மை என்னும் குளிர்பரப்பி
உண்மையுடன் வாழ்பவளே பெண்.

என்பதனை சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் தாய்மையின் வடிவம் என்பதனை மனதில் இருத்தல் வேண்டும். கட்டவிழ்ந்த வன்முறைக்கு கட்டியம் கூறிட, சமூகமே ஒன்றிணைந்து எம் சந்ததி வாழ வழி சமைக்க வேண்டும்.

சாருகா ரவிச்சந்திரன்
தரம் 11E

கடமையை செய்யத்தான் வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. அது மனத்தை நன்னிலையில் வைக்கிறது. ஆனால் ஜெபம் செய்தல், தியானித்தல் பிரார்த்தனை செய்தல் ஆகியவை மிக அவசியம். இவைகளை காலையிலும் மாலையிலுமாவது கைக்கொள்ள வேண்டும். அச்சாதனம் படகிற்குள்ள சுக்கான் போன்றது. மாலையில் பிரார்த்தனையில் அமரும் போது அன்று அதுவரை செய்தவை நல்லனவா, கெட்டனவா என்பதை விவேகத்தால் உணரலாம். அதன்பின் அன்றைய மனநிலையை முதல் நாள் நிலையோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். பிறகு ஜெபம் செய்யும் போது தங்களது இஷ்ட தெய்வத்தை பற்றி தியானம் செய்யவேண்டும். தியானத்தின் போது இஷ்ட தேவதையின் முகமே முதலில் தோன்றும் ஆனால் பாதம் முதல் தலை வரையுள்ள வடிவம் முழுவதையும் தியானிக்கப் பழகவேண்டும். உன் வேலைகளைச் செய்வதோடு தியானமும் பழகாது இருப்பின் செய்வது விரும்பத்தகாததா இல்லையா என்பதை பிரித்தறிவது எப்படி?

– பகவத் கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியத்தகு விஞ்ஞானம்

விஞ்ஞானம் என்பது இன்று அனைவரையும் வியக்க வைத்துக் கொண்டு இருப்பதுடன் கண்மூடிக்கண்திறக்கும் நொடிக்குள் அனைத்தையும் மாயமாக்கி விடுகின்றது. அப்படிப்பட்ட விஞ்ஞானத்தை எடுத்து நோக்கும் போது விஞ்ஞானம் என்று சொல்லப்படுவது யாது என்றால் "குறிப்பிட்ட நேரத்திற்குள் மனித வலுவினால் செய்து முடிக்க முடியாது என்று சொல்லப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளையும் இயந்திர வலுவினைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய ஒரு விதமான செயற்பாடாகும்." இதுவே விஞ்ஞானமாகக் கருதப்படுகின்றது. இவ் விஞ்ஞான வளர்ச்சியினால் தொழினுட்ப வளர்ச்சி ஏற்பட்டு இத் தொழினுட்ப வளர்ச்சியினால் உலகமே "பூகோளக்கிராமம்" என்று அழைக்கக்கூடிய நிலைக்கு மாற்றமடைந்துள்ளது என்றால் மிகையாகாது. விந்தையான அரிய செயல்களைச் செய்து கொண்டிருக்கும் இவ் விஞ்ஞானமானது எல்லோரையும் ஈர்த்து தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க எண்ணுகின்றது.

உண்மையிலேயே விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்கும் சில வேற்றுமைகள் இருந்தாலும் பல ஒற்றுமைகளைக் காணக்கூடியதாக உள்ளது. எவ்வாறெனில் சமயரீதியில் திருஞானசம்பந்தர் மூன்று வயதிலே தேவாரம் பாடினார் என்பதனூடாக மூன்று வயதினையுடைய ஒரு குழந்தையால் அவ் வயதிலே தேவாரம் மட்டுமன்றி அதிக விடயங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என விஞ்ஞான ஆய்வு கூறுகின்றது. இச் செயல் இந்துமதச் செயற்பாட்டில் ஓர் அற்புதமான நிகழ்ச்சியாகக் காணப்பட்டாலும் அதனை ஆய்வு செய்து அதனை எடுத்துக்காட்டிய சிறப்பு வியத்தகு விஞ்ஞானத்தின் விந்தையே. இது மட்டுமன்றி அவ் விஞ்ஞான வளர்ச்சியானது மனித வாழ்க்கையிலே பெரிதும் செல்வாக்குச் செலுத்துவதுடன் பேரளவிலான திருப்பங்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

அந்தவகையில் எங்கு பார்த்தாலும் சரி எதனை எடுத்துக் கொண்டாலும் சரி அதாவது அவ் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக விஞ்ஞானம் சார்ந்த துறைகள் மட்டுமன்றி ஏனைய துறைகளும் விரிவடைந்துவிட்டன. விஞ்ஞானமானது பாடசாலை, வைத்தியசாலை, கோயில் விஞ்ஞானத்துறை, விவசாயத்துறை, கல்வித்துறை போன்ற பல துறைகளிலும் பதவி வகித்துக் கொண்டிருக்கின்றது. மற்றும் இவ் விஞ்ஞானமானது ஏனைய துறைகளிலே தனது தாக்கத்தை ஏற்படுத்தி அவற்றிற்கு ஒளியூட்டி பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. கல்வித்துறையிலே இவ் விஞ்ஞானமானது எவ்வாறு பங்கு வகிக்கின்றது என எடுத்து நோக்குவோமானால் ஆதி காலங்களில் மாணவர்களுக்குக் கல்வியைப்போதிப்பதற்காக ஆச்சிரமங்கள், திண்ணைப் பள்ளிகள் போன்றனவே காணப்பட்டன. அத்துடன் அவர்களுக்காக கற்றல் வாய்மொழி மூலமே இடம் பெற்றது. ஆனால் தற்போது விஞ்ஞானத்தின் துரித வளர்ச்சி காரணமாக பெரும்பாலான பாடசாலைகளில் கணனிக்கற்கை நெறி வசதிகள், ஆசிரியர்களது வரவை சரியான முறையில் பதிவதற்கு விரல் அடையாளமிடும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆசிரியரால் விவரிப்பதற்கு கடினமான பாடங்களை ஒளியுரு மின்முன்வைப்பை பயன்படுத்தி விபரித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு விஞ்ஞானம் துணைபுரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக விவசாயத்துறையில் விஞ்ஞானம் எவ்வாறு தன்னை அர்ப்பணிப்புச் செய்கின்றது, என எடுத்து நோக்கும் போது சற்று ஆச்சரியமாகத்தான் உள்ளது. விவசாயத்துறையில் விஞ்ஞானத்தின் செல்வாக்கு மேலோங்கி இருப்பதனை அவதானிக்க முடிகிறது. பயிர்களைப் பாதுகாப்பான முறையில் வளர்ப்பதற்கும், அவற்றை நன்றாகப் பராமரிப்பதற்கும், ஆதிகாலத்தில் மனிதவலுவே அதிகம் தேவைப்பட்டது. ஆனால் இன்று அவ்வாறான மனித வலுவை நீக்கி விஞ்ஞான வளர்ச்சி அவ்விடத்தில் முதன்மை பெற்று விளங்குகின்றது. எவ்வாறெனில் பயிர்களிடையே காணப்படும் களைகளை அகற்றுவதற்கு களைஅகற்றும் கருவி, பயிர்களை பூச்சிகளிடமிருந்து பராமரிப்பதற்கேற்றவாறான வண்டுக்கட்டுப்பாட்டுப் பொறி, பயிர்களிடையே சீரான இடைவெளிகளைப் பேணி அவற்றை சரியான முறையில் நடுவதற்கான ரோபோத் தொழினுட்பம், பயிர்களுக்கு சூரியஒளி, நீர், வாயு போன்றவற்றை சரியான முறையில் பெற்றுக் கொடுப்பதற்கான பச்சை வீட்டு வசதி, சொட்டு முறை நீர்வழங்கல் எனப் பல செயற்பாடுகளில் அங்கம் வகிக்கின்றது.

இவற்றிற்கும் மேலாக வங்கிச் சேவையை அவதானிக்கும் போது இச் சேவையானது மேலும் மேலும் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது. எவ்வாறெனில் ஆரம்பகாலங்களில் வங்கியில் பணத்தை வைப்புச் செய்வதாக இருந்தாலும் சரி, பணத்தை மீளப்பெறுவதாக இருந்தாலும் சரி வங்கியில் அதிக நேரத்தை செலவிட வேண்டியிருந்தது. இதனால் வாடிக்கையாளரும், வங்கி அதிகாரிகளும் அதிக இடர்களைப் பொறுப்பேற்க வேண்டியதொரு நிலை காணப்பட்டது. ஆனால் தற்போதைய விஞ்ஞான உலகத்தில் வங்கியும் சிரமமில்லாது இலகுவான கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ளக்கூடிய அளவிற்கு விரிவாக்கம் பெற்றுள்ளது. வங்கியானது மக்களுக்கு கடனட்டை, வரவட்டை, செலவட்டை போன்றவற்றை வழங்குவதன் மூலம் பல்வேறு முறையில் பாதுகாப்பான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றது.

இவற்றுக்கும் மேலாக இன்றைய காலகட்டத்தில் மனித உயிர்கள் அதிகம் பலிகேடாவதற்கான போக்குவரத்தில் கூட விஞ்ஞானம் வளர்ச்சி கண்டுள்ளது. அந்தவகையில் போக்குவரத்தில் ஏற்படும் இடர்பாடுகளைக்குறைத்துக் கொள்வதற்காக மூடியசுற்றுத் தொலைக்காட்சிகள் வீதியோரங்களிலே பொருத்தப்பட்டுள்ளன. போக்குவரத்து சட்டதிட்டங்களை மீறாது அவற்றை ஒழுங்கு முறையில் கடைப்பிடித்துக் கொள்வதற்காக தன்னியக்க முறையில் இயங்கும் ஒளிச்சமிக்ஞை விளக்குகளும் வீதியில் பொருத்தப்பட்டுள்ளன. இப்படி அனைத்துத் துறைகளை எடுத்துக் கொண்டாலும் அங்கு விஞ்ஞானம் சிறப்பிடம் வகிக்கின்றது என்பதனை மறைமுகமாக அன்றி நேரடியாகவே இனங்கண்டுகொள்ள முடியும்.

அத்துடன் விஞ்ஞானிகளாக சேர்.ஐசாக்.நியூட்டன், தோமஸ் அல்வா எடிசன், மைக்கல் பரடே, மார்க்கோணி, அலெக்சாண்டர் கிரகம்பெல், ஜோன் ஸ்டீவன்சன் போன்ற பல்லாயிரக்கணக்கான விஞ்ஞான வித்துவம் படைத்த அறிஞர்கள் தமது வாழ்க்கையை விஞ்ஞானத்திலேயே செலவிட்டுள்ளனர். அதுமட்டுமன்றி தோமஸ் அல்வா எடிசன் தனது வாழ்க்கையே விஞ்ஞானம் என்று இருந்துள்ளார். விஞ்ஞானத்தில் ஈடுபாடு கொண்டபடியாலேயே உலகமே போற்றுமளவிற்கு வானொலி, தொலைக்காட்சி, நீராவிக்கப்பல், மின்குமிழ் போன்ற பல்வேறு இயந்திர உபகரணங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை சற்று சிந்தித்துப் பார்க்கும் போது ஒவ்வொரு நிமிடமும் மனித வாழ்க்கையில் விஞ்ஞானம் எப்படி செயலாற்றுகிறது என்பதனை உணர முடிகின்றது. ஆனாலும் "ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது போன்று இந்த விந்தையான விஞ்ஞானத்திற்கும் இரு முகங்கள் உண்டு". அதில் ஒன்று சாதகமும் மற்றையது பாதகமும் ஆகும். இவ் விஞ்ஞானமானது எவ்வளவு நன்மைகளை வழங்கினாலும் அது விளைவையும் வழங்கி நிற்கின்றது. அந்தவகையில் இவ் விஞ்ஞானமானது எப்படிப் பாதகத்தை ஏற்படுத்துகின்றது என்று நோக்கின் மனிதவலுவைக் குறைத்து, அனைத்து இடங்களிலும் இயந்திரபாவனையை ஆரம்பித்து மக்களது வேலைவாய்ப்புக்களைக் குறைத்துவிட்டது. ஆரம்ப காலங்களில் நல்ல விடயங்களுக்காக சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வெடி மருந்து தற்போது அழிவுதரும் விடயங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் விவசாயத்துறையில் இயற்கை உரங்கள், பசளைகள் பயன்படுத்தப்பட்டமையால் ஆரோக்கியமான உணவைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆனால் இன்று கிருமிநாசினிகளும், உரங்களும் செயற்கையான முறையில் பயன்படுத்தப்படுவதால் ஆஸ்த்துமா, புற்றுநோய்கள், உயர்குருதி அமுக்கம், நீரிழிவு போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றுக்கு எல்லாம் அடிப்படைக்காரணமாக இருப்பது விஞ்ஞானமே.

ஆகவே நான் முன்பு கூறியது போன்று விஞ்ஞானத்திற்கு இரு முகங்கள் இருந்தாலும் அதனை சாதகமாகப் பயன்படுத்தினால் சாதகமான விளைவுகள் கிடைக்கும் என்பதையும் பாதகமாகப் பயன்படுத்தினால் பாதகமான விளைவுகள் கிடைக்கும் என்பதையும் ஆறறிவு ஜீவராசியான பகுத்தறிவுடைய மனிதர்களாகிய நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படி உணர்ந்து செயற்பட்டால் எதிர்காலத்தில் சிறந்ததோர் விஞ்ஞானியாகக் கூட உருவாக முடியும் என்பதை உணர்ந்து விஞ்ஞானத்தை சரியான முறையில் பயன்படுத்துவோம் எனத் திடசங்கற்பம் பூணுவோம்.

**சங்கவி.குணரட்னம்**
தரம்:– 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இசைக்கலை வளர்ச்சி

இராவணன் காலத்திலிருந்தே இலங்கையில் கர்நாடக இசை மரபு இருந்ததென்பதற்கு இலக்கிய ஆதாரங்கள் உள்ளன. சாமகானம் பாடிய இராவணன் இறைவனை மகிழ்வித்தமை இதற்கொரு எடுத்துக்காட்டாகும். சீதையைத் தேடி இலங்கை வந்த ஹனுமான், இராவணனது மாளிகையெங்கும் இசை ஒலித்துக் கொண்டிருந்ததைக் கேட்டதாக இராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. அக் காலத்தில் ஆண்களை விடப் பெண்களே இசைக்கலையில் மேம்பட்டவர்களாக இருந்தார்கள் என இராமாயணம் மூலம் அறியலாம்.

மணிமேகலை என்ற காவியத்தில் ஆபுத்திரன் என்பவன் வியாபாரம் செய்ய இலங்கையின் வடபாகத்தில் இருக்கும் மணிபல்லவம் என்றழைக்கப்படும் நயினாதீவை சென்றடைந்தான் என்று கூறப்படுகின்றது. அந்த வேளை அப்பகுதியை அரசாண்ட மன்னனால் ஆபுத்திரனுக்கு அளிக்கப்பட்ட விருந்தின் போது நாக கன்னிகையின் நடனம் ஆடப்பட்டதாகவும் கல்லினால் செய்யப்பட்ட ஒரு துளை வாத்தியம் வாசிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் காலத்தில் மகுடி பயன்படுத்தப் பட்டதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் கையாண்ட வாத்தியக்கருவி நாகசின்னம் என அழைக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகின்றது.

இந்தியாவின் தேவாரகாலம் என அழைக்கப்பட்ட காலப்பகுதியில் (கி.பி 7ம் 8ம் நூற்றாண்டு) இலங்கையிலும் இசைபாடும் அடியார்கள் இருந்துள்ளனர். சம்பந்தர், சுந்தரர் பாடிய கோணமலைப்பதிகம், கேதீச்சர பதிகங்கள் இதற்குச் சான்றாகும். அருணகிரிநாதரும் இலங்கையின் சில திருத்தலங்கள் மீது திருப்புகழ் பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பண்ணோடு பாடப்பட்ட தேவாரம், திருப்புகழ் போன்ற பாடல்கள் பிற்காலத்தில் கர்நாடக இசை வளர்ச்சிக்கு அத்திபாரமாக விளங்கியது எனலாம்.

இந்தியா சோழராட்சியின் கீழ் இருந்த போது இராஜராஜ சோழனால் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறைகள் வகுக்கப்பட்டன ஆலயங்களில் ஓதும் பாரம்பரியமும் இக்காலத்தில் தொடக்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையிலும் சோழரால் கட்டப்பட்ட கோயில்களில் அம்மரபு இருந்திருக்கலாம் எனக்கூறுவதற்கிடமுண்டு.

கி.பி 13ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியம் உருவான போது ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சியில் புராணபடலங்கள் இசைக்கப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. கோட்டை இராசதானிக் காலத்தில் இந்துக் கோவில்களில் அதிகாலையில் தேவார ஒலியும், பல்வகை வாத்தியங்களின் ஓசையும் கேட்டதாக அக்காலத்தில் எழுந்த சிங்கள சந்தேச தூதுப்பிரபந்தங்கள் குறிப்பிட்டுள்ளன.

இலங்கையை போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிசெய்த போது தத்தம் மதத்தைப் பரப்ப நாடகப் பாடல்களைத் தெரிவு செய்துள்ளனர். இவை இசையோடு பாடத்தக்க ஓசை நயமுடையவை. அக்காலத்தில் சைவசமயம் குன்றாதிருக்க பறாளை விநாயகர் பள்ளு முதலிய பிரபந்தங்கள் இயற்றப்பட்டுள்ளன. போத்துக்கீசர் கத்தோலிக்க மதத்தையும்; ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தையும் பரப்பினர். இதை நோக்காகக் கொண்டு இசையோடு பாடக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பள்ளு, சந்தியாகு அம்மானை என்பவை போர்த்துக்கீசர் காலத்திலும், மருதப்பக் குறவஞ்சி, திருச்செல்வர் அம்மானை என்பவை ஒல்லாந்தர் காலத்திலும் இயற்றப்பட்டன.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே கலைப்பாரம்பரியத் தொடர்புகள் இருந்து வந்துள்ளது. உதாரணமாக 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் அருணாசல க்கவிராயர் இராம நாடக கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். அந்தவேளை இலங்கையிலும் தமிழ்க் கீர்த்தனைகள், பதங்கள் இயற்றப்பட்டுள்ளன. அதேநூற்றாண்டில் வாழ்ந்த லோறன்ஸ் புலவர் மக்கள் பாடுவதற்காக கிறிஸ்தவ கீதங்களையும், மக்கள் நடிப்பதற்காக கிறிஸ்தவ நாடகங்களையும் எழுதியுள்ளார். அதேவேளை நாவலர் பெருமானாரும் புராணபடலம் மூலம் தமிழிசை வளர்ச்சிக்கு வித்திட்டார்.

பஞ்சவன்னத்தூது இணுவில் சின்னத்தம்பிப்புலவரால் இணுவிலில் எழுந்தருளியுள்ள கைலாயநாதன் மீது பாடப்பட்ட தூதாகும். இன்றும் விழாக்காலங்களில் இப்பாடல் பாடப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிழக்கிலங்கையில் தோன்றிய விபுலானந்த அடிகள் இந்தியாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தலைவராக இருந்த போது அங்கு இசைப் பேராசிரியரான க.பொன்னையாப்பிள்ளை அவர்களோடு கலந்து இசைத்தமிழ் ஆராய்ந்ததன் பயனாக யாழ் நூல் என்ற பெருநூலை எழுதி வெளியிட்டார். தமிழில் சிலப்பதிகாரம் வகித்த இடத்தை இசையில் இந்நூல் வகிக்கின்றது. யாழ்நூலானது பாயிரவியல், யாழுறுப்பியல், இசை நரம்பியல், பாலைத்திரிபியல், பண்ணியல், தேவாரயியல், ஒழிபியல் என்னும் 7 இயல்களின் கீழ் கோவைப்படுத்தப்பட்டுள்ளது. யாழ் நூலைத் தொடர்ந்து ஈழத்தில் பல இசை, இலக்கண நூல்களும், பிறவும் அறிஞர்களால் எழுதப்பட்டுள்ளன.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இசை ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டது. குறிப்பாக 1972 ஆம் ஆண்டில் அழகியற்கல்வியில் சங்கீதம் ஒரு கட்டாய பாடமாகச் சேர்க்கப்பட்டது. தற்போது தரம் 6 முதல் 13 வரையிலான கலைத்திட்டத்தில் கர்நாடக சங்கீதத்தையும் ஒரு பாடமாகக் கற்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற கர்நாடக சங்கீத பாடத்தில் 12, 13 இற்கான கலைத்திட்டத்தில் வாத்தியங்களை இசைப்பதற்கான புதியதோர் தேர்ச்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் ஒப்பாரி, அரிவி வெட்டும் பாடல்,நெல் குற்றும் பாடல், கப்பற் பாடல், உடுக்கு, பறைமேளம் போன்ற இசைகள் சிறு பாரம்பரியத்தையும், திருப்பள்ளியெழுச்சி, தேவாரம், திருவூஞ்சல் என்பன பெரும்பாரம்பரியத்தை பிரதிபலிக்கின்றன. உயர் பாரம்பரிய இசையிலே இலங்கைத்தமிழ் இசையும் தமக்கென சில தனித்துவங்களைக் கொண்டமைந்துள்ளது. இவற்றுள் சிறப்பாக குறிப்பிடத்தக்கது தவில் வாத்தியமாகும். தவில் இலங்கைத் தமிழருக்குரிய சிறந்த வாத்தியமாகத் தென்னிந்தியாவிலும் கணிக்கப்படுகிறது. இவ்விடயத்தில் இலங்கையின் தவில் தட்சணா மூர்த்தியின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்து வாணிபத்தால் வளம் சேர்க்க வந்த வைசியர் குலத்தோரினால் யாழ்ப்பாணத்தில் பெருங் கோயில்கள் கட்டப்பட்டன. இக் கோயில்களில் மங்கள வாத்தியங்கள் இசைக்க, இசை வேளாளர் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டு வண்ணார் பண்ணை சிவன் கோயிலின் சுற்றுப் புறங்களிலே குடியேற்றப்பட்டனர். இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவில், நாதஸ்வரம் வாசிப்பதில் விற்பன்னரார்களாக விளங்கினர். இவர்களே இன்றைய உயர் பாரம்பரிய இசையின் முன்னோடிகளுமாவர்.

இவர்களைத் தவிர ரி.வி பிச்சையப்பா, என் ராஜு, என்.கே பத்மநாதன், முருகப்பா, புத்துவாட்டி சோமு, என்.சண்முகரத்தினம், கே.கே அச்சுதன், டி.எஸ் ஆறுமுகம்பிள்ளை, இரத்னம், உருத்திராபதி, காமாட்சி சுந்தரம் போன்றோரின் பங்களிப்பும் அளப்பரியது.

இன்றும் இசைக் கலையை அனைவரும் கற்று அரங்கேற்றம் செய்வது உயர் நாகரிகம் என்று கருதுமளவிற்கு இசைக்கலை மக்களிடையே பிரபல்யமடைந்துள்ளது. இசைத்துறையில் வேலைவாய்ப்புப் பெற்றவர் எம்மிடையே பலர். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பணியாற்றியபடியே, இசைக்கச்சேரிகள் செய்யுமளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

மடோனா அன்ரன் சில்வெஸ்டர்
13B கலைப்பிரிவு (2019)

"ஆன்மீகம் என்பது தொடர்ந்த போராட்டம் வெற்றி கிடைக்கும் வரை, நமது சொந்த இயல்பை நாம் பற்றும் வரை தொடர்ந்து போராட வேண்டும். ஒரு நாள், இரண்டு நாள் போராட்டமோ, பல வருட போராட்டமோ அல்ல. பல பிறவிகளில் கூட நீடிக்கலாம்.!"

ஆன்மாவில் நிலைத்து நில். அது தான் இலட்சியம். அதை இன்னும் அடையவில்லை என்பது நமக்குத் தெரியும் பரவாயில்லை, நம்பிக்கை இழக்காதீர்கள். இலட்சியத்தை கீழே இழுக்காதீர்கள்!

– சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய நலம் பேணுவோம்.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்றார் ஔவைப் பிராட்டியார். இத்தகைய அரிய பிறவி எடுத்த மானிடர்கள், முறைப்படி வாழ்வதற்கு வழிகாட்டியாக அமைபவை ஒவ்வொரு மனிதராலும் பின்பற்றப்பட்டு வருகின்ற சமயங்களாகும். சமயம் என்பது வாழ்க்கை நெறியைக் குறித்து நிற்கிறது. ஆம் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிமுறைகளை வகுத்துத் தருவது சமயம்.

மனிதன் பண்படுத்திய வாழ்வை வாழ்வதற்கும், கஸ்டங்களின் போது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் இறை சிந்தனையை நோக்கித் தன்புலன்களைச் செலுத்தி வருகின்றான். அந்த வகையில் உலகில் பின்பற்றப்பட்டு வரும் சமயங்களில் இந்து சமயம் ஆதியும் அந்தமும் இல்லாதது. பல்வேறு ஒழுகலாறுகளை வரையறை செய்து மனிதரைப் பண்படுத்தி வருகின்ற உன்னதமான சமயம் ஆகும்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்ப் பழங்குடி" எனப் போற்றப்படுகின்ற தமிழர்கள் வணங்கிய சமயம் என்பதால் எமது சமயநெறி முறைகள் உயர் நலங்களை கொண்டமைந்து காணப்படுகின்றது. இத்தகைய சிறப்பு மிக்க எமது சமயநலங்கள் இன்று ஒருசில அற்பர்களினால் உதாசீனப்படுத்தப்படுவதால் ஒட்டுமொத்த இந்துக்களும் தலைகுனிய வேண்டிய பரிதாபம் ஏற்பட்டுள்ளது. எனவே எமது சமய நலன்கள் எவை? அவற்றைப் பேண வேண்டியதன் அவசியம் என்ன? என்பவற்றை நோக்க வேண்டியது அவசியமும் அவசர முமான ஒன்றாகும்.

"காலையில் எழுவோம் கடவுளைத் தொழுவோம்" என குழந்தைகளுக்கு வழிகாட்டும் நம் சைவ சமயம் மனிதனின் ஒவ்வொரு பழக்கவழக்கங்கள் வாயிலாகவும் உயர்ந்த சமய விழுமியங்களைப் போதிக்கின்றது. மனிதர்களாகிய நாம் சமூகங்களில் கூடிவாழும் போது அன்பு, சகிப்புத்தன்மை, பொறுமை, விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு, இன்சொல், உண்மை பேசுதல் மூத்தோரைக் கனம் பண்ணல், பிறர் நலன் பேணுதல், பணிவு போன்ற பண்புகளைக் கற்றுக் கொள்கின்றோம். இதனையே வள்ளுவரும் பின்வருமாறு கூறுகின்றார்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு"

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். மேலும் "தன்னுயிர் போல் பிறவுயிரை நேசி என்னும் வாக்கு; எமது உயிரில் நாம் கொண்ட அன்பு போல பிறவுயிர்களிலும் அன்பு கொள்ள வேண்டும் என்பதனைக் காட்டுகிறது.

அடுத்து எமது சமயமானது ஒழுக்கத்தை உயர்வாகப் போற்றுகின்றது. ஒழுக்கம் உயிரிலும் மேலானது எனவும் ஒழுக்கமிலான் கண் உயர்வு இல்லை எனவும் வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். "மாதா, பிதா, குரு" என்னும் மூவரும் மூன்று உலகங்கள் மூவகை அக்கினி, மூன்று வேதங்கள் என இவர்களின் சிறப்பைக் கூறி நிற்பது எமது சமயம். இவ்மூவரும் திருப்தி அடையும் போதுதான் மனிதனுடைய வாழ்வு நிறைவானதாக அமையும் என மனுஸ்மிருதி சுலோகம் கூறி நிற்கின்றது. இதனால் தர்மத்தின் பலனும், தெய்வவழிபாட்டின் பலனும் கிடைக்கின்றது. மூத்தோரை வழிபாடு செய்தல் சிறந்த விழுமியம் ஆகும். மேலானவர்களிடம் ஏற்படும் நல்லொழுக்கம், மரியாதை, பணிவு, உண்மை, சேவை செய்தல், பயமின்மை, நம்பிக்கை, கபடமின்மை என்பவற்றை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய நலன் பேணும் ஒவ்வொருவரும் இந்துசமயம் கூறுகின்ற மனிதாபிமானம் என்னும் பண்பினை உயிர்களுக்கு உணவளித்து மகிழ்வதில் காணலாம். கோயிற் திருவிழாக்களிலும், பொது இடங்களிலும் பசியோடு வருபவர்களுக்கும், விருந்தினர்களுக்கும் உணவளித்து வணங்குவது காலங்காலமாக பின்பற்றப்பட்டு வரும் சிறந்த செயற்பாடாகும். அன்ன சத்திரங்களும், தாகசாந்தி நிலையங்களும் இதற்காகவே அமைக்கப்பட்டன. இதனையே எமது நாயன்மார்களான சம்பந்தரும் அப்பரும் இறைவனிடம் படிக்காசு பெற்று மக்களின் பஞ்சத்தை போக்கி வாழ்ந்து காட்டிச்சென்றனர். வசதிபடைத்தோர் ஏழை எளியவர்களுக்குத் தான தர்மங்கள் செய்து வாழ வேண்டும். இதனையே "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்கிறது திருமந்திரம்.

சிவன் பால் சித்தம் வைத்த அனைவரும் சிவசின்னங்களை அணிந்து கொள்வதன் மூலம் எமது சமய நலத்தை பேணமுடியும். உருத்திராக்கம் அணிதல், திருநீறு அணிதல், திருவைந்தெழுத்தை ஓதுதல் என்பன சிறப்புக்குரியன. மூன்று விரல்களினால் திருநீறு அணிதலானது; சிந்தனை செய்தல், சொல், செயல் என்ற திரிசத்தியங்களை உணர்த்துகிறது. வெண்மையான நீறுபோல நம் உள்ளமும் தூய்மையானதாகவும் ஞானஒளி உடையதுமாக இருத்தல் வேண்டும் என்பதனை உணர்த்தி நிற்கிறது. எமது சமயத்தில் தீட்சை பெறுதல் என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். தீட்சை பெறுவதனால் எமது ஆன்மா தூய்மை பெறுகிறது. தீட்சை பெறுவதோடு தொடர்புடைய விரத அனுட்டானங்கள், ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் தன்மையை வளர்க்கின்றது. மனம், புத்தி தூய்மை அடைவதுடன் உடல் ஆரோக்கியமும் இதனால் மேம்படுகிறது.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் திருமந்திர வார்த்தையை நம்மில் கடைப்பிடிப்போர் எத்தனை பேர்? சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். சமய நலம் பேணும் ஒவ்வொரு சமயியும் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும். "ஆவுரித்துத் தின்றுலையும் புலையரேனும் கங்கை வார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணக்குங் கடவுளாரே" என அப்பர் சுவாமிகள் சிவன்பால் சித்தம் வைத்த அனைவரும் ஒரு குலத்தவரே என வணங்கினார். "மக்கள் சேவையே மகேசன் சேவை" எனப்படுகிறது. இறைவன் ஒவ்வொரு உயிர்களிலும் அமர்ந் துள்ளார். எனவே பிறருக்கு நாம் செய்யும் சேவை எம் இறைவனுக்கு செய்வதாக அமைகிறது. இத்தகைய உயரிய விழுமியப் பண்புகளைக் கருதியே அறிஞர் பேனாட்ஷோ, "விழுமியம் இல்லாத கல்வி விதையில்லாத மரம், நீர் இல்லாத ஓடை, மணல் மீதெழுந்த மலை" எனக் கூறியுள்ளார்.

இத்தகைய சிறப்பு மிக்க இந்து சமயத்திலே பிறந்ததையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும். நடைமுறை வாழ்க்கைக்கு அமைந்த எமது சமயத்திலே உயரிய பல பண்புகளைக் கற்றறிந்து அவற்றை கடைப்பிடித்து வாழ வேண்டும். அத்தோடு பிறரையும் அதன்படி வாழ வழிகாட்ட வேண்டும். இச்செயற்பாடு இப்பிறவிக்கு மட்டுமல்ல மறுபிறப்புக்கும் நாம் செய்யும் புண்ணியமாகும். எனவே இந்துக்களாகிய நாம் சமய நலன் பேணி எமது வாழ்வை வளமாக வாழ்ந்து இறைபணி செய்து இறந்தும் இறவாத புகழ் பெற்று வாழ்வோம்.

கனிமொழி அமிர்தராசா
தரம் 13C கலைப்பிவு (2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க காலம் தந்த கடையெழு வள்ளல்கள்

சங்க கால இலக்கிய வரலாற்றிலே மன்னர்கள் பற்றிய குறிப்புக்கள் பல இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ளதை யாவரும் அறிய முடியும். இதனடிப்படையில் சங்க காலத்தில் ஆட்சி செய்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களிலும் பார்க்க சிறப்பாக ஆட்சிபுரிந்த மன்னர்களாக கடையெழு வள்ளல்களைக் கூறமுடியும். இந்தக் கடையெழு வள்ளல்களைக் குறுநில மன்னர்கள் என்று தமிழ் இலக்கியங்கள் மேன்மைப்படுத்துகின்றன. அந்தவகையில் தென்னிந்தியாவில் பல குறுநிலங்களையும், மலைப்பிரதேசங்களையும் ஆட்சி செய்தவர்களே இந்தக் கடையெழு வள்ளல்களாவார். இம் மன்னர்கள் வீரத்தினாலும் கொடைச்சிறப்பினாலும் தம் ஆட்சியை வலிமையாக மாற்றி அமைத்தனர் எனக் கூறலாம்.

சங்ககால இலக்கியங்களில் ஏழு குறுநில மன்னர்களின் ஆட்சி சிறப்புமிக்கதாக இருந்துள்ளது. இவ்வாறு சங்ககாலத்திலே வாழ்ந்த கடையெழு வள்ளல்களாக பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்கள் காலம் பல கடந்தும் இன்றும் தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்து வருகின்றனர்.

**பேகன்**

கடையெழு வள்ளல்களில் முக்கியமானவனாக பழனி எனும் பொதினி மலைக்கு தலைவனாக விளங்கியவன் பேகன் ஆவான். இவன் வீரத்திலும் கொடையிலும் மிகச்சிறந்து விளங்கினான். இவனது உள்ளமானது இரக்க குணம் படைத்ததாகும். அதே சமயம் வீரமும் குடி கொண்டிருந்தது. கொடையளிப்பதில் சிறந்து விளங்கிய இவன் ஒரு நாளில் நகர் வலம் செல்லும் போது கருமேகங்கள் சூழ்ந்திருந்த வானத்தைக் கண்டு மயில் ஒன்று நடனமாடுவதைப்பார்த்தான். அப்போது அந்தமயில் குளிரில் நடுங்குவதாக எண்ணிய பேகன் உடனே தன் பொன்னாலான ஆடையை எடுத்து அந்த மயிலின் மேனியில் போர்த்து விட்டுச் சென்றான். இதுவே இவனது கொடைத் தன்மைக்கு எடுத்துக்காட்டாகும். மேலும் இவனது கொடைத்தன்மை பற்றி கபிலர், பரணர் போன்றோர் பாடல்களைப்பாடி இவனிடமிருந்து பொன்னாலான தாமரை மற்றும் பரிசில்களைப் பெற்றுக் கொண்டமையும் இவனது கொடைச்சிறப்பின் உச்ச வெளிப்பாடாகும்.

**பாரி**

சங்க இலக்கியங்கள் போற்றுகின்ற கடையெழுவள்ளல்களில் மிகச்சிறப்பு டையவன் பாரி என்ற பெயரை உடைய பறம்பு மலை நாட்டின் மன்னனாவான். வீரத்தையும் கொடையையும் தன் நெஞ்சில் கொண்டவனாகத் திகழ்ந்தான். தமிழ் மீது அளவற்ற காதல் கொண்டவன்; பண்பிலே சிறந்தவன்; இரப்பவர்களுக்கு இல்லையெனக் கூறாது வாரி வழங்கும் சிறப்புடையவன். பாரி என்றவுடன் எல்லோருக்கும் நினைவில் வருவது முல்லைக்குத் தேர் கொடுத்ததாகும். ஒரு நாள் காட்டு வழியே சென்று கொண்டிருந்த பாரி போகும் வழியில் ஒரு முல்லைக் கொடி செழித்து வளர்வதைக் கண்ணுற்றான். ஆனால் அது படர்வதற்கு ஒரு பற்றுக்கோடு இல்லாததைக் கண்டு மனம் வருந்தினான். உடனே சிறிதும் தயக்கம் இன்றி தான் வந்த தேரின் குதிரைகளை கழற்றி விட்டு அத் தேரினையே அந்த முல்லைக் கொடிக்கு பற்றுக்கோடாக விட்டான். இவ்வாறு இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைக்குத் தேர் அளித்ததால் முல்லைக்குத் தேர் அளித்த வள்ளல் என்று யாவராலும் போற்றப்படுகிறான்.

### ஆய்

பாரி மன்னனின் பின்பு சிறப்பான ஆட்சியும் கொடைத் தன்மையும் நிறைந்த மன்னனாக ஆய் எனும் நாமம் கொண்ட வள்ளல் ஆயர் குலத்திலே பிறந்து ஆய்குடி எனும் இடத்தினை அரசாட்சி செய்து சிறப்புமிக்கவனாகத் திகழ்ந்தவன். இவனை ஆய்ஆண்டிரன் எனும் மறுபெயர் கொண்டும் அழைத்தனர். மலைகளில் வாழ்ந்த பல யானைகளைப் பிடித்துவந்து அவற்றை போருக்கு ஏற்றவாறு தயார்படுத்தி பலம் கொண்ட யானைப் படையைக் கொண்டவன். மேலும் புலவர்கள் மற்றும் பாணர்களுக்கு குதிரைகளைப் பரிசாக கொடுத்து மகிழ்தவன். ஒருநாள் நீல நிற நாகம் ஒன்று புகழ் மிக்க ஆடையொன்றை இவன் முன்பு விட்டுச் சென்றது. அதை எடுத்து தான் அணிந்து அழகுபார்க்காமல் முன்னே வளர்ந்திருந்த ஆலமரத்தின்கீழ் குடி கொண்டிருந்த சிவனுக்கு அவ்வாடையை அணிந்து மனம் மகிழ்ந்தான் இவ்வாறு ஆய் மன்னன் இலக்கியங்களில் மேன்மையுற்று விளங்குகிறான்.

### காரி

ஆய் மன்னனைத் தொடர்ந்து " காரி" எனும் மலாடு நாட்டை ஆட்சி செய்த மன்னன் வள்ளல்களில் மிகமுக்கியவனாக குறிப்பிடப்படுகிறான். அந்தவகையில் மலையான் திருமுடிக் காரி மற்றும் கோவற்கோமான் எனும் பெயர்களாலும் சிறப்பிக்கப்படுகிறான். வீரத்தில் மட்டுமின்றி கொடையளிப்பதிலும் சிறப்புடையவனாகத் திகழ்ந்த இவன் தன்னிடம் இரப்பவர்கள் மனம் நோகாதவாறு அவர்கள் மனம் விரும்பியதை கொடுத்து அவர்களை பாராட்டி மகிழ்பவன். தன்னைப் புகழ்ந்துபாடும் புலவர்களையும் ஆதரித்து அவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களை அழித்து மகிழ்பவன். இவனிடம் உள்ள குதிரைகள் சிறப்பு வாய்ந்த வலிமை மிக்கவை. இவை காரியின் மன விருப்பத்திற்கு ஏற்ப செயற்படக் கூடியது. மூவேந்தர்கள் கூட காரியிடம் உதவி கேட்டுவரும் அளவிற்கு சிறப்பு வாய்ந்த இவனிடம் எப்போதும் வெற்றி இருப்பது உறுதியாகும். இவ்வாறு வீரத்திலும் , கொடையிலும் சிறந்து விளங்கியமையை இலக்கிய ஆதாரங்கள் கூறி நிற்கின்றன.

### நள்ளி

காரியைத் தொடர்ந்து சிறப்பான வள்ளல்களில் அமைவுறுபவர் நள்ளி எனும் பெயரை உடைய கண்டீர நாட்டினை ஆட்சி செய்த மன்னனாவான். தன்னிடம் பொருள் கேட்டு வருவோருக்கு வேறெங்கும் சென்று இரந்திடாதபடி கொடை பல அளித்திடும் ஈரம் படைத்த உள்ளமுடையவனாவான். விலங்குகளை வேட்டையாடுவதில் விருப்பமுடையவன். ஒரு நாள் காட்டில் வேட்டையாட சென்றிருந்த போது பசியோடிருந்த புலவருக்கு மானொன்றை வேட்டையாடி அதனை நெருப்பில் வாட்டி உணவளித்து தண்ணீர் கொடுத்து தாகத்தையும் தீர்த்தான். இது மட்டுமின்றி தன் நாட்டு மக்களின் குறையறிந்து உதவி புரிபவனாகவும் சங்ககாலத்திலே ஆட்சி புரிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓரி

சங்கம் போற்றிய கடையெழுவள்ளல்களில் கொல்லி மலைநாட்டினைச் சேர்ந்த ஓரி என்ற வள்ளலும் சிறப்பானவன். வில் வித்தைளில் சிறந்த தேர்ச்சியுடையவன். இராமனுக்கு நிகரான வில் வீரன் என்று இவனைக் கூறுவர். ஒரு முறை தனது வில்லில் இருந்து செலுத்திய அம்புபட்டு ஒரு சமயத்தில் ஐந்து உயிர்கள் கீழே விழுந்தன. மேலும் விரைந்து செல்லும் குதிரையை தன்வசம் கொண்டவன். இசையால் வசமாகும் உள்ளம் படைத்த இவன் வீரத்தின் சிகரமாகவும் கொடைச் சிறப்பில் ஈடு இணை இல்லாதவனாகவும் ஆட்சி புரிந்தான் என இன்றும் அவன் புகழ் பாடுகின்றது இலக்கியங்கள்.

## அதியமான்

கடையெழு வள்ளல்களில் இறுதியாக ஆட்சி புரிந்தவனாக அதிகர் எனும் குலத்தில் பிறந்த அதியமான் எனப்படும் அதிகன் ஆவான். தகடூர் எனும் நாட்டினை தன் ஆட்சி மையமாகக் கொண்ட இவன், பாரி போன்று இரப்பவர்களுக்கு இல்லையென கூறாது கொடையளிப்பவன். அதியமான் என்றதும் நினைவுக்கு வருவது ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த வள்ளல் என்பதாகும். ஆம் ஒரு முறை கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை பெற்றிருந்த அதியமான் அதனை ஔவையாரை உபசரித்த பின்பு கொடுத்தான். அதனை உண்ட ஔவை அதியமானை நோக்கி இக்கனி சுவையாக உள்ளது. எங்கே பெற்றாய் எனக் கேட்ட பொழுது அதியமான் ஔவையை நோக்கி இக் கனியானது நூறு வருடங்களுக்கு ஒருமுறை கிடைப்பது. இதை உண்பவர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள். இதனால் இக்கனியை உங்களிடம் அளித்தேன். இனி நீங்கள் வாழுவீர்கள் தமிழும் வாழும் என்ற பதிலானது அவனது கொடைத் தன்மையின் உச்ச வெளிப்பாடாக அமைவதைக் காணலாம்.

இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் அதாவது சங்க இலக்கியங்கள் குறு நில மன்னர்களான கடையெழு வள்ளல்களின் வீரச்சிறப்பினையும், கொடைச்சிறப்பினையும் அழகாகக் கூறியுள்ளன. இவர்களின் மறைவு கவலையை கொடுத்தாலும் இன்றும் எம் உள்ளங்களில் வாழ்ந்து வருகிறார்கள். காரணம் அது அவர்களின் நெஞ்சில் குடி கொண்ட வீரம், கொடை என்ற பண்புகளினாலேயாகும்.

லக்ஷிகா ஜெயமோகன்
தரம் 13[A] கலைப்பிரிவு (2019)

> உங்களுடைய நரம்புகளை முறுக்கேற்றுங்கள் சமக்குத் தேவை,
> இரும்பைப் போன்ற தசைகளம், எஃகைப் போன்ற நரம்புகளும் தான்
> சுய வலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்!
>
> – சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யுளை மனனம் செய்வது எப்படி

செய்யுள் என்பது பாட்டாகும். பாடல்கள் புலவர், பண்டிதர், கவிஞர், பாமர ஜனங்கள் போன்றோர்களால் படைக்கப்பட்டு வருகின்றமை கண்கூடு. பாரதிக்கு முன்னர் தோன்றிய செய்யுள்களை நாம் நோக்கும் போது அது மரபு வழி கவிதையாக அமைந்திருப்பதனை காணமுடியும். மரபு வழி கவிதைகளை நாம் நோக்கின் இறுக்கமான யாப்பு வடிவத்திற்கு எழுதப்பட்டவையாக இருக்கும். அத்தகைய செய்யுள்களை எம்முன்னோர்கள் மனனம் செய்து பிறருக்கு ஒப்புவித்துள்ளார்கள்.

முற்காலத்து கல்விமுறையை நோக்கும் போது மனப்பாடம் செய்தல் என்பது முக்கிய பகுதியாக இடம் பெற்றுள்ளது. அக்காலத்தில் தமிழ் படிக்கும் மாணவர்கள் “நிகண்டு” எனும் நூல் முழுவதையும் மனப்பாடம் செய்துள்ளார்கள். நிகண்டினை மனப்பாடம் செய்தவர்கள் பிற்காலத்தில் பெரிய தமிழ் அறிஞர்களாகவும் வித்துவான்களாகவும் இருந்துள்ளனர்.

கத்தி ஒன்றை மீண்டும் மீண்டும் தீட்டும் போது கூர்மை ஏற்படுவது போல நம் புத்தியை தினமும் கூர்மையாக வைத்திருப்பதற்கு மனப்பாடம் செய்தல் எனும் பகுதி பெறுமதி மிக்கது என்பதனை யாரும் மறுக்க முடியாது.

இன்று எம்மத்தியில் செய்முறைக்கல்வி முதன்மை நிலை வகித்தாலும் மனப்பாடம் செய்யும் முறையை நாம் பின்தள்ள முடியாது. ஏனெனில் எம்தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியங்கள் எண்ணற்றவை. அவ் இலக்கியங்கள் யாவும் செய்யுளாகவே காணப்படுகின்றன. செய்யுள்களுக்கு பிற்பட்ட காலங்களில் உரை எழுதப்பட்டாலும், மூலமாகத் திகழும் செய்யுளை நாம் மனனம் செய்ய தவறக்கூடாது.

அந்த வகையில் மனனம் செய்யும் பகுதியை நாம் பொருள் பட விளங்கிக் கொள்ள வேண்டும். பின்னர் குறித்த செய்யுளை மீண்டும் மீண்டும் பார்த்துச் சொல்ல வேண்டும். பார்த்துச் சொல்லும் போது பொருளுக்கு ஏற்ப பதம் பிரிக்க வேண்டும். பின்னர் மனனம் செய்ய முற்பட வேண்டும். மனனம் செய்யும் வேளை செய்யுளில் காணப்படும் எதுகை, மோனை சொற்களையும், சந்தங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். குறித்த செய்யுளின் பொருளை மனதிலே காட்சிப்படிமமாக நிறுத்த வேண்டும். அதன் பின்னர் குறித்த செய்யுளை மனனம் செய்வது இலகுவாக அமையும்.

மேலும் செய்யுளை மனனம் செய்வதற்குரிய வழிகளாகப் பின்வருவனவற்றையும் குறிப்பிடலாம். மனனம் செய்தவற்றை இன்னொருவருக்குச் சொல்லிப்பார்த்தல். மனனம் செய்ததை எழுதி பின் சரிபார்த்தல். இரண்டு இரண்டு வரிகளாக மனனம் செய்தல். ஒற்றை வரிகளாக மனனம் செய்தல். ஒத்த ஓசைச்சொற்களை தொடர்புபடுத்தி ஞாபகம் வைத்தல். பொருளை நன்கு விளங்கிய பின் மனனம் செய்தல்.

ஒரு செய்யுள் ஊடாக மேற்கூறிய கருத்திற்கான உண்மைத் தன்மையை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
ககன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்.
தேனருவி திரையெழுப்பி வானின் வழி யொழுகும்
செங்கதிரோன் தேர்க்காலும் பரிக்காலும் வழுகும்
கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்.
குற்றால திரிகூட மலையெங்கள் மலையே.

இங்கு வானரம் கானவர், தேனருவி, கூனல் என்ற சீர்கள் அடிகளின் தொடக்கத்தில் இடம்பெற்றன. இங்கு "ன" என்ற எழுத்து எதுகை அணிஆகும். இவ் எதுகை அணியை மனதிற் கொண்டு மனனம் செய்யமுடியும் அதேபோல் ஒவ்வொரு அடிகளின் இறுதிச் சீரும் ஒத்த ஓசையில் கொஞ்சும், கெஞ்சும், அழைப்பர், விழைப்பர், ஒழுகும், வழுகும் என்று அடிதோறும் முடிவதனால் அதை மனதில் நிறுத்தியும் செய்யுளை மனனம் செய்ய முடியும். அல்லது மலை ஒன்றில் இடம்பெறும் காட்சியை மனக்கண் முன் கொண்டு வந்து செய்யுளை மனனம் செய்யமுடியும். இப்பாடலில் சந்தம் நிறைந்து காணப்படுவதால் ஓசை கூட்டி பாடியும் மனனம் செய்யலாம்.

இவ்வாறு செய்யுகளை மனனம் செய்வதற்கு பல வழிகள் உண்டு. நாம் செய்யுள்களின் பொருளை உணர்ந்து கொள்ளமுன்னர் கடினம் என்று நினைப்பதால் பல செய்யுள்களின் ஆழ்ந்த பொருள்களையும், நயத்தையும், இலக்கிய உண்மைகளையும் அறியத் தவறுகின்றோம்.

ஆகவே சிறுவர்களாகிய நாம் எம்மொழிக்கு கிடைக்கப்பெற்ற இச்செய்யுள்களை விருப்புடன் கற்று எம்மொழியின் பெருமையையும் இனிமையையும் அறிந்து கொள்வோமாக!

ஹம்லின்றுக்லி றிச்சேட் மோகனதாஸ்
தரம் 9E

எடுத்துக் கொண்ட காரியம் முடியும் வரை
பிறிதொன்றின் மேல் மனதைச் செல்ல விடாது
தவிர்த்து கருமமே கண்ணாயிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பினால் அகிலத்தை வெல்வோம்

"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

இவ்வுலகில் யாவரும் இறைவனின் குழந்தைகளே. எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற பாடலடிக்கமைய அக் குழந்தை மெய்யறிவில் மனதைச் செலுத்தி கட்டளைகளை சிந்தனையில் இருத்தி வெற்றிப் பாதையில் பயணிக்க அன்பே அத்திபாரமாய் அமைகிறது. வைய கந்தன்னில் எமைப் பெற்று உணவூட்டி, சீராட்டிப், பாராட்டி வளர்த்த தாய், தந்தையரிடமிருந்து அன்பைப் பெறுகின்ற குழந்தைக்கு நல்ல சிந்தனைகளையும் கருத்துக்களையும் எண்ணங் களையும் அன்பினால் உணர்த்துகிறார்கள்.

உண்மையான வாழ்வின் வலிகளை உணர்ந்து உலகிலே வெற்றி நடை போட அன்பு உன்னதமாய் அமைவதனால் மனிதனுக்கு அவசியமாகிறது. ஒவ்வொரு மனிதனின் வெற்றியின் பின்னே அன்பு, காதல், முதலாய மெல்லுணர்வுகள் காணப்படுகின்றன. அந்தவகையில் இறைவன்பால் பிறந்து பெற்றவன்பால் வளர்ந்து, பிள்ளை குருவினதும், சகாக்களினதும் அயலவர்கள், உறவினர்களினதும் அன்பினால் முழு மனிதனாய் உருவெடுக்கிறது.

பிள்ளையின் ஆற்றல், திறன், இலட்சியம் யாவும் கல்வியினால் வெளிக் கொணரப்படுவதற்கு குருவின் ஆசியும், அன்பும் அவ்விடத்தில் முதன்மை பெறுகிறது. ஆம்! மனிதன் உலகை வெல்ல அவனுக்குக் கிடைத்த ஓர் அற்புதமான உறவே குரு . மனிதனானவன் எப்போதும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு அத்துனை ஆற்றல்களையும் ஒன்று சேர இணைத்து மனித குலத்தின் உணர்விற்கும் உயிர்ப்பிற்கும் ஓர் அடிக்கல்லை உருவாக்கிக் கொள்ள குருவின் அன்பு துணை நிற்கிறது.

கானல் நீரில் கருகிக் கொண்டிருக்கும் இளம் தளிரைப் போல தனிமையில் தவியாய் தவிக்கும் குழந்தை அன்பு செலுத்த யாருமில்லையேயாயின் அக்குழந்தை உலகை வெல்ல முடியாமற் போய்விடும். ஆதலால் உலக உறவுகளில் அன்பு செலுத்தி, இயலாதவனை அணைத்து வாழ்தல் நம் அனைவரதும் கடமையாகும். அதுமட்டுமின்றி உலகில் காணப்படும் ஆயிரக்கணக்கான சிற்றுயிர்களையும், ஐந்தறிவு ஜீவன்களையும் அன்பினால் அரவணைத்து வாழ்தல் வேண்டும். இதனையே பாரதியார் " உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்.."என அழகாகக் கூறுகிறார்.

அன்பின் பெருமையால் உயர்ந்தோர் பலர். புறாவின் உயிரைக் காப்பாற்ற தன்னுடலையே கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி, முல்லைக்கு தேர் கொடுத்த பாரி மன்னன், புளோரஸ் நைற்றிங் கேல் அம்மையார் போன்றோர் அன்பினால் உயர்ந்த உத்தமர்கள் ஆவர். ஆகவே மனிதனாகப் பிறந்த நாம் எமது தாய் தந்தையரின் அன்பையும் குருவின் அன்பையும் கடவுளின் அன்பையும் பெற்று வாழ்ந்தால் உலகினை வென்று வாழ்வில் உயர முடியும்.

" அன்பே அகிலத்தை ஆளும் ஆத்ம சக்தி"

**அபிசயா துரைசிங்கம்**
**தரம் 9A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியங்களில் அறிவியல் சிந்தனைகள்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்தமொழி நம் தமிழ் மொழியாகும். தமிழ் தமிழர்களின் தாய்மொழியாகும். தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மை மொழியாகும். தமிழ் உலகின் செம்மொழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒரு மொழியாகும். தென்னிந்தியாவில் தமிழ் நாட்டிலும், சிங்கப்பூரிலும், இலங்கையிலும் அதிகளவு பேசப்படும் தமிழ் மொழி தென்னாபிரிக்கா, துபாய், மலேசியா, பிஜீ போன்ற நாடுகளிலும் சிறிதளவில் பேசப்படுகின்றது. ஒரு மொழியை தாய்மொழியாகக் கொண்டு பேசும் மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட மொழிகளின் பட்டியலில் தமிழ் மொழி பதினொட்டாவது இடத்திலுள்ளது. கிட்டத்தட்ட 7 கோடியே 70 இலட்சம் மக்களின் தாய்மொழியாகத் தமிழ் மொழி காணப்படுகின்றது.

தமிழ் மொழியானது பெருமையையும் வரலாற்றையும் வில்லிபராதமானது பின்வருமாறு எடுத்தியம்புகின்றது."பிறந்தது பொதிகை மலையிலே, கிடந்தது தென்னவன் புகழிலே, தவழ்ந்தது வைகை ஏட்டிலே, வேகாது நிலை பெற்றது நெருப்பிலே, நடந்தது புலவர்களின் நினையிலே, பயின்றது ஞனத்தின் கொம்பிலே" தமிழ் மொழி அதன் சிறப்பால் கொடுத்தமிழ், முத்தமிழ், இயற்றமிழ், நாடகத்தமிழ், தமிழிசை, செந்தமிழ், பக்தியின் மொழி என தமிழறிஞர்களால் பலவாறு அழைக்கப்படுகின்றது. ஒரு மொழியானது செம்மொழி எனும் உயரிய அந்தஸ்தைப் பெற வேண்டுமாயின் அது நீண்டகால வரலாற்றை கொண்டிருக்க வேண்டும். வேறொரு மொழியிலிருந்து தோன்றிய ஒருகிளை மொழியாக இருக்கக் கூடாது. அம் மொழியானது நீண்டகால இலக்கிய வரலாற்றை கொண்டிருக்க வேண்டும். அவ்வாறான தமிழ் மொழியின் இலக்கியய வரலாற்றை எடுத்து நோக்குவோமாயின்.

தமிழ் மொழி கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டது. தமிழறிஞர்களும் மொழியியலாளர்களும் தமிழ் மொழியினதும் தமிழ் இலக்கியத்தினதும் வரலாற்றை ஏழு காலப்பகுதிகளாக வகைப்படுத்தியுள்ளார்கள். அவையாவன சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஜரோப்பியர் காலம் இருபதாம் நூற்றாண்டு காலம் போன்றவையாகும். இதில் சங்ககாலத்தல் பதினெண்மேற்கணக்கு நூல்களும் பதினெண்கீழ்கணக்கு நூல்களும் தோன்றின. சங்கமருவிய காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களும் தோன்றின. பல்லவர் காலத்தில் பன்னிரு திருமுறைகளும் தோன்றின. சோழர் காலத்தில் ஐம் பெரும் காப்பியங்களும் ஐஞ்சிறு காப்பியங்களும் தோன்றின. நாயக்கர் காலத்தில் தனிப்பாடல்கள் தோற்றம் பெற்றது. ஜரோப்பியர் காலத்திலும் 20ஆம் நூற்றாண்டுக்காலத்திலும் தற்போது காணப்படுகின்ற நாவல்கள், சிறுகதைகள், புதுக்கவிதைகள், திறனாய்வு, நாடகம் போன்றவையும் தோற்றம் பெற்றன. இவ்வாறு தேன்றிய ஒவ்வொரு இலக்கியமும் தான் தோன்றிய சமுதாயத்தை உள்ளடக்கமாகக் கொண்டு திகழ்கிறது. அதனால் தான் "இலக்கியம் காலத்தின் கண்ணாடி" எனக் கூறப்படுகின்றது. அதாவது எந்தவொரு இலக்கியமும் தான் தோன்றிய சமுகத்தின் பண்பாட்டையும் நாகரிகத்தையும், பழக்கவழக்கத்தையும், அறிவையும், நம்பிக்கையையும் எடுத்துரைப்பனவாய் அமைகின்றன. அவ்வாறான தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள அறிவியல் சிந்தனைகளை எடுத்து நோக்குவோமாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியங்களில் அணுவில் இருந்து அண்டம் வரையிலும் அறிவியல் பரவிக் கிடக்கின்றது. தமிழ் இலக்கியங்கள் வெறுமனே இரசனைக்குரிய ஒன்றாக மட்டும் இல்லாவிடில் அவை அனுபவம் அறிவியலும் கலந்த படைப்புக்களாகவே ஆக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் பழமைவாழ்ந்த திருக்குறளின் சிறப்பை ஔவையார் அறிவியல் கலந்து சிந்தனையுடன் பின்வருமாறு கூறுகிறார்.

"அணுவை துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்"

அதாவது அணு என்பது கண்களுக்குப் புலப்படாத மிகச் சிறிய மூலக்கூறு என்பது அறிவியலின் கண்டுபிடிப்பு அதனையே ஔவையார் பல நூறு ஆண்டுகளிற்கு முன்பே அணுவைப் பிளப்பது குறித்துப் பாடியுள்ளார்.

"இடையின்று அணுக்களெல்லாம் சுற்றுமென இயல் நூலார் இசைத்தல் கேட்போம்...."

என்று பாரதி அணுக்களின் அசைவுகள் பற்றிப் பாடியுள்ளார். அணுக்கள் தமக்குள் இடைவெளியின்றி சுத்துமென விஞ்ஞானிகள் இன்று கண்டுபிடித்ததை அன்றே பாரதி தன் பாடலில் பாடியுள்ளார்.

இவ்வுலகம் எவ்வாறு எதிலிருந்து தோன்றியது என ஒரு காலத்தில் அறிஞர்களுக்குக் கூட சவாலாக இருந்த விடயத்தைப் பரிபாடலானது, உலகம் ஐம் பூதங்களில் இருந்து தோன்றிய எனக் கூறிவிட்டது. மேகம் கடல்நீரைப் பெற்று பின் அதனையே மழையாகப் பொழிகின்றது என்பது அறிவியல் கண்டுபிடிப்பு ஆனால் இதனையே பல ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய பரிபாடலானது பின்வருமாறு கூறுகின்றது.

"நிறைகடல் முகத்துராய் நிறைந்து நீர் ததும்பும் தம் பொறை தவிர்ப்பு அசைவிட"

அன்றைய மனிதன் கண்ட கனவை இன்றைய அறிவியல் முன்னேற்றம் நனவாக்கியுள்ளது. "தேடல் இருக்கும் இடத்தில் தான் வெற்றி கிடைக்கும்" அது போலத்தான் பறவையை கண்ட மனிதன் தானும் பறக்க எண்ணினான். அவ்வாறு ரைட் சகோதரர்களினது தேடலினாலும் முயற்சியினாலும் ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இந்த ஆகாய விமானத்தைப்பற்றி சங்க இலக்கியங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. "வலவன் ஏவா வானூர்தி" என்ற சங்கப்பாடலிலே வானூர்தி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதைப்போலவே நெஞ்சை அள்ளும் முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலனோடு ஆகாயத்திலிருந்து வந்திறங்கிய விமானத்தில் ஏறிச் சென்றதாக பின்வருமாறு கூறுகின்றார்.

"வானவூர்தி ஏறினாள் மாதோ காணமலர் புரிகுழல் கண்ணகி தானெனன்"

இதைப் போலவே பல சிறப்புக்கள் நிறைந்த கம்பநாடனால் இயற்றப்பட்ட கம்பராமாயனத்தில் விமானம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது இராவணன் புஸ்பக விமானம் எனும் வானில் பறக்கும் இயந்திரத்தைக் குபேரனிடம் போரிட்டுப் பெற்றதாகவும் அதே விமானத்தில் இராமனின் மனைவி சீதையை கவர்ந்து சென்றதாகவும் கம்பர் கூறியுள்ளார்.

உலகம் தட்டையானது என எண்ணிய மக்களின் அறியாமையை நீக்கி உலகம் தட்டைவடிவானதல்ல அது உருண்டை வடிவமானது என்பதனை 15ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் போலந்து நாட்டைச் சேர்ந்த நிக்கலஸ் கொப்பர்னிக்கஸ் கண்டுபிடித்தார். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையே நம் பொய்யாமொழிப்புலவர் ஏறத்தாழ 2035ஆம் ஆண்டுகளிற்கு முன்பே தன் திருக்குறளில் கூறிவிட்டார். அதை பின்வரும் குறளில் எடுத்துரைத்துள்ளார். தட்டைவடிவானதல்ல அது உருண்டை வடிவமானது என்பதனை 15ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் போலந்து நாட்டைச் சேர்ந்த நிக்கலஸ் கொப்பர்னிக்கல் கண்டுபிடித்தார். ஆனால் இதையே நம் பொய்யாமொழிப்புலவர் ஏறத்தாழ 2035ஆம் ஆண்டுகளிற்கு முன்பே தன் திருக்குறளில் கூறிவிட்டார். அதை பின்வரும் குறளில் எடுத்துரைத்துள்ளார்.

"சுழன்றும் ஏர் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவேதலை"

வான வெளியில் மிகப்பெரிய விண்மீனான சூரியனைப் போற்றினார்கள் நம் முன்னோர்கள் அதற்காக வழிபாடுகளையும் நிகழ்த்தினார்கள். சிலப்பதிகாரம் "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என சூரியனைச் சிறப்பித்து போற்றியுள்ளார். சூரியனே தமிழர்களின் நாள்,கோள் ஆகும். அதாவது தமிழர்கன் சூரியனை வைத்தே கணித்தார்கள். சூரியனை சுற்றியுள்ள பாதையை சூரியவட்டம் என்று தமிழர்கள் கூறியுள்ளார்கள். அதனையே புறநானூறு செஞ்ஞாயுற்றுச் செலவு எனக் கூறுகின்றது. தாவரங்களின் வளர்ச்சிக்கு சூரிய ஒளி அத்தியாவசிய சிலப்பதிகாரத்திலே பல ஆண்டுகளிற்கு முன்பே கூறிவிட்டனர் அதனை இளங்கோவடிகள் பின்வருமாறு கூறிகின்றார்.

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடான் திகிரி போல் பொற் கோட்டு
மேரு வலந்திரிதலான்"

சூரிய சந்திரகிரகணத்தின் போது கிரகணம் தோன்ற முன்பே மக்கள் உணவு உண்டுவிடுவார்கள். ஏனெனின் கிரகணத்தின் போது உணவு உண்டால் அவர்கள் இறந்து விடுவார்கள் என தமிழர்கள் நம்பினார்கள். அதனையே அறிவியல் கூறியது கிரகணத்தின் போது சூரிய, சந்திரன் தோன்றாது எனவே உணவின் மீது பற்றீரியா போன்ற நுண்ணங்கிகள் தோன்றி அவை உணவை பழுதடையச் செய்யும் என்றும் அவற்றை உண்பவர்களின் உடல் நலத்திற்கு தீங்கு ஏற்பட்டு அதனாலயே அவர்கள் இறக்கின்றார்கள். பௌர்ணமி நிலவானது தைப்பூசத்தன்றும், மாசி மகத்தன்றும் தோன்றுவதைக் காணலாம். இக்கணிப்பு எந்த ஆண்டிலும் மாறாது. இதனை தமிழ் இலக்கியமான கம்பராமாயணம் கூறுகின்றது. கம்பராமாயணத்தில் வால் நட்சத்திரம் தூமகேது எனும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆழத்தைப் பொறுத்தே அமுக்கம் அமைகின்றது என பஸ்கால் என்ற அறிஞர் கண்டறிந்தார். ஆனால் இதனையே ஔவையார் "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் தாழமுகவாது" என கூறியுள்ளார்.

இன்று பல அறிஞர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட அறிவியல் கண்டுபிடிப்புக்களை பல ஆண்டுகளிற்கு முன்பே நம் தமிழ் இலக்கிய அறிஞர்கள் தம் இலக்கியங்களில் கூறிவிட்டார்கள். இவ்வாறு பல சிறப்புக்கள் நிறைந்த தமிழ் மொழியை நாம் உயிருக்கு மேலாக போற்றி வாழ வேண்டும்.

**கோபிகா விஜயரஞ்சன்**
**தரம் 12B COM (2019)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு மூலம்
# இயற்கைச் சூழலைப் பாதுகாப்போம் (பேச்சு)

இறைவனின் பாதம் பணிந்து எட்டுத்திக்கும் புகழ்பரப்பும் செந்தமிழாம் என் தாய் மொழிக்கும் என் உரைகேட்க அமர்ந்திருக்கும் இனிதான உள்ளங்களுக்கும் என் முதல் வணக்கம். நான் இன்று உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக் கொண்ட விடயம் கூட்டுறவு மூலம் இயற்கைச் சூழலைப் பாதுகாப்போம் என்பதாகும்.

"மணி நீரும் மண்ணும் மலையும் அணி நிழற்காடும் உடையது, அரண் தெளிந்த நீரும் பரந்த நிலமும் உயர்ந்த மலையும் அடர்ந்த காடும் இயற்கை அரண்களாகும்" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் வள்ளுவப் பெருந்தகை இயற்கைச் சூழல் பற்றிக் கூறியுள்ளார். ஒவ்வொருவரும் தமக்காகவும் பிறருக்காகவும் தமது திறன்களையும் கருவிகளையும் தம்முடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து அதனால் ஏற்படும் இலாபமோ நட்டமோ எதுவானாலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளும் முறை தான் கூட்டுறவு என்பதாகும். பிறரோடு எந்த அளவிற்கு ஒருவன் ஒத்துழைக்கின்றானோ அந்த அளவிற்கே அவனது நலன் பாதுகாக்கப்படுகின்றது. என்ற உண்மையைக் கூட்டுறவு அமைப்புகள் உணர்த்துகின்றன.

சபையோரே!

இயற்கை தான் மிகப்பெரிய பள்ளிக்கூடம். அது தினம் தினம் எமக்குப் பாடம் நடத்துகின்றது. பாடக் கட்டணம் பெறாத ஆசானாகத் திகழ்கிறது. இயற்கை மலர்களும், மரங்களும், ஆறுகளும், கடல்களும், பறவைகளும், விலங்குகளும் நமக்கான வாழ்க்கைப் பாடங்களைத் தினமும் கற்றுக் கொடுத்துக் கொண்டே தான் இருக்கின்றன. கற்றுக் கொடுக்கும் ஆசான்களைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமையல்லவா? மனித இனம் தம் சுற்றம் குற்றமற்று வாழச் சுற்றுச் சூழலினால் ஆளப்பட வேண்டும். யூன் மாதம் ஐந்தாம் திகதி உலக சுற்றுச் சூழல் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நாளை சுற்றுச் சூழல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஒரு தினமாக ஐக்கிய நாடுகள் பயன்படுத்தி வருகின்றன.

மனித இனம், விலங்கினம், பறவையினம், தாவர இனம், கடல் வாழ் உயிரினங்கள் என அனைத்தின் நல்வாழ்வும் இந்தச் சுற்றுச் சூழலின் சமநிலையில் தான் உள்ளது. இச்சுற்றுச் சூழலின் சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் சுற்றுச்சூழலை மட்டுமன்றி உயிரினங்களின் வாழ்வுக்கும் அச்சுறுத்தலாகவும் ஆபத்தாகவும் அமைந்து விடுகின்றன. நவீன விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக சுற்றுச்சூழல் இன்று மாசடைந்து வருகின்றது. சுற்றுச்சூழலை பேணிப்பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயற்படத் தவறியதன் விளைவுகளை மனித குலம் இப்போது தாராளமாக அனுபவிக்கத் தொடங்கிவிட்டது. கூட்டுறவு மூலம் பள்ளிகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற சுற்றுச் சூழல் மன்றம் தேசிய பசுமைப்படை மூலமாக மாணவர்களிடம் சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. மாணவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது மரக்கன்று ஒன்றை நடச் செய்து பராமரிக்கச்செய்தல், அரச விழாக்களின் போது ஒரு மரக்கன்றாவது நடச்செய்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரங்களைத் தயாரிக்க கற்றுக் கொடுத்தல், மாணவர்களை குழுக்களாக்கி கூட்டுறவு மூலம் இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல், இயற்கைச் சூழலின் அவசியத்தைக் கூறி மாணவர்களை இயற்கை ஆர்வலர்களாக மாற்றுதல் போன்ற பணிகளைப் பள்ளிகள் செய்ய வேண்டும்.

"ஒரு சந்ததி போகின்றது, மறு சந்ததி வருகின்றது. பூமியோ என்றென்றைக்குமாக நிலைத்திருக்கின்றது" என்றார் கார்ல் கேசன். எனவே நிலைத்து நிற்கும் பூமி தான் மனித குலம் மட்டுமன்றி அனைத்து உயிர்களுக்குமான சாமி. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழல் பேணுதல் போன்றவற்றை ஒவ்வொரு தனிமனிதனும் கூட்டுறவாகச் சேர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பொலித்தீன், பிளாஸ்ரிக் பயன்படுத்துவதை இயன்ற அளவு குறைத்திட முயற்சிக்க வேண்டும்.

பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கும் இயற்கையை அனைவரும் ஒன்றிணைந்து சோலை வனமாக மாற்றுவோம். மரங்கள் நிறையும் போது நம் மனங்களும் நிறையும். மரம் மனிதனின் மூன்றாவது கரம். மரம் நடுவோம். மனம் தொழுவோம். மாற்றம் நம்மிலிருந்து தொடங்கட்டும். இயற்கையை நேசிப்போம். இயன்றதை யாசிப்போம். உயிர்களைக் காக்கும் உணவை வழங்கும் பயிர்களைக்காக்கும் பணி செய்வோம். தொழில் வளர்ச்சியினால் மாசுக்கள் கூடும். எழில் மிக்க இயற்கை எமனாக மாறும். விஞ்ஞானத்தின் விளைவு என்றுரைத்து அஞ்ஞானத்தை வெளிப்படுத்தாது தவித்திடும் வழிகளை தக்கபடி எடுத்து தவித்திடும் உயிர்களைக் காத்திடுவோம்.

இயற்கை அளித்த வளங்கள் எல்லாம், எல்லா உயிர்களுக்கும் உடைமை அதை மாசு படுத்தல் முழு மடமை. சுற்றுப்புறச் சூழலைக் காத்து இனிதே வாழ்வது நம் கடமை. சூழலைப்பாதுகாப்பது மனித பிறவியினர் ஒவ்வொருவரினதும் கட்டாயக் கடமை. நமது வாழ்க்கைக்கு இயற்கையையே நாம் நம்பி இருப்பதால் சூழலைப் பாதுகாத்தல் வேண்டும். நாம் இயற்கையைப் பாதுகாத்தால் நம்மையும் ஒரு நாள் இயற்கை பாதுகாக்கும். சுத்தமான காற்றையும் சுத்தமான நீரையும் வளம் கொழிக்கும் வாழ்வையும் பெறலாம். நோயின்றி வாழலாம். இதனை அடையும் வரை அயராது உழைக்க வேண்டும். இல்லையேல் எமது எதிர்காலச்சமுதாயம் நோய்களாலும், பட்டினியாலும் நலிவடைந்து நொந்து தூளாகிப்போய்விடும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் கூட்டுறவாக ஒன்று சேர்ந்து இயற்கைச்சூழலைப் பாதுகாத்து சுகமாக வாழ்வோம் என உறுதி பூணுவோம். சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவோம், என்று கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

ஷயானா நரேந்திரராஜா
தரம்:- 7F

நீ நடந்து செல்ல பாதை இல்லையே என்று கலைப்படாதே
நீ நடந்தால் அதுவே ஒரு பாதை

- ஹிட்லர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் நயந்த சில்லையூர் செல்வராஜன் கவிதை

## முகில் விடு தூது

ஈழத்து இலக்கிய உலகில் எல்லோராலும் அறியப்பட்ட பல்கலைவேந்தர் எனப் புகழப்பட்ட சில்லையூர் செல்வராஜன் ஓர் சிறந்த கவிஞராவர். அவரது கவிதைகள் கேட்போர் மனதில் ஆழப்பதிவதோடு ஒரு காட்சிப்படிமத்தையும் வாசகர் முன்னே காட்டி நிற்கும் தன்மை வாய்ந்தது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஆஸ்தான கவிஞராகவும் கவியரங்குகளின் நாயகனாகவும் விளங்கிய சில்லையூர் செல்வராஜன் அவர்கள் சிறந்த நாடகப் பிரதிகளை எழுதியவர். அது மட்டுமல்ல நாடகங்களில் நடிப்பதோடு ஐந்திற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் கதாநாயகனாகவும் நடித்துள்ளார்.

எமது கவிஞரை பற்றி நிறையவே குறிப்பிடலாம் ஆக்க இலக்கியம், விமர்சனம், நடிப்பு, அறிவிப்பு, பத்திரிகையில் பாடல் என பல துறைகளிலும் சிறப்பு பெற்ற இவரைப் பல்கலை வேந்தர் என பட்டம் வழங்கி கௌரவித்தமை முற்றிலும் பொருத்தமானது.

அவரது சில்லையூர் செல்வராஜன் கவிதைகள் என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து "முகில் விடுதூது என்ற கவிதையை" இலக்கிய விமர்சனம் செய்வதற்காக எடுத்துள்ளேன். மிக அருமையான கவிதை. இன்றைய இளைஞர்கள் வெளிநாடு என வெளிக்கிட்டு படும் அவஸ்தையை அழகான கவிதை வரிகளுடாக வெளிப்படுத்துகிறார்.எமது தமிழ் இலக்கியங்களிலே கிளி, அன்னம், மயில் போன்றவற்றைத்தூதாக அனுப்பிப்பாடி உள்ளனர்.

இந்தக் கவிதையை பாருங்கள் முன்பு சத்திமுற்றப் புலவர் பாடிய "நாராய் நாராய்...." என்ற நாரை விடு தூது பாடலின் சாயலைக்காணக்கூடியதாக உள்ளது கவிதைக்குள் நுழைவோமோ......?

"வெள்ளிப்பனிப்படகாய் விண்கடலிலே பறந்து செல்கின்ற மேகமே
சில நொடிகள் தாமதித்து நில்லாய்! என் தாய் நாட்டை நீ தாண்டிப்
போகையிலே சொல்லாய், என் தாய்கென் சுகத்தை தயவு செய்து
நல்லாய் இருப்பதாய் நவில்"

என விளித்து தன் சோக வரலாற்றை சொல்லத் தொடங்குகிறார். இது ஒரு தாய்க்கு மகன் உரைப்பதாக அமைந்துள்ளது.

"இங்கே நீ நேரில் கண்ட தொன்றும் சொல்லாதே!
காதோட நான் உனக்கு விண்டுரைப்பதல்லாதே
வேறொன்றும் கூறாதே"

இந்த முதலாவது வரியிலே பூடகமாக ஏதோ ஒன்று மறைந்திருப்பது கண்டு அடுத்த வரிகளை ஆவனுடன் வாசகரைத் தேட வைக்கிறார். "அதில் கூட நான் சொல்வதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் சொல் வேறொன்றும் சொல்லாதே" என்று கூறி தாய்நாட்டில் எப்படிப்பட்ட நிலையில் இளைஞர்கள் இருந்தார்கள். என்பதை "சுயம் இழுந்து மைதானப்பந்தாய் உதையுண்டு

பராதீனப்பட்டுப் போனதால் தான் வந்திருந்த நோர்வே வள நாட்டில்" என்ற வரிகளின் ஊடாக நோர்வே நாட்டிற்கு வந்திறங்கியது பற்றிக்கூறுகிறார்.

இங்கே "மைதானப் பந்தாய் உதையுண்டு" என்ற வரிகளில் எமது இளைஞன் எந்தப் பக்கத்துக்கும் திரும்ப முடியாத சவால்களை எதிர் கொண்ட நிலைமையை கவிஞர் கண்முன்னே காட்டுகிறார்.

எமது நாட்டு இளைஞர்கள் புலம் பெயர்ந்து செல்வதற்கு பல காரணங்கள் இருந்தன. உயிர்ப்பயம், தொழில் இல்லாத விரக்தி நிலை, வறுமை, குடும்பத்தை முன்னேற்ற வேண்டிய தேவை, பெண் சகோதரிகளின் சீதனத்துக்காய் உழைக்க வேண்டிய தேவை எனப்பல காரணங்கள் இருந்தமையால், தான் நோர்வே நாட்டிற்குச் சென்றதாகக் கூறுகிறார். இந்த இடத்தில் தமிழ் இளைஞர்களின் அவல நிலையை கவிஞர் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

அங்கு கால் வைத்தவுடனே ஆயிரமாய்க் கற்பனைகள் விரிகின்றன. ஒரு தாய் தன் மகனைப் பெற்று வளர்க்கையில் என்னென்ன கனவுகளைக் காண்பாள்.

"சின்னப்பருவம் முதல் சீராட்டிச் சோறூட்டி
அன்னை வளர்க்கையில் ஆளாக பேராக
என்னை பயிற்று வித்து ஏற்றம் அடைய வைத்தே
முன்னேற்றம் கண்ட மோனக் கனவுகளைத்
தாய் நாட்டில் ஒப்பேற்றி வைக்க முடியாமல்
புது நாட்டில் வந்து இறங்க வாய்த்து விட்ட வேளையிலே"

எத்தனை விதமான கனவுகளைக் கண்டதாகக் கூறுகிறார். தாயாரின் நேர்த்திகளை நிறைவேற்றலாம். கல்வியைத் தொடரலாம். கற்றுத்தேறிய பின் சல்லிமரம் காய்க்கத்தக்க தொழில் வந்து சேரும் என்ற கனா, காசு பெருகியவுடன் அதை ஊருக்கு அனுப்புவதா அல்லது உற்ற குடும்பத்தினரை யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைத்து நோர்வேயில் வாழுவதா என இரண்டும் கெட்டான் மன நிலையில் தவிக்கும் தமிழ் இளைஞனின் இக்கட்டான நிலையைக் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

இலகுவான மொழி நடையில் எளிமையான சொற்களூடாகக் கவிஞர் தான் சொல்லவந்த விடயத்தைத் தத்ரூபமாக வெளிப்படுத்துகிறார். சாதாரணமாக எதிர்பார்ப்புக்களுடன் கூடிய இயல்பான மனநிலைதானே இது.

அடுத்த வரியிலே அழகான ஓர உவமை மூலம் தொடர்கிறார். அவனது கற்பனைகள் எல்லாம் "காற்று சுழன்று அடித்தால் கலைகின்ற மேகம் போல் ஆயினவே ஆயினும் அதைப் போய் சொல்லாதே என முகிலை வேண்டிக் கொண்டு தான் இருக்கும் பரிதாப நிலையைப் பக்குவமாக எடுத்துக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொட்டும் பனிக்கு கொடுகி நடுங்கி ஒரு
கிட்டங்கிச் சிற்றறையில் சிணுங்கி
அரை வயிற்றுப் பட்டினியாய் உண்டாலும் பழக்கமில்லாச்
சொந்தச் சமையற் தொழில் பார்த்து சாப்பிட்டு"

என்ற வரிகளில் அவனின் பரிதாப நிலையை எடுத்துக்கூறும் கவிஞர் மீண்டும் மேகத்திடம் கண்ட தெல்லாம் அன்னையிடம் சொல்லாதே! சொன்னால் அவள் மிகவும் மனமுடைந்து போய் விடுவாள் என்று கருத்துப்பட மீண்டும் பழைய நினைவுகளில் முழ்கிப் போகிறார். தாயிடம் எப்படி வளர்ந்த மகன் எனக்கவிஞர் நனவு நிலையில் காட்டுகிறார். நிலையை எடுத்துக்கூறும் கவிஞர், மீண்டும் மேகத்திடம் கண்ட தெல்லாம் அன்னையிடம் சொல்லாதே! சொன்னால் அவள் மிகவும் மனமுடைந்து போய் விடுவாள் என்று கருத்துப்பட மீண்டும் பழைய நினைவுகளில் முழ்கிப் போகிறார். தாயிடம் எப்படி வளர்ந்த மகன் எனக்கவிஞர் நனவு நிலையில் காட்டுகிறார்.

"சோற்றைக்குழைத்து வாயிலே ஊட்டினாலும்
சில பருக்கைகள் தவறி விழச் சாப்பிடுவான்
தேத்தண்ணி கூட தானாக வைக்கத் தெரியாதமகன்
கூதல் என்றால் தாயின் சேலைக்குள் சுருண்டு
நித்திரை கொள்கின்ற மகன் சோட்டைதீன்
வாங்க மடிப்பெட்டி தேடிக் காசெடுத்து செல்லும்
கண்ணான செல்லமகன்"

இன்று இப்படி வாழுகின்றான் என்றால் தாங்கமாட்டாள் எல்லாம் தாயே செய்து கொடுத்து வளர்த்த பிள்ளை தனியாக வந்து படும் பாட்டை கவிஞர் எடுத்துக் கூறுகிறார்.

தன் மகன் அவலநிலையை அறிந்தால் வயிற்றில் அடித்து ஒப்பாரி வைத்து உயிர் துடிப்பாள் என்ற கூற்று ஒரு மகனைக் குறித்த தாயின் பாசத்தை அப்படியே எமக்கு எடுத்துக் காட்டுகிறது. அந்தத் தாய் மகிழ வேண்டும் என்பதற்காகத் தான்படும் துன்பத்தைச்சொல்ல வேண்டாம் என்றும்

"வேளைக்கு வேளை விதவிதமாய் உடை அணிந்து
தின்று குடித்து ஒய்யாரமாய் இருக்கின்றான் கவலைப்படவேண்டாம்"

என்று அன்னையிடம் சேதி சொல்லாய் மேகமே செல் என்று தூது விடுகிறார்.

கவிஞர் அவர்கள் ஒரு சாதாரண இளைஞனின் வெளிநாட்டுக் கனவு வாழ்வின் துயரங்களை மிக எளிமையாக எடுத்துக் காட்டுவதன் மூலம் வெளிநாட்டு மோகத்தை கலைக்கும் படிப்பினையே ஊட்டுகிறார். தான் சொல்ல வந்த விடயத்தை ஓர் உவமையைக் கையாண்டு மிக அழகாகச் சொல்லும் வழக்கத்தை இதில் காண்கின்றோம். பொருள் மயக்கமின்றி சிறிய சிறிய வசனங்களாகக் கருத்தாழம் மிக்க சொற்களை அடுக்கி தமிழில் கவிதை பாட இவரைத்தவிர யாரால் முடியும்.

**தக்ஷா சத்தியதாசன்**

**தரம் 13B கலைப்பிரிவு (2019)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தா-வரம்

இறைவனிடம் நாம் வேண்டும் போது இறைவா "வரம்தா" எனக் கேட்போம்.ஆனால் இறைவன் இயற்கையாக தந்த வரத்தினை நாம் காப்பதுமில்லை மதிப்பதுமில்லை. தாவரத்தில் வருமானத்தையும் மற்றும் பல்வேறு நன்மைகளையும் பெற்றுக்கொள்ளமுடியும். மனிதனிற்காக தனது ஆயுட்காலத்தையே அர்ப்பணிக்கிறது. தொட்டில், நடைவண்டி, ஆடை, ஏடு, கட்டில், ஊன்றுகோல், பாடை, உடன்கட்டை என மனிதனோடு வாழ்ந்து கொண்டிருப்பது தாவரங்களேயாகும்.

நல்ல சட்டங்களால் மனிதன் ஆளப்படுவதை விட நல்ல தாவரங்களால் பயனடைவது மேலானதாகும். தாவரத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் பழமொழிகளும் காணப்படுகின்றன. உதாரணமாக ஆடிவிதை தேடிவிதை, ஆடிவாழை தேடிநடு, எட்டி மரமானாலும் பச்சை மரத்தை வெட்டாதே போன்றவை அவற்றுள் சிலவாகும். மனிதனிற்கு சமனான. உயிருள்ளதாக தாவரங்கள் காணப்படுகின்றன. மரம், செடி, கொடி, புல் எனத் தாவரத்தினை வகைப்படுத்தலாம். தாவரங்கள் உணவிற்காக மட்டுமில்லாது மூலிகையாகவும் தளபாடங்கள் செய்யவும், விளையாட்டுப்பொருட்கள், கைவினைப்பொருட்கள், அழகு சாதனப்பொருட்கள், எரிபொருளாகவும்,சூழல்மாசடைவதைத் தடுப்பதாகவும் காணப்படுகின்றன. மனிதனிற்கு பயனடையக்கூடியதாக மட்டுமல்லாது விலங்குகள், பறவைகள், பூச்சிஇனங்கள் போன்றவற்றிற்கும் பயன்படுகிறது.

காடழிப்பு கூடுவதாலும் வீட்டில் வீட்டுத்தோட்டம் அமைக்காமையினாலும் வெப்பமும் மழையில்லாத நிலையும் மற்றும் பல கொடிய நோய்களும் வந்து சேருகின்றன. தாவரங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்ததாலேயே பாடசாலைக் கல்வி தொடக்கம், பல்கலைக்கழகம் வரை தாவரங்கள் சம்மந்தமாக பல விடயங்கள் கற்பிக்கப்படுகிறது. விஞ்ஞான தொழில்நுட்பம், தொடர்பாடல் வளர்ச்சி பெற்ற சர்வதேச சமூகத்தில் தாவரத்தை மக்கள் அக்கறைப்படுத்துவதில்லை. ஆரம்பகாலத்தில் தாவரத்தின் பயன்பாடுகள் அதிகளவில் காணப்பட்டன.ஆனால் தற்போது அந்தநிலை அருகிக்கொண்டு வருகிறது. தாவரத்தின் வித்துக்கள் நீர், காற்று, வழி, விலங்குகள் போன்ற காரணங்களால் தாவரங்கள் பரம்பலடைந்து வருகின்றன. சுற்றாடலின் முக்கியத்துவத்தை தாவரமே தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ஆயுள்வேத சித்த மருத்துவத்தில் தாவரத்தின் பங்கே மிக அதிகமாக உள்ளது. இலங்கையில் தாவரங்கள் அனைத்தும் அழிந்துவிடக்கூடாதெனப் பாதுகாப்பதற்காக தாவிரவியற்பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாகப் பேராதனைதாவரவியற் பூங்கா இதற்குச் சிறப்பானதாகும். இலங்கையில் தாவரப்பல்வகைமை அதிகரித்து காணப்படுவதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக காணப்படுகின்றது. எனவே நாம் ஒவ்வொரு மனிதனும் தாவரத்தை அழிக்காது பேணிப்பாதுகாப்பதோடு தாவரத்தின் பயனை அறிந்து கொள்வது எதிர்கால சந்ததியினராகிய நமதுகடமையாகும். எனவே மாணவர்களாகிய நாம் தாவரத்திடம் கையேந்துவோம். "எமது வம்சம் மகிழ்வுடன் வாழ வேண்டுமாயின் உனது வம்சம் செழித்து வாழ வேண்டும்." மரமே! உன்னை நாம் வளரவைக்கின்றோம். நாம் வாழ நீ தா-வரம்.

நிலாமுகி பேரம்பலம்
தரம் 10D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

கல்வி என்ற தலைப்பில் பல விடயங்களைப் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம்.கல்வியின் பயன்பாட்டை அறியாதவர்கள் இல்லை என்றே கூறுமளவிற்கு மக்கள் கல்வி பற்றிய எண்ணக்கரு உள்ளவர்களாக விளங்குகின்றனர். சிறந்த ஒரு சமூகம் படைக்க வேண்டுமாயின் அனைத்து மக்களும் கல்வியறிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். நல்லதொரு நாட்டைக்கட்டியெழுப்ப நல்ல தொரு சமூகத்தினாலே தான் முடியும். இதன் காரணமாகத்தான் பலநாடுகளில் அனை வருக்கும் இலவசக்கல்வி வழங்கங்கப்பட்டு வருகின்றது. ஒருவர் தான் பெற்ற கல்வியை எத்தகைய வழியில் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துவதே எனது நோக்கமாகும். சமூகவாழ்க்கையில் மனிதன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் கல்வி என்ற அனுப வத்தைத்தருகிறது. அது அனுபவக்கல்வியாக இருக்கலாம் அல்லது ஏட்டுக்கல்வியாக இருக்கலாம். மனிதனை வழிப்படுத்தி நல்லவனாக சிறந்த ஆளுமை உடையவனாக உருவாக்குவதோடு நின்றுவிடாமல், அறிவையும் ஞாபகத்தையும் விருத்தி செய்து உள விருத்தியின் துணையுடன், சமூகத்தின் ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் ஏற்படுத்தும் சாதனமாகவும் கல்வி அமைகின்றது.

கல்வி என்பது காலத்தின் கண்ணாடி சமுதாயத்தின் வாழ்க்கையினைப் படம் பிடித்துக் காட்டும் கருவி வாழ்கை என்னும் வண்டியை சிறப்பாகச் செலுத்துவதற்குக் கல்வி என்னும் அச்சாணி அவசியம் அதேபோல் நவீன உலகிலே மனித வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கல்வி அமைகின்றது. கல்விக்கு எல்லை இல்லை கல்வியின் பயனைக்கூறுவதன் மூலம் கல்வியின் எல்லையை வரையறை செய்து கொள்ள முடியாது. கல்வியானது கருவறை தொடங்கி கல்லறை வரையும் தொடர்கிறது." கல்வி என்பது வாழ்கை, வாழ்க்கை என்பது கல்வி" இவ்வாறு வரைவிலக்கணங்களை நோக்கும் போது கல்வி ஓர் ஆய்வு எனலாம்.

நாம் வாழும் சமூகத்தையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் ஆராய்ந்து பார்க்கவும் அவற்றை காலம் காலமாக பேணிப் பாதுகாக்கவும் கல்வி பயன்படுகிறது. கல்வியின் "ஐம்பூதங்களாலும் அழிக்க முடியாது" கல்வி ஏழு பிறப்பிலும் உதவுகிறது என வள்ளுவர் கூறுகின்றார். கல்வியானது எமது வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்கலாம் என்கிறார்கள். கல்வியை கற்ற மனிதனுக்கு அறிவு கிடைக்கின்றது அறிவின் பயனாக அவன் ஆற்றலை வெளிப்படுத்துகின்றான். அந்த ஆற்றலை சரியாகவும் செம்மையாகவும் நெறிப்படுத்துவதற்கு அடிப்படையாக அமைவது கல்வி ஆகும். கல்வியானது மனித வாழ்வினை வளப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் நாட்டிற்கு அறிவு, திறன், நல்மனப்பாங்குடன் கூடிய நற்குடிமகனையும் பெற்று தருகின்றது. "மனிதன் மனித தன்மையினைப் பெற உறுதுணையாக அமைவது கல்வியாகும்" இந்த நவீன யுகத்தில் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள், புதிய புதிய சாதனங்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன. மனித இனமும் போட்டிபோட்டுக் கொண்டே இருக்கின்றன. மனித இனப் பெருக்கத்தின் அளவிற்கேற்ப தேவைகளும் பெருகின்றன. ஆனால் இயற்கை வளங்கள் பெருகுவதில்லை இருக்கும் இயற்கை வளங்களை கொண்டே மனிதன் தேவைகளைப்பூர்த்தி செய்கின்றான். நவீன முறைகளான புதிய புதிய நோய்களுக்கு புதிய புதிய மருந்துகள் கண்டுபிடித்தல், மனிதன் மண்ணிலிருந்து விண்ணிற்கு அறிவின் துணை கொண்டு செயற்கைக் கோள்களை அனுப்புகிறான் அறிவின் விருத்தியால் நவீன யுக மனிதன் சிறப்புடன் வாழ்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறறிவு படைத்த மனிதன் பண்புடன் வாழ வழிகாட்டும் அறநிலையங்களாகவும் கல்விச்சாலைகள் விளங்குகின்றன. கல்வியறிவை புகட்டுவதோடு நின்று விடாமல் திட்டவட்டமான கொள்கையினையும் இலட்சியங்களையும் அடைய வழிகாட்டுகின்றன. கல்வி பற்றி அருமையான கருத்துக்களைக்கூறிய வள்ளுவர் பிறப்பினால் ஒருவர் உயர்ந்தோராவதும், தாழ்ந்தோராவதும் இல்லை. கல்வி கற்றோர் மேலோர் கல்லாதவர் கீழோர் என எடுத்துக்காட்டுகின்றார். கல்வியே நாட்டுப் பிரச்சனைகளையும் உலகப் பிரச்சனைகளையும் தீர்க்கும் அரியமருந்து எனப்படுகிறது.

மனித மனங்களின் துன்பங்கள், துயரங்கள், தொல்லைகள், வேதனைகள்,இழப்புக்கள் என்பவற்றை எல்லாம் இல்லாமல் செய்து மனிதனை சுமைகளிலிருந்து விடுவித்து மனத்திற்கு நிறைவையும் திருப்தியையும், மகிழ்ச்சியையும் அளிப்பது கல்வியாகும்.கல்வியானது கலங்கரை விளக்குப் போன்றது மனித மேம்பாட்டையும், இலட்சியத்தையும், குறிக்கோளை அடைய வழிகாட்டும் கலங்கரை விளக்காகக் கல்வி அமைகிறது.

ஓர் அரசனுக்கு அவனது நாட்டில் மாத்திரம் சிறப்பு. கற்றவனுக்கோ சென்ற இடமெல்லாம் சிறப்பு. ஆகவே வாழ்வை செம்மைப்படுத்தும் கல்வியை விருப்புடன் கற்று எம் வாழ்வை ஒளியேற்ற நாம் முனைவோம்.

**வினோக்ஷியா தனபாலசிங்கம்**
**தரம் 13B கலைப்பிரிவு**

*நீ சொல்லப் போகும் வார்த்தை*
*மௌனத்தை விட சிறந்தது என*
*சரியாகத் தெரியும் வரை வாயைத் திறவாதே!*

*மனதிலிருப்பதையே சொல்!*
*இல்லையேல் மௌனமாக இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக் கலையை வளர்ப்போம்

சொற்பொழிவு என்பது ஆரம்பகாலத்தில் சமயங்களைப் பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். சைவசமயத்தைப்பற்றிய சொற்பொழிவுகள் நிகழ அடிகோலியவர் ஆறுமுகநாவலர் ஆவார். பிரசங்கம், சொற்பெருக்கு, மேடைப்பேச்சு, சிறப்புரை எனப் பலவாறாக வழங்கப்படுகிறது.

காலப்போக்கில் அரசியல் தலைவர்கள் தங்கள் திட்டங்கள், கொள்கைகளைப் பரப்புவதற்காகவும் மக்கள் ஆதரவைப் பெறுவதற்காகவும் அவர்களுடைய தாய்மொழியிலேயே கருத்துக்களைத் தெரிவிக்க முன்வந்தார். இந்த முயற்சிக்கு வித்திட்டவர் காந்தியடிகள். அறிஞர்களது பேச்சுவன்மையால் அரசியல் இயக்கம் மக்கள் ஆதரவைப்பெற்றது.

தமிழ் இலக்கிய அறிவும், தமிழ் மொழிப்பற்றும் தாய்நாட்டுப்பற்றும் இருந்தால் அரிய ஆழ்ந்த சொற்பொழிவுகளை ஆற்றமுடியும் தமிழ்நாட்டில் சிறந்த பேச்சாளர்களாக வ.உ.சிதம்பரம்பிள்ளை வி.கலியாணசுந்தரனார், திலகர், பெரியார் போன்றவர்கள் ஆரம்ப காலங்களில் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கியிருக்கிறார்கள். திரு வி.கலியாண சுந்தரனாரின் அரிய சொற்பொழிவு கேட்பாரை வேட்கை கொள்ளச் செய்யும் ஆற்றல் மிக்கது. அவரின் பேச்சைக் கேட்டு மகிழ்ந்த காட்சியை பாரதிதாசன் பின்வருமாறு பாடுகிறார்.

புதுவையிலே கலியாண சுந்தரனார் ஆற்றிய
சொற்பொழிவில் தூய
மதுவையள்ளி மலர் பெருக்கி வண்டுகட்கு
விருந்தாக்கி மயக்குதல் போல்
பொதுவினர்க்குச் சிலப்பதிகாரம் சுவையை
நடையழகைப் புகலும் போதில்
இதுவையா பேச்சென்பேன் பாரதியார்
கைகொட்டி எழுவார் வீழ்வார்

பேசும் போது சொற்களைச் செம்மையாக உச்சரிப்பதோடு நிறுத்தவேண்டிய இடங்களில் நிறுத்தவும் குரலை உயர்த்துவதும் தாழ்த்துவதும் வேண்டும். எதுகை மோனை கலந்த சொற்களை சந்த இன்பந்தரும் சொற்களைப் பேச்சிலே பயன்படுத்த வேண்டும். சிலர் உவமைகளைக் கையாள்வதன் மூலம் அரிய பெரிய செய்திகளைச் சொல்லுவார்கள் இதனால் படிக்காதவர்கள் கூட விளங்கிக் கொள்ளும் தன்மையைப் பெறுவர்.

பேச்சாளருக்கும் எழுத்தாளருக்கும் சொல்வன்மை இன்றியமையாததாகும். தற்போது மாறுபட்ட கருத்துடையோரை இழித்துக்கூறுவதே சொல்வன்மையாகக் கருதப்படுகின்றது. வள்ளுவன் சொல்வன்மைக்கு ஒரு அதிகாரம் அமைத்து அது பற்றி பலவாறு எடுத்துரைக்கின்றார். கேட்பவரைக் கவர்ந்தும் கேளாதவரை கேட்கத்தூண்டும் வகையிலும் சொல்வதே சொல் என்கிறார்.

"கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொழிவைச் செய்யமுன் அவையை அறிதல் வேண்டும். சொற்பொழிவின் பயன் தெரிந்த மக்களவையிலேயே சொல்ல வேண்டும் அவையை அறியாது பேச முற்படுபவர் சொல்வல்லமையில்லாதவர் என்கிறார் வள்ளுவர். மேலும் நல்ல பேச்சாளர் மட்டுமல்ல அவையிலே பேசுவதற்கு அஞ்சாத தன்மையும் இருக்கவேண்டும். கல்வி அறிவிருந்தும் அவைக்கு அஞ்சுபவர் கல்லாதவரைவிடக் கீழானவர். போரிலே அஞ்சாது இறக்கவல்லவர். பலர் ஆனால் சபையிலே பேச அஞ்சாதவர் மிகச்சிலர் இதையே ஔவையாரும்

"ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத்தொருவர்"

என்ற வரிகளில் குறிப்பிடுகிறார். ஒரு சொற்பொழிவாளன் விளிப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற நிலையில் தான் கூறவந்தவிடயத்தைக் கூறவேண்டும். பொருளுடன் உச்சரிப்பு, தொனி தெளிவு, மெய்ப்பாடு முதலிய அம்சங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கினால் சிறப்பான ஆற்றுகையை வெளிப்படுத்த முடியும். சொற்பொழிவாளர் சிலர் தாம் பேசும் போது நகைச் சுவையை கையாள்வதை அல்லது கதை கூறுவதை ஒரு உத்தியாகப் பயன்படுத்துகின்றார். இது பேசப்போகும் விடயத்தை அடியொற்றியதாக அமைய வேண்டும். வேறு தளங்களில் இது அமைந்தால் சொற்பொழிவின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.

பொதுநிகழ்வுகளில் நிகழ்த்தப்படும் பல்வேறு உரைகளும் இங்கு குறிப்பிடத்தக்கன. அருளுரை, அறிமுகவுரை, அஞ்சலியுரை, ஆசியுரை, ஆய்வுரை, ஏற்புரை, கருத்துரை, சிறப்புரை, தொகுப்புரை, பாராட்டுரை, வரவேற்புரை, வாழ்த்துரை வெளியீட்டுரை எனப் பலவகைப்படும். இவ்வற்றை ஆற்றுபவர்கள் இவ்வுரைகள் பற்றிய போதிய தெளிவைக் கொண்டிருக்கவேண்டும்.

மேலும் சொற்பொழிவு செயற்பாட்டில் நேரம் பற்றிக் கருத்தில் கொள்ள வேண்டும். தற் காலத்தில் சொற்பொழிவில் நாட்டங்கொள்ளாமைக்கு இலத்திரனியல் ஊடகங்களின் தலையீடு மட்டுமல்ல பேச்சாளரின் வித்துவம் நேரத்தைக் கபளீகரம் செய்வதும் காரணமாகும். எடுத்துக் கொண்ட தலைப்பை விட்டு வேறு ஒரு பொருளை விளக்கி பின் அதிலிருந்து இன்னொன்று என ஒன்றுக்குகொன்று முரண்படப்பேசுவதும் கூறியவற்றைத் திரும்பக் கூறுவதும் குற்றமுடைய சொற்களைச் சேர்த்தாலும் தேவையற்ற விதத்தில் அங்க அசைவுகளை மேற்கொள்வதும் ஒரு பேச்சாளர் தவிர்க்க வேண்டியவை ஆகும்.

சமூக மாற்றங்களை ஏற்படுத்த வல்ல சொற்பொழிவுத் துறையின் நிலை இன்று ஆரோக்கியமாக இல்லை. ஈழத்தின் சொற்பொழிவுத்துறையில் இளம் சொற்பொழிவாளர்களது பங்களிப்புக் குறைவாகவே இருக்கின்றது. இன்றைய மாணவர்கள் சிறந்த சொற் பொழிவுகளை கேட்பதற்கான வாய்ப்புக்களற்று இருக்கிறார்கள். எதிர்காலத்தில் சிறந்த பேச்சாளர்களை தமிழ் உலகம் உருவாக்க முடியாத நிலை ஏற்படும். குறித்த நிகழ்வுகளுக்காக மட்டும் மனனம் செய்து உரையாற்றும் நிலையோடு பேச்சுக்கலை நின்று விடுகிறது. பிரபல சொற்பொழிவுகள் நூலுருவில், இறுவட்டு வடிவில் வெளிவந்து மாணவர் கைகளைச் சென்றடைய வேண்டும். சிறந்த பேச்சாளர்கள் உருவாகுவதற்குரிய களம் பாடசாலைகளேயாகும்.

**உசாவியவை:-**
1.வளரும் தமிழ்
2..வீரகேசரி கட்டுரை: ச.லலீசன்

**திருமதி சத்தியபவானி செபமாலைதாசன்**
**(B.A D.P.N Ed, M.A)**
**யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழும் பழகுதமிழும்

"காவியங் கண்ணாள் இன்பக் கலையுணர் புலவன் செய்த
ஓவியமனைய நங்கை உளங்கவர்ந் தெனுளே நின்ற
ஆவியை உலகமெல்லாம் ஆளுமத் தமிழாம் மெய்ம்மைத்
தேவியை வணங்கல் செய்வோம் திகழ்நலஞ் சிறக்கவென்றே"

உலகின் தொன்மை மிகு மொழிகளில் தமிழ்மொழி சிறப்புற்றுக் காணப்படுகிறது. நம் தாய்மொழி உலக முதன்மொழியாகும். இதற்கு ஐம்பதாயிரம் அகவை கடந்துவிட்டது. எமது மொழியிலே தோன்றிய இலக்கிய இலக்கணங்கள் பல இன்று இல்லாமல் போய்விட்டன. எனினும் தமிழ்மொழி தோன்றிய காலம் தொடக்கம் பிறந்த சொற்களில் பல எமக்குக் கிடைத்திருக்கின்றன. பல கோடித்தமிழர்களின் கூட்டு முயற்சியினால் தான் இச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே தமிழ்ச்சொற்களின் முழுவரலாற்றையும் அறிவதற்கு நாம் ஐம்பதாயிரம் ஆண்டுகளின் ஊடாகப் பயணிக்க வேண்டும். அவர்கள் படைத்த மொழியை விளங்கிக் கொள்ளவேண்டும் எனினும் தற்காலவழக்கிலே பயன்பாட்டிலுள்ள மொழிவழக்கு பற்றி நாம் அறிந்து கொள்வது காலத்தின் கட்டாய தேவையாக காணப்படுகிறது.

தமிழ்மொழியை செந்தமிழ், பைந்தமிழ், இன்பத்தமிழ், கொடுந்தமிழ் என்றெல்லாம் அதன் சிறப்புக்கருதி அழைப்பர். இம்மொழி உயர்ந்தோர் என்னும் கற்றறிவாளர் நாவிலும் எழுத்திலும் ஏட்டிலும் அன்றுபோல் இன்றும் சீரளமை குன்றாது நிற்கும் அதே வேளை கல்லாதார் நாவிலும் நெஞ்சிலும் பழகுநடையில் தன் சுயபாங்கில் பழகுமொழியாகவும் (பேச்சுமொழி) நின்று நிலவுகிறது.

கற்றோர் வசமிருந்து செம்மையுற்ற எம்மொழி செம்மொழியாக, செழுமை பெற்ற மொழியாக விளங்குகிறது. ஆதலினால் அது வழுவின்றிப் பேணப்பட்டு வந்துள்ளது என்று கூறுதல் சாலப்பொருத்தமுடையது. எனினும் கல்லாதவர் நாவிலே பயின்ற தமிழ் "கொச்சை மொழி" என்றும் "சேரி மொழி" என்றும் இடத்துக்கு இடம், குழுமத்துக்கு குழுமம் செம்மொழியினின்றும் பிறழ்ந்து சிதைந்தும் சிதையாமலும் பேசும் பாணியிலும் ஓசையிலும் சுழிவு நெளிவுடன் கரடு முரடாக பழகி வந்துள்ளது - வருகிறது. இதனையே பழகு தமிழ் என்போம்.

தொல்காப்பியர் காலத்தில் கல்லாதவர் பேசிய மொழி "சேரிமொழி" என்றே கூறப்பட்டது. இ.். து இடத்துக்கிடம் மாற்றமும் திரிபும் கொண்டு வழங்கிவந்தது. இந்தியாவின் தமிழகத்திலே தஞ்சாவூர், திருநெல்வேலி, சென்னை என பல பிரதேசங்களிலும் வேறுபட்ட பழகுதமிழ் வழங்கி வருகிறது. இதனைப்போலவே எமது நாட்டிலும் யாழ்ப்பாணத்தமிழ், மட்டக்களப்புத்தமிழ், மலையகத்தமிழ், முஸ்லிம் தமிழ் என்று இடத்துக்கு இடம் குழுமத்துக்கு குழுமம் வேறுபட்டு வழங்குவதைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக

| செந்தமிழ் | பழகுதமிழ் யாழ்ப்பாணத்தமிழ் | மட்டக்களப்புத்தமிழ் |
|---|---|---|
| 1.மகனே | மோனே/ மேனே | மனே/மனெ |
| 2. காணவில்லை | காணயில்லை | காணல |
| 3. போய்விட்டார் | போய்ட்டார் | பொய்த்தார் |
| 4. வீட்டில் | வீட்ல | ஊட்ட/ ஊட்ல |

இவ்வாறு பிரதேச ரீதியாகவும் சமுகரீதியாகவும் வேறுபட்டு வழங்கும் பழகுதமிழ்ச் சொற்களையே "பிரதேச வழக்குச் சொற்கள்" என மரபு இலக்கணத்தில் குறிப்பிட்டுள்ளனர். இவ்வழக்குச் சொற்கள் காலங்காலமாக அவ்வக்குழும மக்களிடையே வழங்கி வந்த - வருகின்ற சொற்களாகும். தற்காலத்தில் ஆக்க இலக்கிய வடிவங்களான நாடகம், நாவல்,சிறுகதை, கவிதை முதலியன பழகுதமிழ் வழக்கில் எழுதப்பட்டு வருகின்றன.

உதாரணமாக

இலங்கையர் கோனின் மச்சாள் எனும் சிறு கதையில் "இனி உம்மடை தேத் தண்ணி குடிக்க மாட்டன். பெரியண்ணன் வந்து உம்மைக் கலியாணம் முடிச்சு எங்கட வீட்டை கொண்டுவந்த அதன்பிறகு உம்மடைகையால ஒரு தேத்தண்ணி தந்தால் குடிப்பன்"

ஓட்டமாவடி அறப்பாத்தின் மூத்தம்மா சிறுகதையில் "கத சொல்லன்கா சிணுங்கினேன் இப்ப ஏலா மனெ நேரம் பெய்ட்டு நாள ராவக்கி சொல்ரன் வா படுப்பம்"

என்.எஸ்.எம்.இராமையாவின் ஒருகூட்டைக் கொழுந்து சிறுகதையில்

"நானே எடுக்கிறன். முடிஞ்ச மட்டும் எடுக்கிறது. முடியாட்டி துண்டு வாங்கிக்கிட்டு மத்த மலைக்குப் போறேன். இல்லே இஸ்டோருக்கு எல பொறுக்கப் போறேன். மலையிலே இருந்தாத்தானே ஐயாமேலே சந்தேகப்படுவாங்க"

மக்களுக்கு பெருமையையும் மேன்மையையும் தருவது அவர்கள் பேசும் மொழியின் சிறப்பாகும். இம்மொழியே அவர்களின் பண்பாட்டை, கலாசாரத்தை கலைகளை, விழுமியங்களை உலகறியச் செய்யத் துணைபுரிகிறது. அந்தவகையில் இன்று தமிழ் மொழியின் பிரயோகம் மிகப்பரந்து விஞ்ஞானம், அரசியல், மருத்துவம், உளவியல், சட்டம், கணிணி என்ற பல துறைகளிலும் பரந்து காணப்படுகின்றது. அதேவேளை சினிமாவிலும் சின்னத்திரைகளிலும்,குறுஞ்செய்திகளிலும்(SMS) தமிழ் மொழி குறுகி மாற்றமடைந்து கொச்சைத் தமிழாகிக் கொண்டு செல்வதையும் இன்றைய நடைமுறை உலகில் காணமுடிகிறது.

இவற்றைவிட ஆங்கிலச் சொற்களை ஆங்கில ஒலியோடு தமிழில் பேசுகின்ற, எழுதுகின்ற முறை இன்று காணப்படுகின்றது. ஆங்கில மொழியின் மீதான மோகமே இதற்கு காரணம் எனக்கூறமுடியும். பணத்தைப் பெருக்கும் மொழி ஆங்கிலமாய் இருப்பதனால் அதைப்பயன்படுத்தி அடிமைப்பட்டு தாய் மொழியாம் தமிழ்மொழியை ஒதுக்கி அழிக்கும் சூழ் நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதனைக் கண்ணுற்றுத்தான் போலும் புரட்சிக்கவி "மெல்லத் தமிழினிசாகும்" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையே

"தமிழோடு ஆங்கிலம் கலந்து தோன்றிய தமிங்கிலம்
தமிழின் உயிர்பறிக்க வருகிறது
வேரோடு அதைத் தறித்து வீழ்த்துவோம்"

என்றார் கவிஞர் காசி ஆனந்தன்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினாலே"

"மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை"

என்ற கூற்றுக்கள் மாற்றத்தை ஏற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றன.

எனினும் புதிய புதிய சொற்களை தமிழிலே கையாளும் போதும், பிறமொழிச் சொற்களை கையாளும் போதும், தமிழ் மரபிற்கு அமைய கையாளல் வேண்டுமே தவிர அவரவருக்குத் தோன்றியபடியெல்லாம் கையாள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். காலம் காலமாக எமது மொழி பயின்று வந்த தன்மையை உருக்குலைக்காது சிதைக்காது பேணிக்காப்பது தமிழராகப் பிறந்த நம் ஒவ்வொருவரின் தார்மீகப் பொறுப்பாகும்.

"வாழ்க தமிழ்
வளர்க நம் தமிழ்த்தேசம்"

உசாத்துணை நூல்கள்
வேரடிவழித் தமிழ்ச்சொல் பண்டிதர் வீ.பரந்தாமன்.

திருமதி கணேஸ்வரி தனமூர்த்தி,
ஆசிரியை,
யாழ்/ இந்து மகளிர் கல்லூரி

1) அன்பு தான் என்ற தன்முனைப்பே அறியாதது. அங்கு அடுத்தவன் என்பதே இல்லாமல் போய்விடும்.
2) இந்த உலகில் எங்கோ ஒரு மூலையில் நடக்கின்ற அநீதிக்காக உன் மனம் வருந்திகிறது என்றால் நீயும் நானும் நண்பர்கள்.

-சேகுவரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிப் படி கட்டு

நம் வாழ்க்கையின் போக்கை நிர்ணயிப்பது எது? எமது எண்ணங்கள். மனம் வார்த்தைகளால் ஆனது. எண்ணங்களால் நிரம்பி வழிவது. விருப்பு வெறுப்பு என்னும் அசைவுகளால் எழும்பி அலைபாய்வது. அதனால் தான் எமது மனம் ஒரு குரங்கு. அது ஒரு மாயக்குரங்கு. இங்கும் அங்கும் பாயத் தொடங்கும். நிலையில்லாதது. நில்லாதது. நிம்மதி கொள்ளாதது. மனம் அடங்க வேண்டியவற்றிற்கு அடங்காமல் தன் நிலையில் அலை பாயும். இப்படிப்பட்ட மனத்தை அடக்குவது எப்படி? ஏந்த மந்திரக் கோலைக் கொண்டு அடக்குவது? அப்படி அடக்கினால் என்ன விளைவுகள் ஏற்படும்? இத்தகைய வினாக்களுக்கு விடை காண முயன்ற நம் முன்னோர்களின் முயற்சியில் பிறந்தது தான் "கவனம்".

அடக்கம் என்பது மனஅடக்கம் மொழியடக்கம், மெய்யடக்கம் என மூன்று நிலையில் வகைப் படுத்தப்படும். இம் மூன்று அடக்கங்களும் மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்துவன. அடங்காமை கொடிய இருள் உலகில் தள்ளிவிடும். நிலையிலும் மாறுபடாத அடக்கம் தான் சிறந்த அடக்கம். அது மலையைக் காட்டிலும் மிகப் பெரிதாகும். இதனையே வள்ளுவர்

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையிலும் மாணப் பெரிது" (குறள் 124)

என்ற குறளில் சொல்லியுள்ளார். எரிமலைக்குள் எவ்வளவோ சக்தி புதைந்தி ருக்கும். ஆனால் அது வெளிப்படாமல் அடங்கி இருப்பதால் அமைதியாகத் தோற்றமளிக்கிறது. வெடித்து வெளிக்கிளம்பும் போது அடக்க முடியாத அழிவைத்தருகின்றது. "பணக்காரன் ஊசிமுனைக் காதுக்குள் ஒட்டகம் நுழைந்தாலும் சொர்க்கத்துக்கு போகமாட்டான்" என்பது பைபிள் மொழி. இத்தகைய பாவியையும் வள்ளுவம் அடக்க முடமை அருளுடமை பெற்று அமரனாக வாழ வழி சொல்கிறது.

"எல்லோர்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செய்வர்க்கே செல்வம் தகைத்து" ( குறள் 125 )

எப்போதும் பணிவாக நடந்து கொள்வது பெரியவர்கள். இவர்கள் பெருமைக்குரி யவர்கள். எப்போதும் தன்னைத்தானே வியந்து பாராட்டிக் கொள்வது சிறியவர் செயல். பணிவாகப் பேசுவது பயத்தினால் அல்ல. இனிமையாகப் பேசுவது இயலாமையால் அல்ல மரியாதை என்பது கேட்டுப் பெறுவது அல்ல கொடுத்துப் பெறுவது. பணிவை அறியாதவன் ஆளுமைப் பண்பை இழந்துவிடுவான். ஒரு வெற்றியாளனுக்கு இனிய சொல்லும் பணிவும் அணிகலன்களாகும்.

மனிதனுக்கு ஐம்பொறிகள். ஆமைக்கு ஐந்து உறுப்புக்கள். ஆமை ஆபத்துக் காலத்தில் ஐந்து உறுப்புக்களையும் ஓட்டிற்குள் இழுத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்கின்றது. மனிதனும் ஐம்பொறிகளையும் தொடக்கத்திலேயே அடக்கிக் கொண்டால் ஆபத்து வராமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளமுடியும். இதை மனிதன் தான் கொண்ட கொள்கையில் கடைப்பிடிப்பான். ஆனால் வெற்றி நிச்சயம். இதனை வள்ளுவம்

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து" எனக் கூறுகின்றது. (குறள் 126)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்க வேண்டியவற்றுள் மிக அவசியமான அடக்கம் நாவடக்கம். நாக்கு "தந்தக் கோட்டைக்குள்" பத்திரமாக பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. அது பொல்லாதது "சொல்லைக் கொட்டினால் அள்ள முடியாது". "யாகவராயினும் நா காக்க" என்கிறது. "ஒருவன் காவாக்கால் என ஏகத்தாளமாக கேட்டான். "சோகப்பர் சொல்லிழுக்குப்பட்டு" சொற்குற்றம் உண்டாகி துன்புறுவார்.

நாம் வாழும் வாழ்க்கையில் இவற்றை அடக்கி வாழ்வதால் நாம் வெற்றிகளைப் பெற்று சவால்களோடு கைகுலுக்கலாம். வாழ்க்கை என்பது என்ன? இந்த வினாடியில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோமோ அதுவே வாழ்க்கை மற்றையவை அனைத்தும் கற்பனைகள், கனவுகள். அடக்க வேண்டியவற்றை அடக்கி வெற்றி பெற வழிகாட்டும் வழிகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

- "முயற்சி திருவினையாக்கும்" முயற்சி செய்த அளவுக்கு ஏற்ப பலன் கிடைக்கும். சிலர் முயற்சி செய்வார்கள் அது பாதியிலேயே நின்றுவிடும். எனவே முயற்சியை விடாமுயற்சியாக்க வேண்டும். வெல்லும் வரை விடா முயற்சியுடன் செயற்பட வேண்டும்.
- காலம் பொன்னானது. பொன்னை விலைக்கு வாங்கலாம் காலத்தை வாங்க முடியாது. அது போல் உயிர் போனாலும் வாங்கமுடியாது. எனவே காலத்தை உயிரோடு ஒப்பிடலாம். உயிரும் போனால் போனது தான். காலத்தை விரயமாக்கி விடக்கூடாது.
- ஒரு செயலை செய்து முடிக்க வேண்டுமானால் அந்தச் செயலை செய்து முடிப்பதற்கு மனத்தை ஒருநிலைப்படுத்த வேண்டும். மனம் சிதறிவிட்டால் மரம் தாவக் கிளம்பி விடும். ஓர் இடத்தில் நில்லாத மனத்தை ஒரு நிலைப்படுத்த கற்றுக்கொள்ள வேண்டும். வெவ்வேறு சிந்தனைகள் குறுக்கிடும் போது ஒரு செயலைத் தள்ளிப் போட நேரிடும். தாமதம் வெற்றிக்கு உதவாது. கொக்கு மாதிரி காத்திருந்து மீனைக் கவ்வுவது போல சரியான தருணத்திற்கு காத்திருந்தால் வெற்றி கொள்வது நிச்சயம்.
- ஓர் இலக்கை அடைய வேண்டுமானால் திட்டம் தீட்டுவது அவசியம். அதை நோக்கி முன் னேறிச் செல்ல வேண்டும். சதுரங்க ஆட்டத்தில் வல்லவனாக வேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்துச் சென்னையில் சோவியத் கலாச்சார மையத்தில் சிறுவயதில் பயிற்சி பெற்று, இந்திய அளவிலும் உலகளவிலும் கேரி காஸ்பரோவ் போன்ற உலக சதுரங்கசாதனை யாளர்களை முறியடிக்கும் அளவுக்கு படிப்படியாக வளர்ச்சி பெற்ற விஸ்வநாதன் ஆனந்த் இலக்கை அடைய மிகத் தெளிவான பயிற்சியும் திட்டமிடலே அவரிடம் காணப்பட்டது.
- இலக்கை அடைவதற்கு கடின உழைப்பு தேவைப்படுகிறது. அத்துடன் துணிச்சலும் ஆரோக்கியமும் தேவை ஆரோக்கியமான உடலும் உள்ளமும் ஒருவர் முன்னேற்றப் பாதையில் உற்சாகமாகச் செல்ல அவசியமாகும்.
- முன்னேற்றம் என்னும் கனி பறிக்கத் தீர்மானித்து விட்டால் சோம்பலுக்கு இடம் கொடுத்து விடக் கூடாது. அதுவே முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும்.

வெற்றி மீது வெற்றி வந்து உன்னைச் சேர வேண்டுமானால் பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தெளிவான குறிக்கோள் | ஆராய்ந்து செயற்படும் தன்மை |
| மன உறுதி | தன்னிடம் உள்ள ஆற்றலைப் புரிந்து கொள்ளுதல் |
| நிலை குலையாமை | பலவீனத்தை ஒப்புக் கொண்டு சரி செய்தல் |
| நற்குணத்துடன் இருப்பது | இடையறாது முயற்சி செய்தல் |
| காலத்தின் அருமை அறிதல் | கவனத்துடன் காரியம் ஆற்றுதல் |
| நம்பகத் தன்மை | தாழ்வு மனப்பானமையைக் குறைத்தல் |
| உதவி மனப்பாண்மை | முடியும் என்ற நம்பிக்கை |
| தளராத ஊக்கம் | ஈடுபாட்டுடன் நடத்தல் |
| தன்னம்பிக்கை | விரைந்து செயற்படல் |

இவைகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். தெளிவான குறிக்கோள் வெற்றிக்கு முக்கியம். அந்தக் குறிக்கோளை மன உறுதியுடன் அடைய வேண்டும். வெற்றிநோக்கி நடை போட மன உறுதி முக்கியம். எதிர்பாராத இடர்பாடுகள் வரும் போது அதிர்ச்சியால் தடுமாறி விடக் கூடாது. எதுவரினும் என்னால் முடியும் என்ற மனஉறுதி இருந்தால் நிலை தடுமாற வேண்டிய அவசியம் இல்லை.

வெற்றியாளன் அயோக்கியனாக இருந்து விட்டால் அவனது வெற்றி சமூகதிற்கு நன்மை பயக்காது. அது சமூகத்திற்கு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி விடும். ஒரு மனிதனால் சமூகம் பயன்பெற வேண்டுமானால் அவனது செயல்கள் சமூகத்தில் நல்ல விளைவுகளை ஏற்படுத்த வேண்டும். எனவே சாதாரணமாக மனிதர்கள் நற்பண்புகளுடன் இருப்பது அவசியம். ஓர் வெற்றியாளனுக்கு நற்பண்புகள் மிக மிக அவசியம்.

காலத்தின் அருமை அறிந்து நடந்து கொள்வது வெற்றியாளனின் இயல்பான குணமாகியிருக்க வேண்டும். தன்னை அறியும் திறன் இருந்தால் அவரால் தன்னிடம் உள்ள ஆற்றலையும் அறிந்து கொள்ள முடியும். உதவி செய்யும் மனப்பாங்கு ஓர் அரிய பண்பு. இது ஓர் வெற்றியாளனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்பு.

ஓர் செயல் நிறைவு பெற வேண்டுமானால் நம்பகத்தன்மை இடைவிடாத ஊக்கம் நீரூற்று போல காணப்பட வேண்டும். ஓர் செயலில் ஈடுபட்ட பின்பு ஏனோ தானோ என்று செயல்படக்கூடாது. மனம் ஒன்றி அந்தச் செயலில் ஈடுபட வேண்டும். ஒரு மனிதனிடம் பலமும் பலவீனமும் உண்டு. தனது பலம் எது பலவீனம் எது என்று புரிதல் அவசியம். பலவீனத்தை ஒப்புக் கொண்டு அதை சரி செய்வது அவசியம்.

நேர் மறை எண்ணமே வெற்றியாளர்களுக்குத் தேவை நல்ல சிந்தனை இருக்க வேண்டும். கெட்ட எண்ணங்கள் எதிர் மறை திசையில் உங்களை இட்டுச் சென்றுவிடும். இதனையே பாரதியாரும் நினைவு நல்லது வேண்டும் என்று கூறுவார்.நாங்கள் வெற்றி எனும் இலக்கை அடைய வேண்டுமானால் மேற்குறிப்பிட்ட சிந்தனைகளை கடைப்பிடித்து வாழ்ந்தால் வெற்றி நிச்சயம்.

**திருமதி.செம்மனச்செல்வி உமாகரன்**
BA,MA(தமிழ்),PGDE.
யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்றைத்திங்கள்

### கவிஞர் இன்குலாப் அவர்களின் நாடகம் ஒரு பார்வை

சங்க இலக்கியங்கள் சாகா வரம் பெற்றவை. எக்காலத்திற்கும் பொருத்தமான சிந்தனைகளை உணர்த்துபவை. காலதேச வர்த்தமானங்களைக் கடந்து ஒளி வீசுபவை அவற்றுள் தமிழரின் வீரத்தையும், கொடையையும், நட்பையும், அறத்தையும் எடுத்துக் காட்டும் புறநானூறு என்னும் புரட்சிகரமான இலக்கியம் இன்றும் உலகினரால் போற்றப்பட்டு வருகிறது. அந்த நூலில் உள்ள 400 அகவற்பாக்கலில் 112 வது பாடலாக இது காணப்படுகிறது. "அற்றைத்திங்கள் அவ்வெண்நிலவில்...." எனத் தொடங்கும் பாரி மகளிர் பாடிய 5 அடிகளாலான செய்யுளாகும்.

சின்னஞ்சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த அங்கவை சங்கவை ஆகிய பாரி மன்னனின் புதல்வியர் இருவரும் தந்தையை இழந்துவிட்ட துயரம் தாளாது கையறு நிலையில் பாடிய செய்யுளாக இது விளங்குகின்றது.

கடையெழுவள்ளல்களில் ஒருவரான பாரி பறம்பு மலைப் பிரதேசத்தை ஆண்ட ஒரு குறுநில மன்னன். வரையாறு வாரி வழங்கும் வள்ளண்மை உடையவன். முல்லைக்குத் தேர்ஈந்த தகையாளன். தாயற்ற பெண் குழந்தைகளைத் தானே தாயும் தாயுமாக இருந்து கண்ணும் கருத்துமாய் பாதுகாத்து வந்தவன். அவர்களுக்குத் துன்பமே அணுகாத வண்ணம் துணை நின்றவன். பாரி மன்னனின் உயிர் நண்பனாக விளங்கியவர் சங்கப் புலவர்களில் தலை சிறந்த சான்றோரான கபிலர் பிரியா நட்பும் பெறற்கரிய பாசமும் கொண்டு இருவரும் விளங்கினர்.

இத்தகைய சூழ்நிலையில் தான் எளில் மிகுந்த மலை நாட்டை எவரும் துன்பமுறாமல் எவ்வுயிரும் பாதிக்கப்படாமல் தன்னுயிர்போல் மன்னுயிரையும் எண்ணி ஆட்சி செய்து வந்தான் பாரி மன்னன். பெண் குழந்தைகளும் வளர்ந்து பருவ வயதினை அடைந்தனர். அவர்களை மணம் செய்வதற்கு மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர் விருப்புற்றனர். தனது புதல்வியரின் மனநிலைக்கும் விருப்பத்திற்கும் பொருந்தி வராத இத்திருமண உறவினை பாரி மன்னன் ஏற்றுக்கொள்ளவில்லை. பாரி மகளிர் திருக்கோவிலூர் மன்னன் மீது காதல் கொண்டிருந்தனர். பாரியின் மறுதலிப்பு மூவேந்தர்களையும் சினம் கொள்ளச் செய்தது. அவர்கள் பாரிமன்னனுக்குப் பகைவர்களானார்கள். மூவேந்தர்கள் படைப்பலமும் ஆட்சியும் உள்ள பேரரசர்கள் பாரிமன்னனோ சிறிய மலைப்பிரதேசத்தை ஆளுகின்ற குறு நிலமன்னன். இந்நிலையில் மூவேந்தர்களும் ஒருங்கு சேர்ந்து பறம்புமலை நாட்டின் மீது போர் தொடுத்தனர். தங்கள் எண்ணம் நிறைவேறாத ஆத்திரத்தில் தர்மத்திற்கு மாறான செயற்பாட்டில் பாரி மன்னனையும் பறம்புமலையையும் அழித்தொழித்தனர். எழிலார்ந்த மலைநாடு வளமிக்க திருநாடு பகைவர் மூட்டிய தீயில் பொசுங்கிப்போயிற்று. தனது புதல்விகளைத் தவிக்கவிட்டு பாரி மன்னன் இறந்தான். அப்போதுதான் பாரியின் நண்பரான கபிலர் பாரிமகளிரை அழைத்துச் செல்வதற்குத் துணை நின்றார்.

இந்தச் செய்திகளின் அடிப்படையில் துன்பியல் உணர்வுகளை பாரிமகளிர் தங்களது பாடல் மூலம் வெளிகாட்டி இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையு முடையேம் எம் குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ் வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார் யாமெந்தையும் இலமே!

இந்தச் செய்யுளை நிலைக்களனாகக் கொண்டு தமிழகத்தில் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரும், தமிழ்ப்பேராசிரியரும், நூல்கள் பலவற்றின் ஆசிரியருமாகிய சாகுல் ஹமீட் என்னும் இயற்பெயர் கொண்ட இன்குலாப் (1944-2016) என்பவர் நாடகம் ஒன்றை உருவாக்கித் தந்துள்ளார்.

அவர் இந்த நாடகத்தை உருவாக்கியதன் நோக்கம் சங்க காலச் செய்யுள்களில் உள்ள நிகழ்ச்சிகளை உள்வாங்கிச் சமகால பிரச்சினைகளை வெளிக்காட்டுவதாகும். பாரிமகளிர் கபிலருடன் தமது சொந்த நாட்டைத்துறந்து அகதிகளாகப்புறப்பட்டுச் சென்றமை இன்றைய உலகின் பலநாடுகளிலும் யுத்தங்கள் காரணமாக மக்கள் வேற்று நாடுகளுக்கு இடம் பெயர்ந்து அகதிகளாக அலைவதனை ஒத்துள்ளது. எந்தக்காலத்திலும் மலைவாழ் மக்களின் வாழ்வியலானது நிச்சயமற்றதாகவும் அந்நியர் சூரையாடுவதாகவும் இந்நாடகம் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவதனை இது காட்டுகின்றது.

அற்றைத்திங்கள் என்னும் தலைப்பில் அமைந்துள்ள இந்நாடகத்தில் அங்கவை, சங்கவை, கபிலர், விறலிகள் ஆகிய கதாப்பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. அரங்கின் தூரத்திலிருந்து ஒலிக்கின்ற குரல்களும் இடையிடையே காணப்படுகின்றன.

அந்த மாதம் அந்த வெண் நிலவுக்காலத்தில் எமது தந்தை எங்களுடன் இருந்தார். எங்களுடைய பறம்பு மலையும் எங்களுக்கு உரிமையாக இருந்தது. ஆனால் இந்த வெண்ணிலவுக்காலத்தில் வெற்றி முரசினையுடைய வேந்தர்கள் ( சேர, சோழ, பாண்டியர்) எங்களுக்கு உரித்தான பறம்பு மலையைக் கவர்ந்து கொண்டனர். எங்கள் தந்தையும் எம்முடன் இல்லையே என்பது பாரி மகளிர் பாடிய பாடலின் பொருளாகும்.

பாரிமகளிர் தந்தையை இழந்தபின் பறம்புமலையைத் துறந்து அகதிகளாக வேற்றிடம் சென்ற பின் ஏதோ ஒரு நிலவுக்காலத்தில் பாடிய பாடலாக இது இருக்க வேண்டும். இந்தப்பாடலின் மூலம் அவர்கள் சொல்லாமற் சென்ற கதைகள் ஏராளம். பொங்கி வரும் பெருநிலவு எக்காலத்திலும் நிலாவொளியை வீசிக் கொண்டிக்கும். ஆனால் மானிட வாழ்வுதான் மாறிப்போயிருக்கும். ஒரு காலத்தில் இன்பத்தை அனுபவித்த மனம் இன்னொரு காலத்தில் துன்பத்தை அனுபவிக்கிறது. இங்கேயும் பாரிமகளிரின் துன்பியலை நாடகத் தன்மையுடன் இன்குலாப் எடுத்துக்காட்டியுள்ளார்.

அங்கவை மலையடிவாரத்தையும் முழுநிலவையும் பார்த்து பெருமூச்சுவிடுகிறாள். அப்போது இல்லத்தினுள் உருட்டும் ஓசை கேட்கிறது. அங்கவையின் கூற்றாக தந்தை கட்டிய கூடு, புறாக்குஞ்சுகள் போல் வளர்த்தார். அம்மாவின் முகம் நினைவில் இல்லை. நிலாவைத்தான் காட்டினார் என்று அமைந்துள்ளது. அந்தவேளை தொலைவில் ஒலிக்கும் தாலாட்டுப் பாடலில் ஊர், பூ, உச்சிமலை, நிலா ஆகியன உறங்குவதாகக் கேட்கிறது. அதே வேளை "சங்கவை உள்ளே என்ன செய்கிறாய்" என அங்கவை கேட்கிறாள். அப்போதும் பாடல் கேட்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாடலானது நாட்டுப்புற நளினங்களுடன் தொன்மையான தாலாட்டு அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. அதன் இறுதிப்பகுதியில் பாரிமகளிரின் முந்தியகால இனிமை, மகிழ்ச்சி எதிரொலிக்கின்றது. கூடு, புறாக்குஞ்சுகள் போல் வளர்த்தார். அம்மாவின் முகம் நினைவில் இல்லை. நிலாவைத்தான் காட்டினார் என்று அமைந்துள்ளது. அந்தவேளை தொலைவில் ஒலிக்கும் தாலாட்டுப் பாடலில் ஊர், பூ, உச்சிமலை, நிலா ஆகியன உறங்குவதாகக் கேட்கிறது. அதே வேளை "சங்கவை உள்ளே என்ன செய்கிறாய்" என அங்கவை கேட்கிறாள். அப்போதும் பாடல் கேட்கிறது. அப்பாடலானது நாட்டுப்புற நளினங்களுடன் தொன்மையான தாலாட்டு அம்சங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. அதன் இறுதிப்பகுதியில் பாரிமகளிரின் முந்தியகால இனிமை, மகிழ்ச்சி எதிரொலிக்கின்றது.

"நேற்றசைந்த தொட்டினிலே
நெஞ்சுருகக்கேட்டிருந்தோம்
காற்றெல்லாம் தேனிழைக்க
மலைமடியில் கண் வளர்த்தோம்"

இதேவேளை அடுத்த கட்டமாக இரு மரப்பாச்சிகளோடும், வாடிப்போன குறிஞ்சிப் பூக்களின் மாலையோடும் சங்கவை வருகின்றாள். இதோ "நாம் விளையாடிய மரப்பாச்சிகள் நாம் பல்லாலே கடித்த தடயங்கள் கூட இருக்கு" என்கிறாள். மீண்டும் தாலாட்டுத் தொடங்கியது.

"அழகான நடைவண்டி
அசைந்தாடும் கிலு கிலுப்பை
பழக ஒரு மரப்பாச்சி
பாவையரே யார் பறிச்சா?

இது தாலாட்டுப்பாடல். ஆனால் நடைவண்டியை, கிலுகிலுப்பையை, மரப்பாச்சியை யார் பறித்தார்? என்பதனூடாக அவற்றை எல்லாம் இழந்து விட்ட துயரம் வெளிக்காட்டப்படு கின்றது. மலைக் குறத்திகள் குறிஞ்சி மலர்களால் தொடுத்துத் தந்த மாலை இப்போது வாடி வதங்கிக் கிடக்கிறது. ஆனால் மணம் போகவில்லை என்று கூறுவதனூடாக எல்லாவற்றையும் இழந்தாலும் அந்த இனிய நினைவுகள் மட்டும் மனதை விட்டு நீங்கவில்லை என்பது வெளிக்காட்டப்படுகிறது. இதுவரையில் பாடப்பட்ட தாலாட்டு முந்தைய கால இன்பமயமான சூழலை எடுத்துக்காட்டப்பாரியினதும் பறம்பு மலையினதும் அழிவுக்குப் பிந்தியகால நிலையினை மீதித் தாலாட்டுப்பாடல் எடுத்துக் காட்டுகிறது. அப்பாடல் உணர்ச்சி மயமாகத் துன்பியல் உணர்வைப் பிளிந்து தருகின்றது.

"அரளிப்பூந் தண்டெடுக்கப் போன அத்தை திரும்பலியே
மல்லிகைப் பூச்செண்டு கட்டப்போன மாமன் மீளலையே"

ஆகிய வரிகள் போரின் கொடுமையை உணர்த்தி நிற்கின்றன. அதாவது அவர்கள் இறந்திருக்கலாம் அல்லது காணமற்போயிருக்கலாம் என்ற செய்தியைக் கூறுகின்றன.

அதேபோல்

" தாலாட்டில் அசைந்திருந்த
தொட்டில் வரை ரத்த வெள்ளம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பாடல் அடிமூலம் யுத்ததர்மம் மீறப்பட்டு தொட்டிலில் ஆடும் குழந்தையைக் கூடப் போர் பாதித்த தன்மையையும், எங்கும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்த தன்மையும் உணர்த்தி நிற்கின்றது.

"பால் வார்த்த நிலா முகத்தில்
பற்றிவிட்ட தீப்பந்தம்"

என்னும் பாடல் அடிகளால் பால் நிலாவை மறைக்கத்தக்கதாக அக்கினிக் கொழுந்து ஓங்கி எழும்பியதை உணரமுடிகிறது. அதாவது பறம்பு நாட்டின் எல்லா இடங்களையும் தீமூட்டிக் கொழுத்தியதை இந்த அடிகள் வெட்டை வெளிச்சமாக்கியுள்ளன.

"ஏலம்பூ வாய்பொசுங்க
ஏரியுறது தீக்கொழுந்து"

என்னும் தாலாட்டுப் பாடல் அடிமூலம் ஏலம்பூப்போல் வாசனை மிக்க மென்மையான வாயையுடைய குழந்தைகளின் வாயைக்கூட போரின் வெம்மை பொசுங்கச் செய்துள்ளமையை அறியமுடிகின்றது.

அதேபோல்

" காலப்புனல் கனக்கும்
கண்ணீரையும் சுமந்து"

என்னும் பாடல் அடி மூலம் காலவெள்ளமானது அகதிகளாகிய மக்கள் வடிக்கும் அவலக் கண்ணீரைச் சுமந்து செல்கிறது என்பதனை உணர்ந்து கொள்கின்றோம்.

இவ்வாறு குறியீட்டு முறைகளைக் கையாண்டு நொந்து போனவர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகமாகத் திகழ்கிறது.

நாடகத்தின் அடுத்த கட்டமாகத் தமது ஊரைப் பிரிந்து செல்வதற்குத் தயார் ஆகின்றனர். பாரிமகளிரின் உரையாடலும் அப்போதைய மனநிலையை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

தந்தையில்லை தந்தையின் தேரில்லை பறம்புமலையில்லை. அதில் பால் வார்த்த நிலவில்லை அந்த நிலவை எப்படி எடுத்துச் செல்வது என்ற வினாத் தொடுக்கப்பட்டுள்ளது. பறம்பு மலை மக்களின் அன்பை எப்படி விட்டுச் செல்வது? தந்தையை இழந்ததனால் குறவர்கள் கானவர்கள், எயினர்கள் செய்வதறியாது கலங்கிப் போய் விட்டார்கள். அவர்களைப் பிரிந்து எவ்வாறு செல்வது என்ற ஏக்கம் பாரிமகளிரை வாட்டுகின்றது.

மூவேந்தர்கள் பறம்பு மலையை முற்றுகை செய்தபோது, பகைவர்களின் குதிரைகள் வருவதனை மலை முகட்டில் இருந்த பெண்கள் விளையாட்டாக எண்ணிக் கொண்டிருந்தார்கள் அது பாரியும் பறம்பும் வீழாது என்ற அவர்களின் நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் அவர்கள் இப்பொழுது பகல் பொழுதுகளில் ஈத்திலைக் குப்பை மேட்டில் ஏறி நின்று உமணர்கள் ஓட்டும் குப்பை வண்டியை எண்ணுகிறார்கள். ஒரு காலத்தில் அடைந்துள்ள ஏற்றமும் போரின் பின் அவர்களுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியும் வெளிப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுத்துயரின் ஒரு கட்டமாகப் புன் செய் நிலங்களை, மண்ணிற்புதைத்த கள்ளை, கள் மணக்கும் குடிசைகளை எல்லாம் விட்டுப்பிரிந்து செல்லவேண்டுமா? என்ற ஏக்கம் தெரிகிறது.

அப்போது கபிலர் வருகிறார். தந்தையின் உயிர் நண்பரல்லவா? உரிமையுடன் பாரி மகளிரின் தோள்களில் கை வைக்கின்றார். இனிப்புறப்பட வேண்டியது தான் என்கின்றார். அருவியின் ஆர்ப்பரிப்பு, பறவைகளின் பேச்சொலி, இலைகளின் சல சலப்பு ஆகியவற்றைக் காது கொடுத்துக் கேட்கின்றார். மலையை விட இதனைப் பிரிவது கனக்கின்றது என்கின்றார். ஆனால் என்ன செய்வது புறப்பட வேண்டியது தான் என மீண்டும் கூறுகின்றார்.

இவர் கூறும் இவ்வார்த்தைகள் நெஞ்சை உருக்குகின்றன. தாய் நிலத்தைப் பிரிந்து செல்லும் அகதி மக்கள் அனைவருக்கும் பொதுமையாக உயிர்ப்புக் காட்டி நிற்கின்றன. செல்லும் அகதி மக்கள் அனைவருக்கும் பொதுமையாக உயிர்ப்புக் காட்டி நிற்கின்றன.

"பறம்பு மலையின் இனிய சுனையில் ஒரு முடக்குக் குடியுங்கள். கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப் பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள். இவற்றினைக் கேட்கும் போது நெஞ்செல்லாம் இரத்தம் வடிகின்றது. மண்ணைப் பிரிக்கின்ற இதயத்தின் ஏக்கம் தெரிகின்றது. தான் வாழ்ந்த மண்ணினைப் பிரிந்து செல்வதும் எவ்வளவு கொடியது என்பதை உணர்த்தி நிற்கின்றது.

கபிலர் முன் நடக்க பாரிமகளிர் தலை குனிந்தவாறு பின் தொடர்கின்றனர். தாம் வாழ்ந்த நாட்டை இயற்கையை மண்ணின் மணத்தை எண்ணியபடி நடக்கின்றனர். மீண்டும் தாலாட்டு ஒலிக்கின்றது. இது நாடகத்தின் இறுதிக் கட்டமாகும்.

பாரிமகளிர் பறம்பு மலையிலிருந்து பிடுங்கி எறியப்பட்டது இப்படித்தான். வம்ப வேந்தர்களின் வன்முறை இப்படித்துரத்தியது. ஆனால் நாடகத்தின் கருப்பொருளை இன்றைக்கும் உரிப்பொருளாகக் காட்டும் அழகு மிகவும் சிறப்பானது. "எல்லாக் காலங்களிலும் இது தான் மண்ணின் மக்கள் புலம் பெயரும் வரலாறு" "மலைவாசிகள் இன்றளவும் இப்படித் தான் வேரூன்றும் உரிமை மறுக்கப்பட்டு"

இந்த இரண்டு குரல்களும் சமகாலத் தரிசனங்களாக வெளிப்படுகின்றன. போரின் கொடுமை மலைவாசிகள் அனுபவிக்கும் துயரம், அகதிகளின் அவலம், ஆக்கிரமிப்பாளர்களின் மிலேச்சத்தனம், தங்களின் வெற்றிக்காகத் தர்மமில்லாது போர் செய்தல் இப்படி எத்தனையோ துன்பங்கள் எம் மத்தியிலும் ஏற்படுகின்றன. இதனைத்தான் இவ் அற்றைத் திங்கள் நாடகமும் உணர்த்தி நிற்கின்றது. காலத்தால் அழியாத கதையைக் கூறி நிற்கின்றது.

**திருமதி குணஸ்வரி ரகுநாதன்**
B.A, MA(தமிழ்), PGDE, MED
**யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதவூரடிகள் புராணத்தில் திணைமயக்கம்

மாணிக்கவாசகரின் மாண்புமிகு வரலாற்றைக் கடவுள் மாமுனிவர் பாடிய பனுவலே திருவாதவூரடிகள் புராணம். பக்தி, சமயபொருள்மரபு என்பவற்றுக்கு முக்கிய இடம் தந்து திவ்வியச் சரிதத்தை ஆறு சரிதங்கள், 545 பாடல்களில் கவி படைத்திருக்கும் அற்புதமான புராணம் இது. பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியினர் அல்லது பதினாறாம் நூற்றாண்டவர் எனக் கருதப்படும் கவி கடவுள் மாமுனிவர், தமது புராண உருவாக்கத்தில் பண்டைத்தமிழ் இலக்கிய, இலக்கண மரபுகளை உள்வாங்கி, பிரதிபலித்தும் சிலவிடத்துச் சில புதுமைகள் அமைத்தும் பாடியிருப்பது தெளிவு. அவ்வகையில் திருப்பெருந்துறை மற்றும் தில்லைத்தலச் சூழல் வர்ணணையில் மரபிலக்கண வரண்முறை கடந்து புலவர் அமைத்த திணைமயக்கக் காட்சிகளை நுணுகிக் காண்பதே இச்சிறு உசாவலின் நோக்கம்.

'பாடலுள் பயின்றவை நுவலுங் காலை முதல், கரு, உரிப் பொருள் என்ற மூன்றே' மனங்கொள்ளப்படுவது மரபு. முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும். கருப்பொருள் என்பது,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தியாழின் பகுதியொடு
அவ்வகை பிறவும்..."

என வரையறை செய்யப்பட்டது. அதாவது தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண் முதலியனவும் அத்தன்மைய பிறவும். இதன் வண்ணம் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனும் ஐவகை நிலங்கட்கும் இவை தனித்தனியே குறிக்கப்பட்டன. இருப்பினும் தன்னிலமல்லாத பிறநிலத்துக் கருப்பொருளோடும் கலந்து வருவதும் உண்டு. பெரும்பான்மை இலக்கண வரண்முறையுடன் வருமாயினும் இவ்வாறு கலந்து வருதலே மயக்கம் எனப்படுகிறது.இதனை தொல்காப்பியரே பாடுகிறார்

"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே"

என்பது இது குறித்த தொல்காப்பிய நூற்பா.

அருந்துறையாகிய பெருந்துறையைப் பாடுகிறார் கவி கடவுள் மாமுனிவர். அருட் கரையாகிய முத்திக் கரையில் சேர்க்கும் துறையாகிய விசேடமிக்க வண்மையால் பெருந்துறை என மொழியப்பெறும் சிறப்புடையது. இவ்வருந்துறையை நண்ணுங்காலை அதன் இயற்கைச் சூழல் எங்ஙனமிருந்தது என்பதைக் கவி காட்சிப்படுத்துகிறார். பூங்காவர்ணனை மேல்வருமாறு

"ஈனமில் பெருந்துறை எனும்பதியின் ஞாங்கர்
கானமிகு புன்னைவளர் கந்தமுள சந்தம்
வானமுயர் சணபக மரந்திகழ் நரந்தம்
தேனினம் முரன்றெழு செருந்திகள் பொருந்தி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோடு கவினும் பெரிய கோங்கு மிக ஓங்கும்
பாடலம் நெடும்பலவு பைங்கமுகு தெங்கு
நீடளி யிரைத்தெழு நிரைக்குரவு சூதம்
ஏடவிழ் செழுங்கவிர் இலஞ்சிகண் மலிந்து,"

"மாக்கவின் மிகுங்களப மஞ்ஞை சிறையன்னம்
கூக்குரல் செயும்கரிய கோகிலம் நெருங்க
மீக்குலவு மந்தியினம் முந்துதொறும் மேன்மேல்
ஆர்க்கும் ஞிமிறு எங்கணும் அடர்ந்திசை தொடங்க,"

(திரு.பெரு.சரு பாக்.11–13)

அப்பூங்கா காட்சிதருகிறது. அங்கு காணும் மரங்களாக வாசனை மிக்க புன்னை, மணம்மிகுந்த சந்தனம், உயர்ந்த சண்பகம், நாரத்தை, கொப்புக்கள் வளர்ந்த கோங்கு, உயர்ந்த பாதிரி, பசிய கமுகு, தென்னை, உயர்ந்த பலா, நெடிய குராமரங்கள் முதலியன பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் குறிஞ்சிக்குரிய கோங்கும், நெய்தலுக்குரிய குராவும் இடம் பெற்றுள்ளன. இதனால் கருப்பொருள் மயக்கம் வெளிப்படை! மேலும், அங்கிருக்கும் பறவைகள் விலங்குகளை நோக்கும் போது நீலத்தோகைமிகு மயில், சிறகுடைய அன்னம், கூவும் கரிய குயில், மரங்களில் பாயும் குரங்குகள் முதலானவை தெரிகின்றன. குறிஞ்சிக்குரியது மயில், மருதத்திற்குரியது அன்னம் இருபுட்களுமே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளமை காணலாம். இத்தகைய மா, மரம், புள் இயங்கும் அவ்விரு நிலத்தினில் பூங்காவின்கண் ஒரு குருந்த மரம் விளங்கியது என்கிறார். குருந்தம் முல்லைக்குரிய விருட்சம், இனி அப்பூங்காவின்கண் மலர்ந்திருந்த பூக்களைக் குறிப்பிடும்காலை,

"....பொய்மயக்கம் தரும் பாசம் போல மலர்ந்தனபூவை,
....இனிப்பிறவியில்லை எனக்
கைம்மறிக்குமவர் போல மலர்ந்தன அங்குள காந்தள்"
"....மலர்ந்தன மென்பனி முல்லை"

(திரு.பெரு.சரு பாக்.18–19)

என பூவை, காந்தள், முல்லை மலர்கள் என்பவற்றைக் குறிப்பிடுகிறார். முல்லைக் குரியது முல்லைப்பூ அதனுடன் பூவையாகிய காயா, காந்தள் என்பனவும் குறிக்கப்பட்டி ருத்தலைக் காணலாம். திருவாதவூரடிகள் புராணத்தின் இரண்டாம் சருக்கமாகிய திருப்பெருந்துறைச் சருக்கத்தில் திருப்பெருந்துறையை வர்ணிக்கும் போது மட்டும் இவ்வாறாக்கியதுடன் நில்லாத கவி பின்னையும் தில்லை வர்ணனையிலும் இது போன்ற கரு மயக்க வர்ணனையைக் காட்டியிருப்பதனைக் காணலாம்.

"செல்லும் சுரம் இருளில் ஒளி திகழ் கொன்றை கண் மலரா
எல்லொன்றிய இமையோர் உலகென நின்றன எங்கும்
புல்லும் சிவ நாமத்தமிழ் போல் வண்டிசைபாட
சொல்லும் பொருள் வல்லார் தமகை போன்றன தோன்றி"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெள்ளும் சிவஞானம் சிறிதில்லதவர் வேடம்
கொல்லும் செயலென ஒண்மலர் குலவும் கவிர் எல்லாம்
பள்ளம் படர் புனல்போல் புலன் வழியே பயில் சிறியோர்
உள்ளம் தமை ஒக்கும் திகழ் மைக் கொண்டொளிர் காயா"

"பாயும் குலம் மந்தி திரள் பயிலும் தொறும் அசையா
ஈயின்குழு எழுதேனின் இறால் சேர்மலர் நாகம்
மாயம் திகழ் தாராகணம் அகல்வான் மிளிர்மதியம்
ஏயும் படி கிளர் பொங்கரின் இடைநின்றன எங்கும்"

"பக்கங்கிளர் கமுகின் திரள் பல சாமரை வீச
கொக்கின் தளிர் போதும் பல குயில் காகளம் ஊத
தொக்கன்பொடு விண்ணாதிபர் சொரியும் பலபொற்பூ
ஒக்கும் படி மலர் சிந்தின ஒண் சணபக சோலை"

"நீங்காவளம் இவ்வாறுள நீள்சூத நரந்தம்
தேங்கார் அளி முரல் பாதிரி தெங்கின் திரள் வகுளம்
கோங்கு, ஆசினி, கொந்தார் செழுமந்தாரம் நெருங்கும்
பூங்காவை அகன்றார் புலியூர் நன்னகர் கண்டார்"

(திருவம்.சரு பாக்.46-50)

ஆகிய திருவம்பலச்சருக்கப் பாடல்கள் தில்லை மூதூரின் திருவழகைக் காண்பிப்பன. இருபாலும் ஒளி திகழும் கொன்றைகள், செவ்வொளி நல்கும் பொற்கொன்றை, சிவநாமம் ஒலி செய்யும் வண்டுகள், செங்காந்தள் வண்டிசைக்கு அபிநயம் காட்டி நிற்கின்றன. முருக்குகள் செவ்வொளி மிக்க மலர்களுடன் உள்ளன. கருநிறம் கொண்டு பிரகாசிக்கும் காயா மலர்கள் மலர்ந்துள்ளன. அத்தகைய திருப்பதியில், குரங்குகள் பாய்வதனால் தேன் கூடுகள் பொருந்தப் பெற்ற புன்னைகள் தென்படுகின்றன. பாதையினில் இருக்கும் கிளரா நிற்கும் கமுகுகள் பூம்பாளைகள் விரித்துச் சாமரை வீசுகின்றன. மாவின் இளந்தளிர்களைக் குடையும் குயில்கள் சின்னம் ஊதுகின்றன. சோலை சணபகச் சோலையாகத் தோன்றுகின்றது. நெடிய மா, நாரத்தைகள், பாதிரிகள், தென்னை, கோங்கு, மகிழ், பலா, மந்தாரம் ஆகிய மரங்கள் நெருங்கி நிற்கின்றன. இத்துணை வளமிகுந்த பூங்காவை நீக்கித் திருவாதவூரர் சிதம்பரமாகிய தில்லைச் சேத்திரத்தைத் தரிசனம் செய்தார் என்கிறார் கவி.

இங்கும் முல்லைக்குரிய கொன்றை, குறிஞ்சிக்குரிய கோங்கு, நெய்தலுக்குரிய புன்னை என்பன காட்சிப்படுத்தப்பட்டிருத்தலைக் காணலாம். இதில் இன்னுமொரு விடயம் காணலாம். அதாவது குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதத்திற்குரிய மரங்களும் விலங்குகளும் கலந்து காட்டப்பட்டன என்ற பௌதீகச் சூழல் தோற்ற வர்ணனைக்கு அப்பால் இவையாவும் தேவார ஆசிரியர்கள் திருத்தலச் சூழல் வர்ணனைக்குப் பயன்படுத்திக் காட்டிய தோற்றப்பொலிவுகள். எனவே முன்வந்த மரபினோர் வழி நின்று கடவுள் மாமுனிவர் திணை மயக்கமாய்த் தோற்ற வர்ணனை பாடினார். அதுவும் சமயச் சூழலை பக்தியுணர்வூட்டும் முகமாகப் பாடினார் என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாராவாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்"(3)

என்று தொல்காப்பியரே கருப்பொருளுக்கு மேலுமொரு மரபு கூறியிருத்தலும் இங்கு மனங்கொள்ளத்தக்கது. யாதாயினும் ஒரு நிலத்திற்குரிய மலரும் பறவையும் அந்த நிலத்திற்கும், அதற்குரிய காலத்திற்கும் பொருந்தாது பிறிதொரு நிலத்திடத்து வரினும், வந்த நிலத்திற்குரிய கருப்பொருளாகவே கொள்ளப்படும் என்கிறார். இந்த, கடவுள் மாமுனிவரின் கருப்பொருள் மயக்கம், திணைமயக்கக் காட்சி அவதானிப்பின் ஊக்கத்தால் தாம் பாடிய திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் திணைமயக்கம் என்று தலைப்பிட்டுக் காட்சி விதானித்திருப்பது காணலாம். எனவே திணை மரபு கடந்து கருமயக்கம் காண்பித்து ஏற்குமொரு மரபினூடு காட்சிப்படுத்தி, பின்வந்த புராண ஆசிரியருக்குத் திணைமயக்க வழிகாட்டியாகவும் கவி கடவுள் மாமுனிவர் விளங்குகின்றமை ஈண்டு தெளிவாகிறது. திருப்பெருந்துறையும் தில்லையும் திணை மரபு கடந்து அருள் அழகு கொண்டு மிளிர்கின்றமையைக் காணலாம்!

**சுருக்கக் குறியீட்டு விளக்கம்:-**

1)திரு.பெரு.சரு- திருப்பெருந்துறைச் சருக்கம்
2)திருவம்.சரு- திருவம்பலச்சருக்கம்

**அடிக்குறிப்புக்கள்:-**

1) தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 20
2) மேலது நூற்பா 15
3) மேலது நுற்பா 21

**கு.பாலஷண்முகன்**
**விரிவுரையாளர்.**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**

**உங்களுக்கு தெரிந்தது மிகவும் குறைவு என்பதை அறிவதற்கே நீங்கள் நிறைய தெரிந்து கொள்ள வேண்டியிரக்கிறது.**

**கவலைகள் வந்து கொண்டு தான் இருக்கும் ஆனால் அதற்கு நாற்காலி போட்டு உட்கார வைக்கக் கூடாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படப் பாடல்களில் அணிச் சிறப்புக்கள்

தமிழ்மொழியானது ஐந்திலக்கணங்களைக் கொண்டது. எழுத்து, சொல, பொருள், யாப்பு, அணி என அவை அமைந்துள்ளன. அகத்தியம், தொல்காப்பியம், வீரசோழியம், தொன்னூல் விளக்கம் முதலான இலக்கண நூல்கள் ஐந்து இலக்கணங்களை எடுத்தியம்புபவை. தனித்தனியே யாப்பிலக்கணம் கூறும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை போன்ற நூல்களிலும் அணிச் சிறப்புக்களும் இணைந்துள்ளன. காவிய இலக்கணம் கூறும் தண்டியாசிரியரின் தண்டியலங்காரம் நூலில் அணிச்சிறப்புக்களே அதிகம் கூறப்பட்டுள்ளன. செய்யுளின் சுவைக்கும், ஓசைக்கும், பொருளின் மேலான விளக்கத்திற்கும் அணிகளின் பயன்பாடு துணையாகின்றது. "அணி" எனபது பல்பொருள் குறித்த சொல்லாயினும் அழகு, அலங்காரம் என்பவற்றை உணர்த்துவதால் செய்யுளின் - கவிதையின் - பாடலின் சிறப்புக்கு உதவுகின்றது. ஒரு செய்யுளைக் கவிஞன் இயற்றுகையில் கையாளும் பல்வேறு உத்திமுறைகளில் அணிப்பயன்பாடும் ஒன்றாகும். சங்ககாலச் செய்யுள்கள் தொடங்கிக் காப்பியங்கள், பிரபந்தங்கள் ஊடாக, 20ஆம் நூற்றாண்டு எளிய தமிழ்க் கவிதைகள் வரை- சமகாலத் திரைப்படப் பாடல்கள் வரை அணிச்சிறப்புத் தவிர்க்க முடியாத வகையில் தமிழ்க் கவிதைகளில் பின்னிப்பிணைந்து ஊடுருவி நிற்கின்றது.

தமிழிலக்கண மரபில் சொல்லணி, பொருளணி என அணிகள் இரு வகைப்படும். சொல்லணி வகையில் எழுத்துக்கள் அமையும் தன்மையினாலும், ஓசையொழுங்கினை உருவாக்குவதில் சொல்லடுக்குகளும் எழுத்துக்களும் பொருந்தி நிற்கும் தன்மையினாலும் எதுகை, மோனை, இயைபு, சிலேடை, பின்வருநிலை, மடக்கு முதலான அணிகள் காணப்படுகின்றன. அதேபோல் சொல்லின் பொருள் பொருந்தி நிற்பதனால் அல்லது சொற்றொடர், வாக்கியம் முதலானவை பொருந்தி நிற்கும் தன்மையால், முழுச்செய்யுளும் உணர்த்தி நிற்கும் பொருட்சிறப்பினால், பொருளணி பலவாகின்றன. இவை நாற்பதுக்கு மேற்பட்டனவென இலக்கணகாரர் கூறுவர். அவற்றுள் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உயர்வுநவிற்சி, இயல்பு நவிற்சி அல்லது தன்மை நவிற்சி, வேற்றுமை, முரண், வஞ்சப் புகழ்ச்சி முதலான பொருளணிகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். காலந்தோறும் தமிழ்க் கவிஞர்கள் தத்தம் கவிதைகளில்- இசைப்பாடல்களில் தத்தகாரங்களும் சமத்காரங்களும் ஓசையினால் சிறப்படைவதற்கு அணிகள் காரணமாயிருக்கின்றன. அநேக பாடல்களில் - கவிதைகளில் - செய்யுள்களில் உவமையணி கையாளப்பட்டுள்ளதைக் காணலாம். "உயர்ந்ததன் மேற்றே யுவமை" எனத் தொல்காப்பியம் கூறினாலும், இழிந்தவற்றையும் உவமையாகக் கூறுவது சமகால இலக்கிய நடைமுறையாகிவிட்டது. ஒரு பொருளை இன்னொரு பொருளுக்கு உவமித்து அல்லது ஒப்பிட்டுக் கூறுதல் உவமையணியாகும். உவமானம் (உவமிக்கும் பொருள்), உவமேயம் (உவமிப்பதற்குரியதாகக் காணும் பொருள்), பொதுத்தன்மை (உவமான, உவமேயங்களை ஒப்பிடுவதற்கான இயல்பு), உவமவுரு (உவமிக்கும் உருபுநிலை) ஆகியன உவமையினால் முக்கியம் பெற்றிருக்கும்.

"பால் போல நிலவு எறித்தது"

"வேல் போன்ற விழிகள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காளை போல முட்டினான்"
"சிங்கம் போன்ற வீரமுள்ளவன்"

இங்கே காட்டப்பட்டுள்ள உதாரணங்களில் உவமையணிகள் இடம் பெற்றுள்ளன. பால், வேல், காளை, சிங்கம் ஆகியன உவமானங்களாகவும், நிலவு, விழிகள், முட்டுதல், வீரம் ஆகியன உவமேயங்களாகவும் முறையே அமைந்துள்ளன. போல, போன்ற ஆகிய இடைச்சொற்கள் உவமவுருபுகளாக நின்று பொருள்களை உணர்த்தியுள்ளன. உவமானம், உவமேயம் ஆகியவற்றக்கான பொதுவியல்புளாக வெண்மை, கூர்மை, தாக்குதல், வீரம் ஆகியன காணப்படுகின்றன.

"தங்கரதம் போல் வருகிறாள் – அல்லித்
தண்டுகள் போலே வளைகிறாள்
குங்குமப் பூப்போல் சிரிக்கிறாள் – இன்பக்
கோட்டைக்கு என்னை அழைக்கிறாள்"

இந்தச் சினிமாப் பாடலடிகளில் தங்கரதம், அல்லித்தண்டு, குங்குமப் பூ ஆகியன பெண்ணின் அழகு, அசையும் நடை, சிரிப்பு ஆகியவற்றுக்கு உவமானங்களாகக் கூறப்பட்டுள்ளன. ஆனால் "இன்பக் கோட்டை" என்பது இன்பமாகிய கோட்டை எனும் பொருளில் வந்து உருவக அணியாகியுள்ளது. உவமானம், உவமேயம் ஆகிய இரண்டும் பிரிக்க முடியாதவாறு ஒன்றுதான் மற்றொன்று எனப் பொருள் உணர்த்தி நிற்பது உருவக அணியாகும்.

"வேல் விழி" என்கின்ற உவமையானது "விழிவேல்" எனமாறும் போது விழியாகிய வேல் எனப் பிரிக்க முடியாத பொருளையுணர்த்தி உருவக அணியாகின்றது. மனக்கோயில், கட்கயல், வதனமதி, முகத்தாமரை, இடைக்கொடி போன்றவை உருவக அணிகளாகும்.

"காலையில் மலரும் தாமரைப்பூ – அந்திக்
கருக்கலில் மலரும் மல்லிகைப்பூ
இரவில் மலரும் அல்லிப்பூ – அவள்
என்றும் மணக்கும் முல்லைப்பூ"

இப்பாடலடிகளில் பெண்ணை உருவகிப்பதற்காக நான்கு வகைப் பூக்களை நான்கு காலங்களுக்குரியதாகக் கண்ணதாசன் உருவகப்படுத்தி வர்ணித்துள்ளார். இவை உருவக அணியின் பாற்பட்டவையாகும். இதே சினிமாப் பாடலின் தொடக்கமானது பின்வருமாறு அமைந்துள்ளது.

"கட்டித் தங்கம் வெட்டியெடுத்து
காதல் என்னும் சாறு பிழிந்து
தட்டித் தட்டிச் சிற்பிகள் செய்த உருவமடா! அவள்
தளதள வென்று ததும்பி நிற்கும் பருவமடா!"

இதில் "காதல் என்னும் சாறு" (காதற்சாறு) என்பது உருவகம். பாடல் முழுவதிலும் உயர்வுநவிற்சியணி காணப்படுகிறது. பெண்களை வர்ணிக்கையில் தங்கத்தாற் செய்த உருவம், தளவென்று ததும்பி நிற்கும் பருவம் என்பன உயர்வு நவிற்சிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தங்கத்தில் முகமெடுத்துச் சந்தனத்தில் நிறமெடுத்து
மங்கையென வந்திருக்கும் அழகோ?"

இப்பாடலடிகளும் உயர்வு நவிற்சியான வருணனைகளாகும்.

" தேக்குமரம் உடலைத் தந்து
சின்னயானை நடையைத் தந்தது
பூக்களெல்லாம் அழகைத் தந்தது
பொன்னல்லவோ நிறத்தைத் தந்தது"

இந்தப் பாடலடிகளும் உயர்வு நவிற்சியணிகள் கொண்டமைந்தனவாகும்.

" வந்தனள் ஒரு சுந்தரி – திரு
மங்கை போலொரு மாது – கொஞ்ச
வயதுதான் நல்ல சாது – விசு
வாசமேவும் ஐவ்வாது – அன்று
மாலை வீசியே எனது மாலையே கொண்ட
மாதவி என்னும் போது"

இந்தப் பாடலிலும் அணிகளின் சிறப்பு அபாரமாயுள்ளது. "திருமங்கை போலொரு மாது" என்பது திருமகள் போன்ற ஒரு பெண் எனப்படுவதால் உவமையாகின்றது. "மாலை வீசியே மாலையே கொண்ட" என்பதில் முதலில் வரும் மாலை, பூமாலையைக் குறித்தும், இறுதியில் வரும் மாலை, மயக்கத்தைக் குறித்தும் நிற்கின்றது. இதனை மடக்கணி எனலாம். "மடக்கு" என்பது பாடலின் ஓரடியில் அல்லது அடிகளில் ஒரு சொல் வேறுவேறு இடங்களில் வந்து வேறுபட்ட பொருள்களை உணர்த்துவதாகும். "இனியார் இனியார் நமக்கு" என்பதில் இனியார், இனியவர் என்ற கருத்துக்கள் புலப்படும். அதே போல் "அரவம் அரவம் அறியும்" என்பதிலும் "அரவம்" என்பது இருபொருள் தந்துள்ளது. "கொஞ்ச வயது" என்பது குறைந்த வயது, கொஞ்சக் கூடிய வயது ஆகிய பொருள்கள் தந்து சிலேடையணியாகத் திகழ்ந்துள்ளது ஒரு சொல்லானது இரு பொருள்களைத் தருவதாகவோ, அதற்கு மேற்பட்ட பொருள்களை உணர்த்துவதாயின் அது "சிலேடை" எனப்படும். அதேபோல் "மாதவி என்னும் போது" என்பதில் போது என்ற சொல் சிலேடையாக வந்து பொழுதில் பூ ஆகிய இரு பொருள்களை உணர்த்தியுள்ளது.

" அத்திக்காய் காய் காய்
ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்காய் காயாதே
என்னைப்போல் பெண்ணல்லவோ?"

எனும் கண்ணதாசனின் பாடலில் அத்திக்காய், ஆலங்காய், இத்திக்காய் போன்ற காய்கள் ஒருபுறமும், அந்தத்திக்கில் எறிப்பாயாக, விஷம் போல வருத்துகின்ற, இந்தத்திக்கிலே எறிப்பா யாக என்னும் பொருள்கள் மறுபுறமாயுமமைந்து சிலேடையாகச் சிறப்பித்துள்ளன. அதேபாட லில் வரும் அவரைக்காய் (அவரிடம் சென்று எறிப்பாயாக), கோவைக்காய் (பெண் ணிடம் எறிப் பாயாக), மாதுளங்காய் (பெண்ணின் உள்ளத்திலிருக்கும்), அவரைக்காய் (அவரிடம் சென்று எறிப்பாய்), பேச்சுரைக்காய் (பேச்சு உரைப்பாய்), கொற்றவரைக்காய் (தலைவரிடம் சென்று எறிப்பாயாக) என்றவாறு சிலேடையணி சிறப்பாய் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை"

இத்திருக்குறட்பாவில் ஒரே சொல் அடுத்தடுத்து வந்த போதும் வெவ்வேறு பொருளை உணர்த்துகின்றது. இது பின்வருநிலையணி எனப்படும். துப்பார்- உண்பவர், துப்பு - உணவு, துப்பாக்கி - உணவாக்கி எனப்பொருள் தந்துள்ளது. இதே போன்று நாலடியாரில் காணப்படும்

" வைகலும் வைகல் வரக்கண்டு – வைகலை
வைகல்மேல் வைத்து "

எனவரும் வெண்பாவிலும் "வைகல்" என்பது பலபொருள்களை உணர்த்தி வந்துள்ளது.

" நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

இந்த அப்பர் தேவாரத்தில் கடம்பன், கடம்பை, கடன் என்பன அடிதோறும் வந்துள்ளன. இதேபோல் வாலி எழுதிய சினிமாப் பாடலொன்றில்

" பால் தமிழ்ப்பால் என்னும் நினைப்பால்
வரும் தித்திப்பால்"

எனப் "பால்" என்ற சொல் பின்வருநிலையணியாக அமைந்து பல பொருள்களைத் தந்துள்ளது.

"பார்த்தேன் சிரித்தேன் பக்கம் வரத் துடித்தேன்
நல்ல மலைத்தேன் இதுவென மலைத்தேன்"

எனத் தொடங்கும் கண்ணதாசன் பாடலில் இறுதியெழுத்துக்கள் ஒரே விதமாய் வந்து இயைபுத்தொடையாய் அமைந்துள்ளன. "மலைத்தேன்" என்பது சிலேடையாகும். மலையிலிருக்கும் தேனையும், பிரமித்தலையும் குறிக்கும். பாடலடியின் இறுதி எழுத்துக்கள் ஒன்றிவருதல் இயைபு ஆகும். 11 எழுத்துக்கள் இயைபாக வரக்கூடியன.

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா"

இப்பாடல் வரிகளில் "டா" என்னும் எழுத்து மூன்று இடங்களில் அமைந்து இயைபுத் தொடையாய் வந்துள்ளது. "ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்பதில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதால் எதுகையணி இடம்பெற்றுள்ளது. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதிலும் எதுகை காணப்படுகின்றது. பாடலடிகள் தோறும் அல்லது சீர்கள் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருதல் எதுகை எனவும், முதலாம் எழுத்து ஒன்றிவருதல் மோனை எனவும் கூறப்படும். "கானகத்தே காதலியைக் காரிருளிற் கைவிட்ட" என்பதில் மோனையணி வந்துள்ளது. அதேபோல் "பாதகனைப் பார்க்கப் படாதன்றோ" என்பதிலும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஆகாய வீதியில் அழகான வெண்ணிலா
அலங்காரத் தாரகையோடு அசைந்தூஞ்சல் ஆடுதே!
ஆனந்தம் தேடுதே"

இப்பாடலடிகள், சீர்களில் மோனையணி வந்துள்ளது. இதேபோல் "கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்குச் சொந்தமில்லை" என்பதிலும் "க" என்னும் முதலெழுத்து மூன்று சீர்களில் வந்து மோனையணியாய் விளங்குகின்றது.

" காதல் எந்தன் மீதில் என்றால்
காதில் இனிக்கிறது – தாலி
கட்டிக்கொள்ளத் தட்டிக் கழித்தால்
கவலைப் படுகிறது – மனசு
கவலைப் படுகிறது "

இப்பாடலடியில் எதுகை, மோனை அணிகள் கலந்துள்ளன.

" நிலவு ஒரு பெண்ணாக உலவுகின்ற அழகோ?
நீரலைகள் இடம்மாறி நீந்துகின்ற எழிலோ?"

இப்பாடலடிகளில் உருவக அணியும், எதுகையணியும், மோனையணியும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். மேலும் அழகோ, எழிலோ என்பவற்றில் ஓகாரம் இடம்பெற்று இயைபுத் தொடையாகவும் விளங்குகின்றது. "நீ வண்ணக் கரும்பு, நான் உண்ணும் எறும்பு, இன்னும் ஏன் இந்த குறும்பு" என்பதில் "பு" எழுத்து ஒன்றி இயைபும், இரண்டாம் எழுத்து ஒன்றி நின்று (எறும்பு, குறும்பு) எதுகைத் தொடையையும் உணர்த்தியுள்ளன.

கவிஞன் அல்லது புலவன் தான் சொல்லவந்த கருத்தை இயற்கையாக நிகழும் சம்பவத்தின் மீது ஏற்றித் தன் குறிப்பைக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும். கம்பரமாயாணம் கைகேயிசூழ்வினைப் படலத்தில் பொழுது விடிகையில் நடக்கும் கோழி கூவுதல், புள்ளொலித்தல் விண்மீன்கள் மறைதல் முதலானவற்றைக் கம்பர் கதையோடு பொருத்திக் கூறியிருப்பார்.

" தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாம்
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய் – வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக்குலம்"

இந்த வெண்பாவில் இயற்கையாக நிகழும் சேவல் கூவுவதைக் கதையோடு பொருத்திய புகழேந்தியார், தமயந்தியின் துயர்கண்டு சூரியனை விரைவாக வருமாறு கோழிக்குலம் அழைப்பதாகத் தற்குறிப்பேற்ற அணியைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால் பாடலில் "தஞ்சிறகாம் கையாள்" என்பது உருவக அணியாகவும், "வெய்யோனை வாவுபரித் தேரேறி வாவென்றழைப்பன போல்" என்பது உவமையணியாகவும் விளங்கினாலும் பாடலின் உட்பொருள் தற்குறிப்பேற்றமாய்க் காணப்படுகின்றது.

"விண்ணில் நான் இருக்கும் போது
மண்ணில் இந்த நிலவு ஏது?"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வானத்துச் சந்திரன் சிறுகுழந்தையைப் பார்த்துக் கேட்பதாகக் கவிஞர் மருதகாசி பாடுவது தற்குறிப்பேற்றமாகும். குழந்தையின் அழகும் ஒளிர்வும் இதற்குக் காரணங்கள்.

"அன்னங்கூட அவளிடத்தில் வந்து நடை பயிலும்
ஆடற்கலை இலக்கணத்தை அறியவரும் மயிலும்
இன்னிசையைப் பாடம் கேட்க எண்ணிவரும் குயிலும்
இயற்கையெல்லாம் அவளிடத்தில் இனிமையிலே துயிலும்"

இந்தப் பாடலடிகளில் உயர்வு நவிற்சியணி இடம் பெற்றுள்ளது. அதேபோல் "ஆயிரங்கண் போதாது வண்ணக்கிளியே குற்றால அழகை நாம் ரசிப்பதற்கு வண்ணக்கிளியே" என்பதும் உயர்வு நவிற்சியாகும்.

"நல்லமனைவி நல்ல பிள்ளை நல்ல குடும்பம் தெய்வீகம்
கடமை மறந்து உரிமையிழந்து தவறும் இல்லம் அலங்கோலம்"
"கிழக்கு வெளுத்தடி கீழ்வானம் சிவந்ததடி
கதிரவன் வரவுகண்டு கமலமுகம் மலர்ந்ததடி"

இந்தவரிகளெல்லாம் இயல்பாக அமைந்திருப்பதால் இயல்பு நவிற்சியணியாக (தன்மைநவிற்சி) விளங்குகின்றன.

"இது குழந்தை பாடும் தாலாட்டு
இது இரவு நேர பூபாளம்
இது மேற்கில் தோன்றும் உதயம்
இது நதியில்லா ஓடம்"

இப்பாடல் வரிகள் முரண் தொடை அல்லது அணிக்குரியதாகும். நேர்மாறான விடயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது முரணனி, வேற்றுமையணியும் இது போன்றதாயினும் ஒன்றுக் கொன்று வேறுபாடு உள்ளது என்பதை வலியுறுத்திக்காட்டுவது "அவன் உருவத்தால் பெரியவன் ஆனால் உள்ளத்தால் சிறியவன்" என்பது எதிரும்புதிருமான பொருள் தந்துள்ள வேற்றுமை அணியாகும்.

"ஆளை ஆளைப் பார்க்கிறார்
ஆட்டத்தைப் பார்த்திடலாமல்
ஆளை ஆளைப் பார்க்கிறார்"

என்பதில் ஆளைப் பார்ப்பவர் ஆட்டத்தைப் பார்க்காதவர் என்ற வேற்றுமைப் பொருள் தொக்கி நிற்கிறது.

"சத்தியந் தவறாத உத்தமர் போலவே நடிக்கிறார்
சமயம் பார்த்துப் பலவகையிலும் கொள்ளையடிக்கிறார்
பக்தனைப் போலவே பகல் வேஷம் காட்டிப்
பாமரமக்களை வலையினில் மாட்டி"

இப்பாடலடிகளிலும் சத்திய உத்தமராக, பக்தராக விளங்குபவர், கொள்ளையடிப்ப வராக, வேஷதாரியாக விளங்கும் எதிரும். புதிருமான வேற்றுமையைக் காண முடிகிறது. வஞ்சப்புகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணி என்பது மறைமுக ஒருவரைப் புகழ்வது போல் இகழ்வதாகும். பொய் சொல்பவனை அரிச்சந்திரன் என்பது போலாகும். வஞ்சப்புகழ்ச்சி அணி என்பது மறைமுகமாக ஒருவரைப் புகழ்வது போல் இகழ்வதாகும். பொய் சொல்பவனை அரிச்சந்திரன் என்பது போலாகும்.

"ஆசையில் இவரொரு பூனை – இதை
அறிந்தே சொன்னேன்டி மானே"

இதுவும் வஞ்சப் புகழ்ச்சிதான்.

"அழியாது காதல் நிலையான தென்று
அழகான கவிபாடுவார்– வாழ்வில்
வளமான மங்கை பொருளோடு வந்தால்
மனம்மாறி உறவாடுவார் – ஏழை
விதியோடு விளையாடுவார்.

இப்பாடலிலும் வஞ்சப் புகழ்ச்சியணியும் உள்ளது. வேற்றுமையணியும் காணப்படு கின்றது.

இதுவரை சுருக்கமாக எடுத்துக் காட்டிய அணிவகைகள் யாவும் தமிழிலக்கியப் பெரும் பரப்பில் சிறுதுளிகளான சினிமாப் பாடல்கள், அணிச்சிறப்புக்களைத் தன்னகத்தே கொண் டுள்ளன. அவை இனிமையும் இன்பமும் பயப்பன. அவற்றை நுணுகியாராய்ந்து நாம் இரசிக்க வேண்டும்.

"தேனார் குவையில் திரண்டது போலே
தேடும் உறவின் விருந்தது போலே
காணா தெதையோ கண்டது போலே
கண்கள் தேடாமலே – ஆஹா
இதுவென்ன ஆனந்தமோ?"

இதில் உவமையணிச் சிறப்பைக் காண முடிகிறது. இதுபோல் ஏராளம் உவமை, உருவக, அணிகள் தமிழ்த் திரைப் பாடல்களில் காணப்படுகின்றன. அந்த இலக்கியக் கடலில் மூழ்கி நன்முத்துக்களைப் பொறுக்கி நாம் மகிழ்ந்து பயன்பெற வேண்டும்.

கலாநிதி செ. திருநாவுக்கரசு
ஆசிரிய கலாசாலை ஒய்வுநிலை விரிவுரையாளர்.

ஆசையற்ற தன்மைக்கு ஆசைபடுதல் வேண்டும். ஏனெனில் ஆசையே அனைத்துத் ததுன்பங்களுக்கும் காரணம். ஆசையே முக்திக்கு முட்டுக்கட்டையாக உள்ளது.

– அன்னை ஸ்ரீ சாராதாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலைத்தேடி

வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. வேர்த்து விறுவிறுத்து ஆங்காங்கே ஓட்டைகள் விழுந்த பூட்டன் காலத்துக் குடையைப் பிடித்துக் கொண்டு ராமையா மிகவேகமாக வந்து கொண்டிருந்தார். இன்னொரு கையில் கால் கிலோ அரிசிப் பொதியும் இருந்தது. செம்புழுதிகள் காற்றில் கலந்து வந்து ராமையாவின் பழுப்பு படிந்த வேட்டியில் விழுந்தது. அதனை உதறியவாறு இன்னும் வேகமாக வந்து கொண்டிருந்தார்.

மட்டக்களப்பில் குமாரபுரம் என்ற ஊரில் தான் ராமையாவும் அவர் மனைவி பாக்கியமும் மிகவும் ஏழ்மையான நிலையில் வாழ்கின்றார்கள். நாலு ஆண் பிள்ளைகளையும் வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டனர். ஒரு மகள் பக்கத்து ஊரில் மணம் முடிந்து இருக்கிறாள் "வெளிநாட்டுக்கு போனவங்கள் திரும்பவே இல்ல" என பாக்கியம் அடிக்கடி புலம்புவாள்.

ராமையா தனது குச்சில் வீட்டை வந்தடைந்தார். அமருவதற்குத் திண்ணை கூட இல்லை. தேங்காய் மட்டையைக் கவிழ்த்தி விட்டு அதன் மீது அமர்ந்து கொண்டார். "பாக்கியம்... கொஞ்சத் தண்ணி கொண்டா. கெதியா வா!" எனக் குரல் கொடுக்க பாக்கியம் வெளியே வந்தார். அரிசியை வாங்கிக் கொண்டு "இஞ்ச பார்! இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை பிள்ளை வாறாள். அவளுக்கும் சோறு சமைக்கனும்...இந்த கால்கிலோ என்னத்த காணும்" என தனது பொக்கை வாயால் கூறினார்.

"என்னட்ட காசும் இல்ல... காளியம்மன் கோணில்ல அன்னதானமாம். நான் போய் வாங்கிட்டு வாறன். அரிசியை வை நாளைக்கு சமைக்கலாம். முதல் எப்பன் தண்ணி கொண்டா போ"

"தண்ணி இல்ல.....தண்ணியும் அள்ளிக் கொண்டு சோத்தையும் வாங்கிக் கொண்டு வாங்கோ.நான் போத்தலை சைக்கிளில கட்டி விடுறன். பொறுங்கோ தேத்தண்ணீ கொண்டாறன்" விறு விறு என உள்ளே போனார்.

சிரட்டையில் சாம்பலைக் கிள்ளி மண்ணெண்ணெய் விட்டு வைத்து அதற்கு மேல் நேற்றுப் பொறுக்கிய சுள்ளிவிறகை வைத்து அடுப்பை மூட்டினா. ஒரு நெழிந்த பாத்திரத்தில் தண்ணி ஊற்றினாள். சிறிது நேரத்தில் தண்ணீர் கொதித்தது. ஒரு குப்பிக்குள் தேயிலை போட்டு சுடுதண்ணீர் ஊற்றி...ஆற்றி விட்டு பனங்கட்டியும் கொண்டு வெளியே வந்து ராமையாவுக்கு கொடுத்தா..

"அம்மா...அப்பா...அம்மா.." என அழைத்தவாறே உள்ளே வந்தாள் மேகலா."ஆ....என்ர செல்லம்...என்ர குட்டி...என்ர முத்து...(அழுகை)...என்ர குஞ்சுதான் எங்கள பாக்க வரும். மற்றதுகள் போன போக்குதான்...." என தனது குறையைச்சொல்லி அழுது கொண்டா "என்னம்மா... நடவுங்க உள்ள சும்மா...அழுதிட்டு... குளுசை எல்லாம் ஒழுங்கா போடுறீங்களோ...? என கேட்டுக் கொண்டாள்.

"ஓமம்மா...போடுறன். சரிவா தேத்தண்ணி தாறன். அதென்ன கையில?" என தனது பற்களற்ற வாயால் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட! மறந்திட்டன். இந்தாங்கம்மா சாப்பாடு வரேக்க வீட்டசெய்திட்டு வந்தனான்" என பொதியை பாக்கியத்திடம் கொடுத்தாள்.

"அப்பா எங்க போறீங்க?"

"இல்லையம்மா..தண்ணி இல்ல அது தான் ஊர் எல்லையில ஒரு கிணறு இருக்கு. அங்க போய் எடுத்துட்டு வாறன்."

"சரி போய்ட்டு கெதியா வாங்கோ. கவனம்!

நேரம் பகல் இரண்டு மணியானது. மேகலா வீடு திரும்புவதற்கு ஆயத்தமானாள். "அம்மா...போய்ட்டு வாறன். அவர் ஊருக்கு போக வேணும் எண்டவர். அப்பா வந்தா சொல்லுங்கோ"

"ஓம் குஞ்சு பாத்து போகவேணும்" என மேகலாவை முத்தமிட்டு அனுப்பி வைத்தாள்.

"இந்த மனுசன இன்னும் காணேல. ஒரு வேளை பனமரத்தோட்டத்துக்க கள்ளு குடிக்கிறதோ"

நேரம் மாலை ஆறு மணி. பாக்கியம் விளக்கை எரித்துக்கையில் கொண்டு படலையை சாத்தி விட்டு ராமையாவைத் தேடிச் சென்றாள். தவளைகள் தமது எல்லா சக்தியையும் ஒன்றினைத்து கத்திக் கொண்டிருந்தன.

ஊர் எல்லை வரை சென்று தேடினா. ஆனால் மனுசன காணவே இல்லை. "கடவுே..காளியாத்தா..இந்த மனுசன் எங்க போட்டார்?" என புலம்பியவாறே வீட்டை வந்தடைந்தாள்.

நேரம் இரவு ஒன்பது மணியானது. ராமையாவை நினைத்த படியே அயர்ந்து போனாள்.

சூரியன் உதயமாகிக் கொண்டிருந்நது. பாக்கியம் எழுந்து வீடு, முற்றத்தைக் கூட்டினாள். பக்கத்து வீட்டு ராமசாமி உள்ளே வந்தார்." ஏன்..பாக்கியம் ராமையா இல்ல?

"அந்த மனுசனத் தானே காணேல்ல! நேற்று தண்ணி எடுத்துக் கொண்டு வாறன் எண்டு போனவர் அதுக்கு பிறகு வரேல்ல நான் என்ன செய்ய? இவரை எங்க போய் தேடுவன்...இந்த வயசான காலத்தில."

"பாக்கியம்! ராமையா எப்ப இங்க வந்தாலும் உடன என்னட்ட வரச் சொல்லு. சுளையா மூவாயிரம் வாங்கினலர்.

"என்ன!... ஐயா..!கடவுளே... இதென்ன புதுக்கதை" என கீழே அமர்ந்து விட்டா.

"புதுசில்ல அடிக்கடி ஐநூறு, முந்நூறு எண்டு வாங்குறவர்" என கோபத்துடன் கூறினார். இவ்வளவு காச வாங்கி அவர் என்ன செய்திருப்பார் என்பது தான் பாக்கியத்தின் மனதில் பதில் தெரியாத கேள்வியாய் இருந்தது.

இரண்டு பசு மாடுகளுடன் உள்ளே வந்தார் ராமையா.

"அட பாவி மனுசா! சொல்லாம கொள்ளாம எங்க போனி?" என கோபத்தோடு கேட்டா...

"பாக்கியம்! ராசாமிட்ட கொஞ்ச கொஞ்ச காசா வாங்கி சேத்து வைச்சனான். அதுதான் அதையும் கொண்டு நேற்று பசுமாடு வாங்கப்போனன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பஏதுக்கு! இந்த மாடுகள். மேகலாக்கு மாடுகளெண்டாலே பயம்" இந்த விறுத்தத்தில இப்ப மாடு. அதுக்கு சாப்பாடு வாங்க இனி எவ்வளவு காசு தேவை! கடவுளே...."

"அதையும் ராமசாமிட்ட கேட்பம். மேகலா பிறகு மாசம் மாசம் கொஞ்ச கொஞ்ச காசா கொடுப்பாள்" என சாதுவாக கூறினார்.

அனல் சுட்டது போல "ஓகோ!... அவள நம்பியே இத வாங்கினீர்?.... அவள் நீ காசு புடுங்கவே பெத்தனீ? அவளின்ர புருஷனுக்குத் தெரிஞ்சா அவள் இந்தப் பக்கமே இல்ல... கடவுளே எப்பதான் விடியுமோ!"

சிறிது காலம் சென்றன. ராமசாமியிடம் மறுபடியும் காசு வாங்கி காளை மாட்டையும் வாங்கினார் ராமையா.

பாக்கியத்திற்கு கோபம் அதிகமாகிக் கொண்டே போனது. அவள் கோபப்படுவதும் சரிதான். சாகிற காலத்தில எதுக்கு இதெல்லாம்!

மேகலாவின் கணவர் ரஞ்சன் வேலை விஷயமாக வெளியூர் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மேகலா அம்மா வீட்டுக்கு வர ஆயத்தமானாள். நேரம் மாலை ஐந்து மணி.

மேகலா துணிக்கடையைக் கண்டதும் அம்மாவின் ஞாபகம் வந்தது. உடனே ஒரு துணியை வாங்கிக் கொண்டு தனது பையினுள் போட்டுக் கொண்டு சென்றாள்.

வரும் வழியில் ஒரு வியாபாரி "பனங்கிழங்கு அஞ்சுரூபா.. வாங்கோ! வாங்கோ.. மலிவு ..முடியப் போகுது" என கூச்சலிட்டான்.

பனங்கிழங்கைப் பார்த்த மேகலாவுக்கு அப்பாவின் ஞாபகம் வந்தது.

"அப்பா பனங்கிழங்கை துண்டு துண்டா வெட்டி உப்பு மிளகு குத்திப் போட்டு தருவார். நல்லா இருக்கும். இண்டைக்கு இரவு மாமரத்துக்கு கீழ இருந்து சாப்பிடும்" என நினைத்து பூரிப்படைந்தாள்.

"தம்பி ஒரு பத்து பனங்கிழங்கு தாங்க... காசைப் பிடியுங்கோ" காசைக் கொடுத்து விட்டுகிழங்கை வாங்கியபடி நடந்தாள்.

அன்று அமாவாசை தினம். எங்கும் கும்மிருட்டாக இருந்தது. கரன்ட் வேறு இல்லை.

காளை மாட்டை அவிழ்த்து படலையோடு கட்டினார் ராமையா மேகலா "அம்மா.." என அழைத்தவாறு படலையைத் திறந்தாள். காளை மாடு தனது சீவிய கொம்புகளால் மேகலாவின் வயிற்றைப் பதம் பார்த்தது!

"ஐயோ அம்மா" என்றவாறே கீழே வீழ்ந்தாள். பாக்கியம் ஓலமிட்டவாறு ஓடிவந்தாள். இரத்த வெள்ளத்தில் கிடந்தாள் மேகலா. கூடவே இரத்த வெள்ளத்தில் துணியும் விழுந்தது! பனங்கிழங்குகள் சிதறின!!!!!..........

**லக்ஷாயினி ஜெயக்குமார்**

**தரம்:-11E**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகிழந்த பறவை

அது... கார்மேகம் வானமெங்கும் மெலிதாக திரையிட்டு கொண்டிருந்தது. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது அவள் மனதைப்போல அவ்விருளை வேகமாக ஊடறுத்துக் கொண்டு சென்றது கயல்விழியின் கார். இரை தேடச்சென்ற பறவைகள் தம்மிடம் திரும்புகின்றன. ஆனால் அவளோ மனதில் சிறு சலனத்துடன் கார்க்கண்ணாடியூடாக இயற்கையின் அழகை பார்க்கிறாள். அவளுக்கு அக்காட்சி மகிழ்ச்சியை அளித்திருக்க வேண்டும். ஆனால் முகத்தில் மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கவில்லை. எதையோ இழந்தது போல எங்கேயோ செல்கிறாள். எதையோ தேடி...

கயல்விழியின் முகம் இன்று புதிதாக இருந்தது. என்றுமில்லாதவாறான சாந்தம். அவளின் இந் நிலையிலும் அவள் அழகாகவே இருந்தாள். ஆனால் அவளைப் பார்ப்பவர்கள் இன்று அவள் அழகை உணர்வதை விட அவளின் சோகத்தையே முழுவதுமாக உணர முடிந்தது. நான் நினைக்கிறேன். அவள் யாரோ ஒருவரை தேடிச்செல்கிறாள் என்று.

யார் அவள்....அவள் கயல்விழி. பெயருக்கு ஏற்றமாதிரி அழகிலும் சிறந்தவள். படிப்பிலோ கெட்டிக்காரி. அவள் வசிக்கும் ஊர் வந்தோரை வாழவைக்கும் விவசாய பூமி அவ்வூரில் அவள் நடுவர்க்க குடும்பத்தை சேர்ந்தவள். பாரதியின் புதுமைப்பெண் அவள் பற்றி இவ்வளவும் தான் என்னால் கூற முடியும். மெதுவாக சுழலும் கடிகாரத்தை திருப்பிப் பார்த்தபடி "இன்டைக்கு என்ன நேரமே போகாதாம்". என்று ஒரு சிறு புன்னகையுடன் மனதில் எண்ணுகிறாள்.

"அந்தக்காலம் நான் ஏ.எல் முடித்து விட்டு பதிலுக்காக காத்திருந்தேன். அக்காலப்பகுதியில் பக்கத்து கிராமப்பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கற்பிக்கச்சென்றேன். வழமைபோல் அன்றும் அதிகாலை எழும்பும்போதே என்னுள் ஓர் இனம்புரியாத மகிழ்ச்சி அதற்கான காரணம் பாடசாலை சென்ற பின்தான் தெரிந்தது.

பாடசாலையில் எல்லோரும் யாரோ ஒரு புது சேர் வாரார் என்று பரபரப்பாக கதைத்துக் கொண்டார்கள். அவரைப்பார்க்கவும் என்மனதில் ஒரு ஆவல் வந்தது. அவர் வந்துவிட்டார். அவர் பெயர் மலரவன் என ஒரு ஆசிரியர் அழைத்ததிலிருந்து அறிந்து கொண்டேன்.

மாநிறம், கண்கள் பிறரைக் கவரும் காந்தத்தன்மையை கொண்டிருந்தன. மிகவும் நேர்மையான ஒரு மனிதன் தேவையேற்பட்டால் கதைப்போம் எந்த உதவி தேவையானாலும் என்னிடம் வந்து கேட்பார் அந்த இயல்பு எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

"கயல்விழி... கயல்" யாரோ என்னை அழைப்பது போல் இருந்தது. எனக்குத்தெரியும் அந்த இனிமையான குரல் மலரவனுடையது என்று. சட்டென திரும்பி "என்ன சொல்லுங்கள்" என்றேன். தயங்கித்தயங்கி ஏதோ சொல்ல வந்துவிட்டு ஒன்றுமில்லை என்று தலைகுனிந்த படியே நின்றார் மலரவன்.

மலரவனின் அந்நிலை என்னுள்ளே திகைப்பையும் ஆச்சரியத்தையும் அள்ளி வீசியது. ம்ம் பரவாயில்லை சொல்ல வந்ததை சொல்லுங்கோ ஏதும் பிரச்சனையோ என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"    அப்படியில்லை ஆனால் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன்." என்றான் சிறு புன்னகையுடன்

"என்னிடம் என்ன சொல்லப்போகிறார்" என்று அடிமனதில் எண்ணிக்கொண்டு "சொல்லுங்கோ" என்றேன் என்னைப்பார்த்துக்கொண்டே கயல் உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உங்களுக்கும் பிடித்திருந்தால் உங்கள் வீட்டில் வந்து நான் கதைக்கிறேன் என்றார்

இவனுக்கு என்னவாயிற்று திடிரென்று ஏன் இப்படி கதைக்கிறான். என்று மனதில் அந்தக் கணம் நினைத்துக் கொண்டேன் . "எனக்கு சொல்லத் தெரியவில்லை" என்ற பதிலுடன் மலரவனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன். எனக்கும் மலரவனை மிகவும் பிடித்திருந்தது. காரணம் பெண்ணை மதிக்கும் இயல்பு பிற ஆடவரிடமிருந்து மலரவனை எனக்கு தனித்துவமாக காட்டியது. பல தடவைகளில் மலரவன் மீதான அன்பு தலையெடுத்தாலும் கட்டுப்படுத்தியிருக்கிறேன் ஆனால் இன்றோ.... யாதும் அறியாக்குழந்தை போல நிற்கிறேன்.

அம்மாவிடம் இதைப்பற்றி கேட்கலாம் என் சற்று பேச்சுக்கொடுத்தேன். எதை எதையோ பேசி கடைசியில் மலரவன் பற்றி கதை திரும்பியது.

"அம்மா நீங்கள் மலரவனைப்பற்றி என்ன நினைக்கிறியள் என்றேன் மெதுவாக " ம்ம் நல்ல பெடியன் தான். ஏன் உனக்கு அவனைப்பற்றி என்று வெடுக்கெனக் கேட்டார் என் தாய். "அவர் இன்று என்னிடம் வந்து என்னை பிடிச்சிருக்கு" என்று சொன்னார் என்றேன்.

உடனே அனல் பறக்க, கோபத்துடன் "பிள்ளை அவையள் சாதி குறைஞ்சவை என்று ஊரார் கதைக்கினம் அந்த ஆசை உன்மனதில் இருந்தால் அதை இப்பொழுதே கிள்ளி எறிந்து விடு" என்று கூறினார்.

அம்மாவின் வார்த்தைகளே என் காதில் மீண்டும் மீண்டும் விழுந்து நெருடலை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. ஆனால் அம்மாவின் சொல்லைத்தட்ட முடியுமா அம்மா கூறியதை என்னால் ஆமோதிக்க தான் வேண்டியிருந்தது. அன்று இரவு எனக்கு தூக்கமே வரவில்லை. என்னுள்ளே இருந்த நெடுநாள் கனவு இன்று முளையிலே வேரோடு கிள்ளியெறியப்பட்டது போல் ஓர் உணர்வு. இந்த முடிவுக்கு என்னால் இணங்க முடிந்ததே தவிர என் மனமோ அதைச் செய்யாதே உனக்குப்பிடித்ததை மட்டும் செய் என சொல்லியது.

ஆனால் இன்று வந்த ஒருவனுக்காக என் தாய்தந்தையை தூக்கியெறிவது எப்படி என்னை எவ்வளவு காலம் கஷ்டப்பட்டு விவசாயம் செய்து படிக்க வைத்தார்கள். விரும்பியதை வாங்கிக் கொடுத்தார்கள். எனக்குப் பிடித்ததை வாங்கிக்கொடுப்பவர்கள் இன்று மறுக்கிறார்கள். பாரதியின் வழியில் வாழ வேண்டும் என நினைக்கும் இப் பேதையின் வாழ்வில் இவ்வளவு தர்மசங்கடம் கல்லூரிக் காலங்களில் பெண்ணடிமைத்தனம் சாதியை ஒழிக்க வேண்டும் என விவாதித்து திரிந்த எனக்கு இப்படியொரு நிலையா? விதி என்னுடனும் விளையாடுகிறது போலும்.

"நாளை மலரவனுக்கு உங்களைப்பிடிக்கவில்லை" என்று சொல்லிவிடுவோம். ஆனால் காரணம் கேட்டால் என்ன சொல்வது எனக்கு ஆதரவாய் இருக்கும். என்னுடன் அடிக்கடி விவாதித்தும் என் தவறை சுட்டிக்காட்டுவதற்கு என் வாழ்க்கையில் இனியார் வரப்போகிறார்கள். என்னிடமிருந்த இரண்டு சிறகுகளையும் யாரோ பிடுங்கி எறிந்த போல ஓர் உணர்வு என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்மனதில். அன்று இரவு முழுவதும் எனக்கு தூக்கமே வரவில்லை. அடுத்த நாள் பொழுது மலர்ந்தது. ஆனால் என்னிடமோ ஒரு தெரிவில்லை. பாடசாலைக்கு செல்லவோ பிடிக்கவில்லை. விவாதித்தும் என் தவறை சுட்டிக்காட்டுவதற்கு என் வாழ்க்கையில் இனியார் வரப்போகிறார்கள். என்னிடமிருந்த இரண்டு சிறகுகளையும் யாரோ பிடுங்கி எறிந்த போல ஓர் உணர்வு என் ஆழ்மனதில். அன்று இரவு முழுவதும் எனக்கு தூக்கமே வரவில்லை. அடுத்த நாள் பொழுது மலர்ந்தது. ஆனால் என்னிடமோ ஒரு தெளிவில்லை. பாடசாலைக்கு செல்லவோ பிடிக்கவில்லை.

எனினும் கடமைக்கு செல்ல வேண்டி இருந்தது. பாடசாலை சென்றேன். மலரவன் அன்று நேரத்திற்கே வந்து விட்டார் போலும் என்னை அவர் புன்னகையால் வரவேற்றார். அந்த புன்னகையே என்னுள் சிறு தடுமாற்றத்தை கொண்டு வந்தது. என்ன சொல்லபோறீங்கள். என்றார். நான் ஒன்றுமே தெரியாதவள் போல் எதுக்கு என்றேன். நான் நேற்று உங்களிடம் ஒரு விடயம் பற்றி கதைத்தது உங்களுக்கு ஞாபகம் இல்லையோ? என்றார் குழந்தைத்தனமான முகத்துடன்.

ஆம் நான் யோசித்தேன். ஆனால் உங்களை எனக்கு ஒருபோதும் பிடிக்கவில்லை. நான் உங்களை அப்படி நினைக்கவும் இல்லை என்றேன் என் பொய்யான நாவால், ஒன்றுமே பேசாமல் போய்விட்டார். அன்றிலிருந்து என்னுடன் கதைப்பதையே குறைத்துக் கொண்டார். என்ன நடந்தாலும் காலங்கள் எமக்காக காத்திராது. நாம் அதற்கு தகுந்தது போலத் தான் நடக்க வேண்டும். வருடங்களும் இம்மென்னும் முன்னே கழிந்தது. இச்சம்பவம் நடக்கும் வரை நான் அன்று செய்தது தவறு என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் இன்று என்னால் இதை தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. நண்பியின் திருமண வைபவத்திற்கு சென்றிருந்தேன். எங்கேயோ பார்த்த முகம் ஆம் அவன் தான் அவனை என் வாழ்வில் மறக்கமுடியுமா? என் வாழ்வின் வசந்தத்தையும், இருளையும் ஒரே நேரத்தில் அள்ளித்தந்தவன்.

“இவன் தானே மலரவன். என்னதான் பணம் இருந்தாலும் குணம் இல்லாதவனை இச்சமூகம் ஏறெடுத்து பார்க்காது. இவனுக்கு என்ன குறை. ஆனால் குறைந்த வயதிலேயே மதுவுக்கு அடிமையாகிவிட்டான். அதற்குபிறகு உபாத்திய வேலை கிடைத்தும் திருந்தினானா? அதுவும் இல்லை குடியும் கும்மாளமும் அதுவும் எத்தனை பெண்களின் வாழ்வை நாசமாக்கியிருந்தான்” என்று அந்நிய மனிதர்கள் இருவர் தம்முள்ளே உரையாடிக் கொண்டிருந்தனர்.

இவர்கள் கதைப்பது உண்மைதானா? எனக்கு மலையே இடிந்து விழுவது போல இருந்தது. அன்று என் அன்னை என் முடிவை தடுத்து நிறுத்தாமல் விட்டால் என்வாழ்வை நாசமாக்கியிருப்பான். என் வாழ்வு என் இலட்சியம் சின்னாபின்னமாய் இருக்கும். அன்று என் அன்னை செய்தது தவறு என்றெண்ணி எவ்வளவு கவலைப்பட்டிருந்தேன். ஆனால் இப்போ?...

மதுவை நான் தொடமாட்டேன். மதுவைப் பற்றி அறியாதவன் போல் என்னிடம் நாடகமாடினானே. அன்று என் கண்ணில் கதாநாயகனாக தோன்றியவன் இன்று என் முன்னே நயவஞ்சகனாக தெரிந்தான். மேலும் அவர்களின் உரையாடல் தொடங்கியது. சரி அதை விடுவம். இனியாவது அவன் திருந்தட்டும் என்று ஒரு நல்ல பெண்ணாய்ப்பார்த்து கல்யாணம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தால் அவளை ஒழுங்காய் வைத்துப் பார்த்தானே பாவி அவளை எவ்வளவு கொடுமைப்படுத்தினான். கல்யாணம் சீதனத்திற்காக செய்வதைப்போல் அந்த வறுமையான குடும்பத்தில் எவ்வளவு இலட்சங்களை வாங்கிக்குவித்தான். சரி வாங்கியாச்சு. அவளை நல்லா வைத்து பார்ப்பம் என்றில்லாது சீதனம் குறைவாகத்தான் வாங்கினவனாம் அதனால் கொடி பெறுமதியாய் செய்யேலயாம். அதனால் திரும்ப அதை அழித்துச் செய்ய காசு வங்கி வா என்று அந்தப்பெண்ணை கண்ணீரும் கம்பலையுடனும் தாய்வீட்டிற்கு அடித்துக்கலைத்தானே.

"அதையும் மன்னிக்கலாம் ஆனால் முழுமாத கர்ப்பிணிப்பெண்ணை குடித்துவிட்டு எவ்வளவு துன்புறுத்தினான். அதை தட்டிக்கேட்க போனவர்களையும் சுடு சொல்லால் காயப்படுத்தினானே. இவனும் ஒரு மனிதனா? பாவம் பெற்ற தாயையும் முதியோர் இல்லத்திற்கு அனுப்பிவிட்டு தானே சொத்தை தனித்து அனுபவிக்கின்றானே: சரி இவனைப்பற்றி கதைப்பது எமக்குத்தான் பாவம் அதுவும் இந்தத் திருமண வீட்டில் வாங்கோ போய் மணமக்களை ஆசிர்வதித்துவிட்டு வருவோம் "என அப்பால் நகர்ந்தார்கள்.

நான் ஒருநொடி இடிந்தே போய்விட்டேன். இன்றும் இரண்டாவது தடவையாக என் இரு சிறகுகளை யாரோ வேகமாக கழற்றுகிறார்கள். மீண்டும் அதை நான் போடாதபடி. அவன் என்னைக்கண்டு விட்டான். கண்டவுடன் தலைகுனிந்தபடி நின்றான் நான் அவனை இப்பொழுது நிமிர்ந்தே பார்க்கவில்லை.

பாரதியின் கருத்துக்களை தானும் மதிப்பதாக, பெண்களை ஆணுக்கு நிகராக எப்பொழுதும் நினைக்கிறேன் என்று அன்று அவன் கூறிய வார்த்தைகள் நினைவுக்குவரவே சிறு புன்னகையுடன் கடந்து என் காருக்குள் அமர்கிறேன். சிறகுகள் இல்லாத குஞ்சுப்பறவையாக தாயிடம் நோக்கி போக எண்ணி.

எனது கைப்பையில் சிணுங்கும் தொலைபேசியை எடுத்து "ஹலோ" என்றேன் எதிர்முனையில் அம்மா "கயல்விழி நேரமாகிவிட்டது. கெதியா வீட்ட வாங்கோ" என்றாள் அன்னை. ஆம் வந்து கொண்டிருக்கின்றேன். உங்களை உடனே பார்க்கவேணும் போல இருக்கு அம்மா என்றேன். இப்ப வீட்டுக்கு வந்துடுவீங்க தானே என்று சொல்லவும் நான் தொலைபேசியையும் முடக்க நேரம் சரியாக இருந்தது.

கார் சட்டென நிறுத்திக் கொண்டது. அவள் அப்பொழுது தான் தன் நினைவுக்கு வந்தாள். இப்பொழுது அவளுக்கு வாழ்வின் யதார்த்தம் விளங்கியது. மீண்டும் அவளுக்கு சிறகுகள் முளைக்க தொடங்கும். ஆனால் அது மீண்டும் ஒடிப்போவதில்லை ஏன் என்றால் அவளுக்கு கூட இருந்து பக்குவத்தை வழங்குவது அவள் அன்னை...

நிருபா சிவகுமார்
13A உயிரியல் பிரிவு [2019]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பின் கணங்கள்

**பாத்திரங்கள்**
**நூலகர் இருவர்**
**தாத்தா**
**பிள்ளைகள் மூவர்**

(திரை விலகும் போது மேடையில் உள்ளோர் வாழ்வில் பற்றின்றிய நிலையில் விரக்தியுற்று மனிதத் தன்மையினை இழந்தவர்களாக உறைநிலையில் இருப்பார்கள் இவர்களிடையே ஓர் வயோதிபர் முகிழ்த்தெழுந்து அவ் இளம் சந்ததியினரைத் தட்டி எழுப்பி நீங்கள் முயற்சியுடன் கற்றால் முன்னேற முடியும் என்பதாக திரை தன்னை விலக்கிக் காட்டுவதாக பாடல் அமைகின்றது.)

இயற்கை அன்னை கொடுத்த வரம்
நாம் காணும் இன்பமம்மா
இந்த மண்ணின் வளங்களெல்லாம் - அவள்
எமக்குத் தந்த வரங்களம்மா.

இயற்கை..........

நூலக நிலையம் எம்மிடம் உண்டு
கணனி வகைகளும் எம்மிடம் உண்டு
நாடிச் செல்லுங்கள் நூலகம் நோக்கி
உங்களை வளர்த்திடச் செல்லுங்கள்

இயற்கை..........

காலத்தை விணாக்கவேண்டாமே - உங்கள்
காலத்தை பொன்னாக மாற்றுங்கள்
ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து - நிதம்
ஒன்றாகக் கூடி வாழ்த்திடுங்கள்

இயற்கை..........

இந்தப் பாடலின் ஒலி மெல்ல மெல்ல கிழிறங்க அனைவரும் மேடையை விட்டு அகலுகின்றனர். இந்த நேரத்தில் மேடையின் மத்திய பகுதியில் நூலகத்தின் தொகுதி ஒன்று காட்சிப்படுத்தப்படுவதாக அமைகின்றது. நூலகத்தில் வேலை செய்யும் நபர்கள் இருவர் நிற்பதாக அமையலாம்.

நூலகர் 1 :- ஐயா! வாங்கோ!
நீங்கள் வந்தாத்தான் இந்த நூலகத்திற்கு வெளிச்சம் வந்தது போல இருக்கும். ஏன் கனகாலமாய் உங்கள இங்கால காணேல்லை?

தாத்தா :- (சிரித்தவாறே) என்ன? என்னைச் சின்னப் பிள்ளை எண்டு நினைச்சிட்டிரோ? "எனக்கு வயதாகிப் போட்டுது" எண்டு வீட்டில கண்டபடி வெளிக்கிட்டு திரிய விடுறாங்களில்லை. ஆனால்... என்னால இங்க வராம இருக்க முடியல்ல. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ர சின்ன வயது முதல் இங்க வந்து போறன் இது நாங்கள் தலைமுறை தலைமுறையாய் வாழ்ந்த கோயிலப்பா!. (பெருமுச்சு) இங்கதான் எங்கட

அறிவுப் பசியைத் தீர்த்துக் கொண்டம். (எனக் கூறியவராக கற்பனையில் மிதக்கின்றார். தான், தன்ர பிள்ளைகள் என அவர்கள் ஒவ்வொருவரும் ரீச்சர், டொக்டர்,எஞ்சினியர், எக்கவுண்டன் எண்டு நாலுதிக்குகளிலும் நல்லாய் வாழும் வாழ்க்கையை எண்ணி மகிழ்கின்றார். நினைவில் இருந்து மீண்டவராக )

பிள்ளையள் எல்லோரும் நாலுதிக்குகளில் இருந்தும் நல்லாட்சி புரியுதுகள் தங்கட தங்கட குடும்பங்களோட, சந்தோஷமா வாழுதுகள்! (தன் நினைவுகளை மீட்டயவராக)

அரும்பும் வயதினிலே
நூலகமாம் கோயில் தன்னில்
கால் பதித்த ஞாபகம்
முதல் பதிப்பு என்று சொன்னால்
புத்தகத்தைத் தொட்டுப் பார்த்த ஞாபகம்
தொட்டுத் தொட்டுப் பார்த்து நிதம்
கற்றவைகள் ஏராளம்
படிப்பு இனிப்பாக
என் வாழ்க்கையும் இனிப்பாகியது
அன்று பதித்த கால்கள்
இன்று வரை ஓயவில்லை
அதன் பெறுபேறே இன்று - நான்
ஒய்வு பெற்ற அதிபராம்.

நூலகர் 2 :- உங்கட கதையைக் கேட்க எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு!, நாங்கள் வளங்களைப் பயன் படுத்தாத மா பாவிகள் ஆகிட்டோம்!. வெளி நாட்டு மோகம் கொண்டு மாக்களாய் திரிகின்றோம்.

நூலகர் 1 :- ஓம் இப்ப எங்களுக்கு மிருகக் குணம் கூடிப் போச்சு பிள்ளையள் நூலகப் பக்கமே வாரதில்லை வந்தாலும் அறிவுக்கு எட்டியதை படிக்காமல் மனதுக்கு எட்டியதை மட்டும் எட்டி எட்டிப் பாக்குதுகள் (பெருமுச்சு).

நூலகர் 2 :- தங்கட தங்கட காலத்தில என்னதான் செய்யப் போகுதுகளோ! எங்கட காலத்தில் நாங்கள் இப்பிடியே இருந்த நாங்கள்?

தாத்தா:- காலம் ஒருநாளும் மாறுதில்லை நாங்கள் தான் காலத்திற்கு ஏற்றாற் போல மாறிக் கொண்டு போக வேணும். இப்ப, தொழில் நுட்பக் காலமெல்லே, பெரிய பெரிய நூலகங்களை ஒரு சிறிய பெட்டிக்கை அடக்கி வைச்சிருக்கினும் . அதுக்குள்ள மனிசரின்ட ஐம்புலன்களும் அடங்கிப் போச்சுது.

நூலகர் 1 :- ஓம் ஐயா நீங்கள் சொல்லுறது சரி. என்ன இருந்தாலும் புத்தகங்களைத் தொட்டுத் தடவி, ஒவ்வொரு ஒற்றையாய் புரட்டி எடுத்து, எழுத் தெழுத்தாய் வாசிக்கு மாப்போல வராது.

தாத்தா :- ஓம்... நீர் சொல்லுறது மிகச் சரி. அதாலதான் நான் இங்க வாரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகர் 2 :- ஐயா! இங்கள் முதுமைக்கு இலக்கணமாகனவர். அதாலதான் முதுமையை அனுபவப் பெட்டகம் எண்டு சொன்னாங்களோ? ஆபிரிக்காவில் ஒரு பழமொழி இருக்கு "முதியவர் ஒருவரின் இறப்பில்

மாபெரும் நூலகம் ஒன்று எரிகிறது " எண்டு அது உங்களுக்கும் பொருந்துது. எங்கட சின்னஞ் சிறுசுகளுக்கு உங்கட அனுபவங்கள் கிடைக்க வேணும்.

தாத்தா :- அது சரி... பாவம் இப்பத்தையான் சின்னஞ் சிறுசுகள் எங்கட காலத்தில் கன நேரம் ஒய்வா இருந்தம் ஆனா இப்பத்தையான் பிள்ளையள் ஒய்வில்லாமல் ஓடிக் கொண்டிருக்குதுகள் அப்ப எங்களுக்கு பள்ளிக் கூடங்களில் நூலகப் பாடம் எண்டு ஒண்டு இல்லை. இண்டைக்கு நூலகப் பாடம் எண்ட ஒண்டு இருந்தும் கூட பிள்ளையள் நூலகங்களுக்கு மனமாய் போறதில்லை பாவம் அதுகளுக்கு மனதுக்கை நெருக்கீடு! இந்தப் பாடங்களைத்தான் ஒரு "ரிலைஸ்சுக்கா பாடமாய்" பாக்குதுகள்.

நூலகர் 1 :- இதாலதான் நாங்கள் இண்டைக்கு "வாசிப்பு பழக்கம் குறைஞ்சு போட்டுது" எண்டிட்டு நூலகவாரம், "வாசிப்புவாரம்" எண்டு கொண்டாடுகிறம்.

தாத்தா :- ஓம்... எல்லாத்தையும் கொண்டு ஆடுறம். மனிசர் உள்ள மட்டும் ஆடித்தான் முடிக்க வேணும். இதுதான் உலக நியதி. எங்கட நடராஜரும் தில்லையில் ஆடிக் கொண்டு இருக்கிரேல்லே!

நூலகர் 2 :- அறிவுப் பசியை தீர்க்கிறது மட்டுமோ நூலகத்தின்ர வேலையா இருக்கு?

தாத்தா :- ஆலமரத்தில் இளைப்பாற கன இடத்தில் இருந்து கன வகையான குருவிகள் வருகிற மாதிரி நூலகத்திற்கும் கன இடங்களில் இருந்தும் பல மட்டங்களில் கல்வி கற்ற அறிஞர்கள் வருவினம் எல்லாக் கடலும் சங்கமிக்கிற இடம் போல அறிவுக் கடல்கள் சஙடகமிக்கும் இடமாக நூலகத்தைக் கொள்ளலாம். கிணத்தில் தண்ணி அள்ள அள்ளத் தான் நீர் ஊறுறது போல புத்தகங்களை எடுத்து வாசிக்க அறிவும் வளரும் அத்தோட வருகின்றவர்களோடு பழகிறதிற்கான சந்தர்பங்களும் கிடைக்கும் அப்படிப்பட்ட நல்ல மனிசருடன் சேர்ந்து பழக வாய்ப்புக் கிடைக்கும் போது நல்ல பண்புகளைப் பெற்று நல்ல மனிசராக வாழப் பழகிக் கொள்ளலாம் அதனால்தான் "ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும் " எண்டு வள்ளுவர் சொல்லுறார். (இந்த நேரத்தில் பிள்ளைகள் சிலர் வருகின்றார்கள்.அவர்கள் தாத்தாவை காணத் தவறவில்லை அவர்களில் ஒருவன்.)

பிள்ளை 1 :- தாத்தா எப்பிடி இருக்கிறீங்கள்?

பிள்ளை 2 :- நீங்கள் இங்க வரக் கற்றுத் தந்ததால நாங்க "நல்ல மாக்ஸ்" எடுக்கிறம்.

பிள்ளை 3 :- வகுப்பில் செல்லுற வேலைகளை நாங்களே புத்தகங்களிலே தேடி செய்யிறம் இந்த நூலகம் எங்களுக்கு பெரிய உதவியான ஒரு இடமாகய் இருக்குது.

தாத்தா :- கெட்டிக்காரப் பிள்ளையள் (முதுகில் தட்டிக் கொடுக்கிறார்) இப்ப உங்கட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பு "போட்டிப்பரீட்சை" அதால நீங்கள் முன்னுக்கு வரவேண்டும் எண்டா நீங்க சுயமாக தேடிப்படிக்கவேணும் அப்பதான் வகுப்பில படிச்சதை விட மேலதிகமான அறிவு கிடைக்கும். "மற்றவனுக்கு கிடைக்காது உங்களுக்கு கிடைக்கும்" முயற்சி செய்யுங்கள் பலன் கிடைக்கும்.

பிள்ளை 3 :- ஓம் தாத்தா போன தடவை நீங்க சொன்ன மாதிரி படிச்சதால எனக்கு நல்ல "மாக்ஸ்" கிடைச்சது எல்லாற்ற பாராட்டையும் பெற்ற. மனதுக்கு சந்தோஷமாய் இருந்துது.

தாத்தா :- ஆ.... அப்படியா கெட்டிக்காரப் பிள்ளை வாசிப்பு உன்னை உயர்ந்த மனிதனாக்கும். நல்லாவாசி... நீ நல்ல வாசி ஆவாய். (தாத்தா தன்னை மறந்தவராக ஒரு கணம் சிலையாகின்றார்) பிள்ளையள் எங்கட ஊர் படிப்பில மட்டுமில்லை பண்பிலையும் உயர்ந்து நிண்டது. பிள்ளையள் நீங்கள் நல்ல புத்தகங்களை தேடி வாசிக்கேக்க அறிவு பசிக்கு விருந்து கிடைக்கிறது மட்டுமல்ல நண்பனாகவும் அவை இருக்கும். பொழுதும் நல்ல பொழுதாய் அமையும். பிள்ளைகள்

1,2,3 :- தாத்தா உங்கட விருப்பம் போல நாங்கள் நல்லா படிச்சு, நல்ல பிள்ளைகளாக வீட்டுக்கும் நாட்டுக்கும் சேவை செய்யும் மனிதர்களாக வாழுறதுதான் எங்கட இலட்சியம்.

(தாத்தாவின் உள்ளம் பூரிப்பால் நனைகின்றது. கண்கள் கலங்குகின்றன. வழிகாட்டி இருத்தால் வழிபிறக்கும் என்ற எண்ணத்தோடு பிள்ளைகளை அணைக்கிறார் இவர்களின் உரையாடல்களை நூலகர்களும் கேட்கத் தவறவில்லை. உள்ளப் பூரிப்பால் அனைவரும் சிலையாகின்றனர்.திரை தன்னைக் காட்டி மூடுகிறது இந்த நேரத்தில் சில மாற்றங்களுடன் ஆரம்பத்தில் பாடப்பட்ட பாடல் மீண்டும் அனைவரது காதுகளிலும் கேட்கின்றது)

இயற்கை அன்னை கொடுத்த வரம்
நாம் காணும் இன்பம்
இந்த மண்ணின் வளங்களெல்லாம் – அவள்
எமக்குத் தந்த வரங்களம்மா

நூலக நிலையம் எம்மிடம் உண்டு
கணணி வகைகளும் எம்மிடம் உண்டு
நாடிச்செல்லுவோம் நூலகம் நோக்கி
எங்களை வளர்திட சென்றிடுவோம்
இயற்கை....

காலத்தை வீணாக்க மட்டோமே – எங்கள்
காலத்தை பொன்னாக மாற்றுவோம்
ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து – நிதம்
ஒன்றாகக் கூடி வாழ்ந்திடுவோம் – நாம்
நல்ல மனிசராய் வாழ்ந்திடுவோம்

**திருமதி. யசோதரா சாந்தகுமார்**
**நாடகமும் அரங்கியலும்**
BA(Hons) Dipin Education



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் அவர்கள் தனது மகனின் தலைமை ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்.**

**அன்பான ஆசிரியரே!**

அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்ல. அனைத்து மனிதர்களும் உண்மையானவர்கள் அல்ல என்பதை எனது மகன் தெரிந்து கொள்ளவேண்டும். ஆனாலும், மனிதர்களில் அயோக்கியர்களுக்கு இடையில் உண்மையான கதாநாயகர்களும் இருக்கிறார்கள் என்பதையும், சுயநல அரசியல்வாதிகளுக்கு இடையில் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் பகைவர்களுக்கு இடையில் நண்பர்களும் இருக்கிறார்கள் என்பதனையும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அவனுக்குப் பொறாமைக்குணம் வந்துவிடாமல் கவனமாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். மௌனமாக ரசித்துச் சிரிப்பதன் இரகசியத்தை அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து சுருங்கிக்கொள்வது கோழைத்தனம் என்பதைப் புரியவையுங்கள். புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். அதேவேளையில் இயற்கையின் அதிசயத்தை இரசிக்கவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள். வானில் பறக்கும் பறவைகளின் புதிர் மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும், பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும் ரசிப்பதற்கு அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

ஏமாற்றுவதைவிடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதைப் பள்ளியில் அவனுக்குக்கற்றுக் கொடுங்கள். மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும், தனது சுயசிந்தனை மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். மென்மையான மனிதரிடம் மென்மையாகவும், முரட்டு குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். கும்பலோடு கும்பலாய்க் கரைந்து போய்விடாமல் எந்தச் சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின்படி சுயமாகச் செயற்படும் தைரியத்தை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும். எனினும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்றுப் புழுகர்களைக் கண்டால், எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். தனது செயற்றிறனுக்கும், அறிவாற்றலுக்கும் மிக அதிக ஊதியம் கோரும் சாமர்த்தியம் அவனுக்கு வேண்டும். ஆனால் தனது இதயத்திற்கும், தனது ஆன்மாவிற்கும் விலை பேசுபவர்களை அவன் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. பெருங்கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலைநாட்டத் தொடர்ந்து போராடுவதற்கு அவனுக்கு நம்பிக்கை கொடுங்கள். அவனை அன்பாக நடத்துங்கள். ஆனால் அதிக அன்பும் செல்லமும் காட்டி சார்ந்திருக்க வைக்கவேண்டாம். ஏனென்றால் கடுமையான தீயில் காட்டப்படும் இரும்பு மட்டும் தான் பயன்மிக்கதாக மாறுகிறது.

தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அதே வேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அவன் தன்மீதே மகத்தான நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போதுதான் மனித குலத்தின் மீது அவன் மகத்தான நம்பிக்கை கொள்வான்.

இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான். இதில் உங்களுக்குச் சாத்தியமானதையெல்லாம் கற்றுக் கொடுங்கள். அவன் மிக நல்லவன், எனது அன்பு மகன்.

**அன்புடன் லிங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது இதயம் நிறைந்த நன்றி

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு" (குறள் 110)

- எம் தமிழ் ஆரம் இதழின் மலர்வுக்கு ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கிய பெருந்தகைகள்
- மலரிற்கு ஆக்கங்கள் தந்து தம் உள்ளத்திறன்களை வெளிக்கொணர்ந்த கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள்
- இன்றைய விழாவில் பிரதம விருந்தினராக, சிறப்புவிருந்தினராக வருகை தந்து எம்மை மகிழ்வித்த பெரியோர்கள்
- முதற்பிரதி, சிறப்புப் பிரதிகளைப் பெற்றுத் தமிழ் மன்றத்திற்கு வளம் சேர்த்த அனைத்து உள்ளங்கள்
- நயப்புரை தந்த விரிவுரையாளர்
- விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெரு மக்கள்
- எம்மை வழிகாட்டிய அதிபர், பிரதி அதிபர், உப அதிபர்கள், ஆசிரியப் பெருந்தகைகள்
- தமிழ் ஆரம் சஞ்சிகை வெளிவருவதற்கு வழிகாட்டியாக விளங்கும் ஆசிரியர்கள்
- கலை நிகழ்வுகளை வழங்கியோர்.
- எமது ஆக்கங்களை நேர்த்தியான முறையில் வடிவமைத்துத் தந்த குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினர்
- புகைப்படங்களை அழகுற எடுத்துதவிய எஸ் எஸ் புகைப்படக் கலைஞர்கள்
- எமது சஞ்சிகையின் வெளியீட்டுக்குத் தோள் நின்று உழைத்த எம் கல்லூரித் தோழிகள்
- இன்று இவ் விழாவில் கலந்து சிறப்பித்தவர்கள்
- தமிழ் ஆரம் வெளிவருவதற்கு எம்முடன் கைகோர்த்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

சுபம்

தமிழ் மன்றம்,
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Premier
TRAVELS & TOURS

*"Traveling tends to magnify all human emotions"*



**No. 242,**
**Stanly Road,**
**Jaffna**

Tel: 021 221 5050
077 581 1470
077 323 9648

e-mail: premiertravelsjaffna@gmail.com

Following Face Book

# K.S.T
# TEX

முகூர்த்த பட்டு
சாறிகள்,
குர்தாக்கள் மற்றும்
பட்டு வேட்டிகள் அனைத்து
ரெடிமற் ரகங்களும்
கிடைக்கும்.

இல. 157/18, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.இல: 021 222 9470

# ஸ்ரீ சிவாஞ்சனா
ஜுவல்லறி

தங்கப்பவுண் நகை வியாபாரம்



SRI SIVANCHCHUNA
JEWELLERY
Manufacture in Gold Jewels

149A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Tel : 021 222 9227,
077 711 0220

# Tip Top Rich
## Textiles & Garments
# டிப் டொப் றிச்



"உங்கள் இல்லங்களில் நடைபெறும் நிகழ்வுகளுக்கும்
அனைத்துக்கும் தரமான, நவீன வடிவங்களில்
ஆடை வகைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்"

இல:293,
மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : 021 567 0650
077 3277899
021 2220650


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS FROM.......!

**KAJAMUGAN HARDWARE**

**கஜமுகன் ஹாட்வெயர்**

கட்டிடப் பொருட்கள், லங்கா கம்பி, பைப் வகைகள், சீமெந்து மெச்சன் மெஸ் வலைகள், பெயின்ற் வகைகள் மற்றும்

Pepsi Soda & Accessories,

அனைத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரே இடம். . . .

Tel : 021 222 7144,
FAx: 021 222 23658
E-mail- Kajamuganhw@hotmail.com

147,149 Stanley Road,
Jaffna.

147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புக்களில்
தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

Sharanga Nagai Madam

**சாரங்கா நகைமாடம்**

துரிதமான பணப் பரிமாற்றத்திற்கு ....

**Sharanga Money Exchange (Pvt) Ltd.**

. 157/1, Kasthuriyar Road, Jaffna
: 021 2226972, Fax : 021 2228869
-mail :sarankajewellere@yahoo.com
Web :www.sarangajewellers.com

**கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்**

**KEERTHIKA TEXTILES**

சிறுவர் சிறுமியர்க்கான திருமண, பூப்புனித நீராட்டு விழா பட்டுச்சாறிகள் பாட்டிபுறக், மொடன் புறோக் வகைகள் புதிய வகை சல்வார், லெகங்கா, மஸ்தானி ஆடைகள் ஆண், பெண் அரச, தனியார் ஊழியர்களுக்கான ஒரே நிற ஆடைகள்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

Palaly Road,
Urumpirai Junction,
Urumpirai.
T.P: 021 223 1107

**NEW CITY**

*Dealers in T.V Radio, Refrigeratar, Watch&etc....*



எலக்ரோனிக் பொருட்கள்
தரமான மணிக்கூடுகள்
கல்குலேற்றர்கள்
விற்பனையாளரும்
மணிக்கூடுகள் திருத்துனரும்









No. 91, Kasthuriyar Road,
Jaffna.
0212221012, 077 875 9532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய
ஒரே இடம்

# நிசாந்தன் களஞ்சியம்

# Nishanthan Srores



ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தி.

Aadiyapatham Road,
Thirunelvely Junction.

# லக்ஸ்மி பவான் உணவகம்

# LAXMI PAVAAN

தரமான சைவ உணவு வகைகளை
யாழ் நகரில் பெற்றிட
தலை சிறந்த ஸ்தாபனம்




யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

## Diploma in Spoken English



DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

**Courses**

- Certificate in English
- Diploma in English
- Spoken English
- IELTS Life Skills
- IELTS

Call for more information
0777 17 35 17

DMI
COMPUTER EDUCATION

**DMI COMPUTER EDUCATION**

New

# மலாயன் கபே

# MALAYAN CAFE

# A first class Vegetarian hotel







36,38, Grand Bazaar,
Jaffna. Srilanka.
T.Phone: 021-2222373

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தமாகவும் சில்லறையாகவும் தரமான பொருட்களைக்
கொள்வனவு செய்ய நாடவேண்டிய ஒரே இடம்



# தேனு களஞ்சியம்



&



# THENU SUPER MART

இல 29, நவீன சந்தை, உட்புறம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
021 4921185, 077 9872002
021 222 6013



இல 50, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

---

## SIVAKANESAN TEXTILES



Wholesale
&
Retail



Dealers in Textiles
Specialist in
Wedding Sarees



# 41, Grand Bazaar,
Jaffna.
Tel : 021 222 2063

---



இராஜபுரம்

## இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்

## RAJASWARIE TEXTILE



திருமணப் பட்டு புடவைகள்,
சல்வார்கள், பட்டுவேட்டிகள்
சிறுவர்களுக்கான ஆடைகள்

105,Power House Road,
Jaffna .
021 222 6953

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J/JAFFNA HINDU LADIES COLLEGE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Guru Printers - Thirunelvely.
021 222 8266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org